# களத்தில்

திருவள்ளுவர் ஆண்டு 2026 கும்பம் 22 (10.03.1995) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவருஞ் செய்தித்தாள் அன்பளிப்பு: 40p


### விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனுடனான சமாதான முயற்சியே வெற்றிபெறும் - சிறீலங்காவிற்கான அமெரிக்கத் தூதுவர்

"தலைவர் பிரபாகரனும் சிறீலங்கா அரசும் இணைந்துகொள்ளும் ஏககால சமாதான முயற்சிகளினாலேயே இந்நாட்டில் அமைதி உருவாகும்; பகைமைத் தவிர்ப்பின் மூலம் இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு ஏற்படுத்த மேற்கொள்ளப்படும் முயற்சிகள் பாராட்டுக்குரியவை. இதனை நாம் வரவேற்கின்றோம்"என சிறீலங்காவுக்கான அமெரிக்கத் தூதுவர் ரெற்சிற்றா சோபா.

(தொடர்ச்சி: 14 ஆம் பக்கம்..)

# சிறீலங்காவின் ஒருதலைப்பட்ச நடவடிக்கை; அமைதி விரும்பிகளிடையே அதிர்ச்சி

சிறீலங்கா அரசு இருதரப்புப் பேச்சுவார்த்தையின் மூலம், இலங்கைத்தீவின் தேசிய இனமுரண்பாட்டிற்கு அரசியல் தீர்வு காணப்போவதாகக் கூறிக்கொண்டு, ஒருதலைப் பட்சமான நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுவருகின்றது. இதனால் இணக்கப்பாடுகள் மூலமான உடன்பாடுகளை அமுலாக்குவதன் மூலம் இன உறவாடல்களை வலுப்படுத்தி, மோதல் தவிர்ப்பைப் போர் நிறுத்தமாக மாற்றி, இலங்கைத் தீவின் ஆயுத நிலைப்பட்ட தேசிய இனங்களுக்கிடையிலான முரண்பாட்டிற்கு அரசியற் தீர்வைக்கொண்டுவந்து, அமைதியை ஏற்படுத்தலாம் என முனைந்துவரும் அமைதி விரும்பிகள் அனைவரும் பேரதிர்ச்சிக்குள்ளாகியுள்ளனர்.

சிறீலங்கா சனாதிபதி செயலகத்திலிருந்து மாசி 24 ஆம் நாள் இரவு வெளியான அறிக்கை சங்குப்பிட்டி, ஆனைமிறவுப் பாதைகளை ஒரே நேரத்தில் போக்குவரத்துக்குத் திறப்பதெனச் சிறீலங்கா அரசு முடிவு செய்துள்ளதாகவும் இதன் பொருட்டு இவ்விரு பிரதேசத்திலும் உள்ள முகாம்களிலிருந்து சிறீலங்கா இராணுவத்தினர் 500 மீற்றர் பின்வாங்கிச் செல்ல முடிவாகியிருப்பதாகவும் தெரிவித்தது.

ஆனால், மாசி 26 ஆம் நாள் சிறீலங்காப் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைச் செயலகம் விடுத்த

தொடர்ச்சி: 14 ஆம் பக்கம்.....



## விடுதலைப் புலிகளைத் தவிர வேறு எவருடனும் பேச முற்படுவது சிறுபிள்ளைத்தனம்

- பரராசசிங்கம் பகர்கிறார்

விடுதலைப் புலிகளைத் தவிர வேறு எவருடனும் பேசி, நெருக்கடிக்குத் தீர்வு காணலாம் என நினைப்பது சிறுபிள்ளைத் தனமாகும் என, மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம் தெரிவித்துள்ளார்.

களுவாஞ்சிக்குடியில் நடந்த கூட்டமொன்றில் அவர் மேலும் தெரிவிக்கும்போது, கடந்த பன்னிரண்டு ஆண்டுகாலமாக நடந்துவருகின்ற போரின் காரணமாக வடக்கு – கிழக்கில் விலைமதிக்கமுடியாத பல்லாயிரக்கணக்கான மனித உயிர்கள், கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான சொத்து இழப்புக்கள் ஆகியவற்றிலிருந்து விடுபட்டு, வடக்கு – கிழக்கை மீண்டும் கட்டியெழுப்பவேண்டுமானால், அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்கள்

தொடர்ச்சி: 14ம் பக்கம்....

## கண்காணிப்புக் குழுவைக் கண்காணிக்கும் சந்திரிகா அரசு

■ஒப்பந்தப்படி வெளிநாட்டுக் கண்காணிப்புக் குழுவினை நடைமுறையில் இயங்க இன்னமும் அனுமதிக்கவில்லை

கண்காணிப்புக் குழு செயற்பாடுகள் தாமதமடைவது குறித்து, விடுதலைப் புலிகள் இயக்கம் உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகின்றது, தாமதநிலைக்கு விடுதலைப் புலிகள் எவ்விதத்திலும் பொறுப்பல்லவென்பதை வலியுறுத்துகின்றோம் என்று கடந்த மாசிமாதம் 10 ஆம் நாள் அரசியற்றுறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் அவர்கள், சிறீலங்கா சனாதிபதியின் செயலாளர் பாலபட்ட பென்டிக்கு எழுதிய கடிதத்திற் குறிப்பிட்டுள்ளார். அக்கடிதத்தின் முழு விபரமும் பின்வருமாறு:–

உங்களது 10 பெப்ரவரி 1995 ஆம் திகதியிடப்பட்ட கடிதம் கிடைக்கப்பெற்றது. நன்றி. வெளிநாட்டுப் பிரதிநிதிகளைக்கொண்ட கண்காணிப்புக் குழுவின் செயற்பாடு தாமதம் அடைவதைக் குறித்து, விடுதலைப் புலிகள் இயக்கம் உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகின்றது. இவ்விடயத்தில் தாமதநிலை காணப்படுவதற்கு, விடுதலைப் புலிகள் எவ்விதத்திலும் பொறுப்பில்லை என்பதை வலியுறுத்துகின்றோம். மோதல் தவிர்ப்பு முழுமையாக அமுற்படுத்தப்படுவதற்கு இக் கண்காணிப்புக்குழு எவ்வளவு விரைவில் செயற்படுகின்றதோ அவ்வளவுக்கு நல்லது என நாம் எண்ணுகின்றோம். இவ்விடயத்தில் அரசின் போக்கும் அணுகுமுறையுமே இத்தாமதத்திற்குக் காரணமென நாம் உணர்கின்றோம். கடந்த 14.01.1995 அன்று நடைபெற்ற கடைசிச் சுற்றுப் பேச்சுக்களின் போது, மோதல் தவிர்ப்பு உடன்படிக்கை தொடர்பாக வரையறைகளைக் கலந்துரையாடி இருந்தோம். இவ்விடயம் தொடர்பாகத் தெளிவான வரையறைகளை அறிவிக்கும்படியும் கூறினோம். அத்துடன், 15.01.1995 இல்

தொடர்ச்சி: 14 ஆம் பக்கம்.....

## ஒரு தலைப்பட்ச அறிவிப்பு; சமாதானப் பேச்சுவார்த்தைக்கான கதவடைப்பா?

**மக்கள் போக்குவரத்துக்குப் பெரும் அச்சுறுத்தலாக இருக்கும் இராணுவ முகாமை அகற்றி பூநகரிப் பாதையைத் திறந்து விடும்படி, விடுதலைப் புலிகளும் வெகுசன மக்கள் ஒன்றியங்களும் விடுத்த கோரிக்கையை அரசு உதாசீனம் செய்துவிட்டு முகாமை அகற்றாமல் பூநகரி, ஆனையிறவுப் பாதைகளை மக்கள் போக்குவரத்துக்குத் திறந்து விட்டிருப்பதாக, ஒருதலைப்பட்சமான முறையில் அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளது. நான்காம் கட்டப் பேச்சுவார்த்தை பற்றி எதுவும் குறிப்பிடாது, இரு பாதைகளும் திறக்கப்பட்டுள்ளன என அறிவித்தல் கொடுத்து பெரும் பிரச்சாரமும் செய்து வருகிறது. அதனால் அரசின் இத்தகைய ஒரு தலைப்பட்ச அறிவிப்பு, சமாதானப் பேச்சிற்கான கதவடைப்பா? என்ற கேள்வியையும் எழுப்பியுள்ளது. இப்பாதை திறப்பு விடயமாக, தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள், 25.02.95 இல் சனாதிபதி சந்திரிகாவிற்கு எழுதிய கடிதத்தினை மூன்றாம் பக்கத்திற் காண்க.**

## பாதுகாப்புப்படை அதிகாரிகளிடமிருந்து உயிருக்கு அச்சுறுத்தல்

*சனாதிபதி சந்திரிகா*

கடந்த 17 ஆண்டுகாலமாக இலஞ்ச ஊழல்களில் ஈடுபட்ட பாதுகாப்புப்படை அதிகாரிகளிடம் இருந்து, தனது உயிருக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவற்றிக்கு அஞ்சி தப்பியோடுவதற்கு தாம் தயாரில்லை என்றும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.

அத்தனகல போகொடசித்தமகர பொதுநூலகத்தைத் திறந்து வைத்து உரையாற்றிய சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா, " தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினரின் அச்சுறுத்தல்களைவிட, மோசமான அச்சுறுத்தல்கள் இந்த ஊழல்மிக்க அதிகாரிகளினாலேயே எனக்கு விடுக்கப்பட்டுள்ளது. கடந்த 17 ஆண்டுகளாக அதிகாரம் செலுத்திவந்த அதிகாரிகளை ஒரு சில மாதங்களில் திருத்துவது என்பது கடினமாகும்" எனவுங் கூறியுள்ளார்.

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

## புலிகளிடம் சரணடையுங்கள்

"தற்போதைய மோதல் தவிர்ப்புச் சூழ்நிலையைப் பயன்படுத்தி, விடுதலைப் புலிகளிடம் சரணடைந்து, வழமையான வாழ்க்கைக்குத் திரும்புமாறு புளொட் உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்வதாக," புலிகளிடம் சரணடைந்துள்ள இரண்டு புளொட் உறுப்பினர்களும் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் உள்ளூர்ச் செய்தியாளர்களைச் சந்தித்தபோது, அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர். மேலும் அவர்கள் "விடுதலைப் புலிகள் எமக்குப் பாதுகாப்புத் தந்துள்ளனர். எம்மை நன்றாகப் பராமரிக்கின்றனர். நாங்கள் தொடக்கத்தில் உங்களைப்போல் பயந்துதான் இருந்தோம். இப்போது இங்கே எதற்கும் பயப்படத்தேவையில்லாத சூழ்நிலை எமக்கு ஏற்பட்டுள்ளது.

உங்களுக்கு ஓர் எதிர்காலம் வேண்டுமானால், புலிகளிடம் சரணடையுங்கள். புலிகள் எமது எதிர்காலத்துக்காக வேலைவாய்ப்புக்களைக்கூடத் தரவுள்ளனர்.

இந்த மோதல் தவிர்ப்பு சூழ்நிலையைப் பயன்படுத்தி, உங்கள் எதிர்காலத்தை சுபீட்சமாக்குங்கள்.

எங்களைப் புலிகள் பலாத்காரப்படுத்தி, இவ்வாறெல்லாம் கூறும்படி செய்யவில்லை. நாங்கள் இன்று செய்தியாளர்கள் முன்னிலையில் சுதந்திரமாகவே இவ்வழைப்பை விடுக்கின்றோம்".

இவ்வாறு சரணடைந்த புளொட் உறுப்பினர்கள் ஏனைய புளொட் உறுப்பினர்களுக்கு விடுத்த அழைப்பில் கேட்டுள்ளனர்.

# தப்பி வந்தோர் தகவல்



"சமாதானப் பேச்சுவார்த்தைகளைக் குழப்பியடிப்பதே "புளொட்" குழுவினரின் முதன்மையான குறிக்கோளாக இருக்கின்றது. அவர்கள், மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் அமுலுக்கு வந்தபோதிலும், விடுதலைப் புலிகளைக் கண்டால் கண்டதும் சுட்டுக்கொல்லும்படி, எங்களுக்குக் கடுமையான உத்தரவைப் பிறப்பித்திருந்தனர்". இவ்வாறு சரணடைந்த புளொட் உறுப்பினர்களான மட்டக்களப்பைச் சேர்ந்த திலகர் ரஞ்சன் (வயது 22), திருமலையைச் சேர்ந்த இரத்தினசிங்கம் ரவீந்திரராஜா (வயது 18) ஆகிய இருவரும் அண்மையில் வவுனியாப் பகுதியில்வைத்து ஆயுதங்களுடன் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தபின் அண்மையில் யாழ். நகரில் செய்தியாளர்களுக்குச் செவ்வியளித்தபோது மேற்கண்ட தகவலைத் தெரிவித்தனர். இதன்போது பல திடுக்கிடுந்தகவல்கள் வெளியாகின.

### வற்புறுத்தி இணைத்தனர்

1994 இல் எமது கிராமங்களைத் திடீரெனச் சுற்றிவளைத்த சிறீலங்கா இராணுவத்தினர், எம்மைக் கைதுசெய்து, கொழும்பில் உள்ள முகாமிற்குக் கொண்டுசென்றனர். அங்குவைத்து பெரும் சித்திரவதைக்கு ஆளானோம். இதன்போது ஒருநாள் நாம் இருந்த முகாமிற்கு வந்த புளொட் இயக்கப் பொறுப்பாளர், இராணுவ அதிகாரிகளுடன் கதைத்துவிட்டு, எம்மைத் தமது இயக்கத்தில் சேருமாறு வற்புறுத்தினார். அவ்வாறு சேர்ந்தால் மட்டுமே இராணுவப்பிடியில் இருந்து எம்மை மீட்டுச்செல்வதாகக் கூறினார். அதன்பின் எம்மை வவுனியாவிற்குக் கூட்டிவந்தார்கள்.

## விடுதலைக்காகப் போராடும் இனம் சிறுவர் மீது கவனம் செலுத்த வேண்டும்

### -அருட்திரு இமானுவேல்

"எந்தச் சிறுபான்மை இனம் தன்னுடைய விடுதலைக்காகப் போராடுகின்றதோ, அது தன்னகத்தேயுள்ள சிறுவர்கள் மத்தியில்கூடிய கவனம் செலுத்தவேண்டும்."

பொம்மைவெளி சிறுவர் போசாக்குப் பராமரிப்புப் பூங்காவின் இரண்டாம் ஆண்டு நிறைவுவிழாவில் பேசும்போது, பேராசிரியர் அருட்திரு எஸ். யே. இம்மானுவேல் தெரிவித்துள்ளார்.

"ஒரு நாட்டில் பிறப்பவன், இயல்பாகவே அந்த நாட்டுப்பற்றை முழுமையாகப் பெற்றுக்கொள்வான் எனக்கூறமுடியாது; விடுதலை விழுமியங்களை ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திலும் வித்திட்டு வளர்க்கவேண்டும். அப்போதுதான் உண்மையான, முழுமையான நாட்டுப்பற்று வளர்ந்துவரும்.

மேற்கத்தைய நாடுகளைப்போன்று, ஒவ்வொருவரும் பாடசாலைக் கல்வியை முடித்து ஒன்று, இரண்டு ஆண்டுகள் பணத்திற்காக அல்லாமல், அந்நாட்டின் தேசிய சேவையில் ஈடுபடவேண்டும். இந்தவகையில் இந்த நாட்டில் தமிழராகப் பிறந்த ஒவ்வொருவரும் பரித்தியாகம் செய்யத்தயாராக இருக்கவேண்டும்".என, மேலும் தனது உரையில் தெரிவித்தார்.

விழாவில் தொடர்ந்து உரையாற்றிய யாழ். மாவட்ட மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி தணிகைச்செல்வி, "இந்தப் போசாக்குப் பராமரிப்பு நிலையங்கள் தொடங்கப்படமுன்பு, யாழ். மாவட்டத்தில் மருத்துவ அறிக்கைகளின்படி பத்தாயிரம் சிறுவர்கள் ஊட்டமின்றிப் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை இருந்தது; இந்தநிலையைப்போக்க, யாழ். மாவட்டத்தில் பதினொரு நிலையங்கள் எமது தேசியத் தலைவரின் திட்டத்திற்கமைய தொடங்கப்பட்டு இயங்கிவருகின்றன.

தமிழீழ மக்களின் எதிர்காலம் எப்படி இருக்கவேண்டும் என்பதை அடிப்படையாகவைத்து, இது ஏற்படுத்தப்பட்டது. சிறுவர் போசாக்குப் பராமரிப்புத்தொடர்பாக இந்தப் பூங்கா நிர்வாகிகளுக்கு மட்டும் பொறுப்பு உண்டு என நினைத்துவிடக்கூடாது. இந்த மண்ணில் வாழும் ஒவ்வொருவருக்கும் பொறுப்பு உண்டு". என்றார்.

## சமாதானப் பேச்சு இயல்பு நிலையைத் தோற்றுவித்துள்ளது என்பது வேடிக்கை

### செவ்வியில் தமிழ்ச்செல்வன்

26.02.1995 இல் செய்தியாளர்களுக்கு அளித்த செவ்வியில் அரசியற்றுறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் பின்வருமாறு கூறினார்.

"மோதல் தவிர்ப்பு யுத்த நிறுத்தமாக மாறவில்லை. வெளிநாட்டுக் கண்காணிப்புக் குழுவினர் இலங்கை வந்து பல நாட்கள் ஆகின்றன; ஒப்பந்தத்தைக் கண்காணிக்க அவர்களை அரசு இன்னமும் அனுமதிக்கவில்லை. ஒப்பந்தத்தில் கடைப்பிடிக்கவேண்டிய நடைமுறைகளில் பல சிக்கல்கள் உள்ளன. குறிப்பாகக் கடலில் நடமாட்டம், கிழக்கு மாகாணத்தில் போராளிகள் நடமாட்டம், கண்காணிப்புக்குழு நியமனம் போன்றவற்றில் பிரச்சினைகள் உள்ளன. இந்நிலை இவ்வாறு இருக்க, சனாதிபதியின் செயலாளர் அனுப்பியுள்ள கடிதத்தில் இங்கு சமாதான இயல்புநிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது என குறிப்பிடப்படுவது வேடிக்கையாக உள்ளது.

"பேச்சுக்களைத் தொடர்ந்து நடத்துவதற்கு வருமாறு நாம் பலதடவைகள் அரசு தரப்புப் பிரதிநிதிகள் குழுவிற்கும் அரசிற்கும் அழைப்பு விடுத்துள்ளோம்; ஆனால் அவர்களிடமிருந்து நான்காம்கட்டப் பேச்சுக்கள் குறித்து எதுவித பதிலும் அனுப்பி வைக்கப்படவில்லை. மூன்றாம் கட்டப்பேச்சுக்கள் முடிவடைந்து பல நாட்கள் ஆயினும் அரசு, மேற்கொண்டு பேச்சுக்களை நடத்துவதற்கு முன்வராமல் விலகிச்சென்றுகொண்டு இருந்தது. தற்போது திரு. பாலபட்ட பென்டியால் எமக்கு எழுதப்பட்ட கடிதத்தில்கூட நான்காம்கட்டப் பேச்சுவார்த்தை குறித்து எந்த ஒரு விடயமும் இல்லை. மாறாகத் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுவிட்டன; இனி இனப்பிரச்சினை பற்றிப் பேசுவதற்கு புலிகள் முன்வரவேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அவரின் இத்தகைய கோரிக்கை பலத்த சந்தேகத்தையும் ஏமாற்றத்தையும் தந்துள்ளது. புனரமைப்புச் செய்வதாக ஒரு மாயையை அரசு ஏற்படுத்த முனைகிறது. வடக்கு – கிழக்கு மாகாண அபிவிருத்தி என்று கூறி, பின் அதனை வடக்கு என்றும், மேலும் குறைத்து யாழ். மாவட்டம் என்று கூறிவிட்டுப், பின் அதனையும் விட்டுவிட்டு, யாழ். மாநகர சபை எல்லைக்குள் புனர்நிர்மானம் ஏற்படுத்துவதாகக் கூறியுள்ளனர். சில பகுதிகளுக்கு மின்சாரத்தையும் வீதித் திருத்தத்தையும் செய்துவிட்டு, வடமாகாணம் புனரமைக்கப்பட்டுவிட்டதென்று உலகுக்கு எடுத்துக்காட்ட முனைகிறார்கள்" என்று அவர் மேலும் கூறினார்.

"புனர்நிர்மானம் குறித்து கடந்த பேச்சுக்களின்போது நாம் மிகத்தெளிவாக எடுத்து விளக்கி இருந்தோம்; வேலைகள் எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்தி சீரமைப்பதற்காக 'புனர்நிர்மான அபிவிருத்திக்குழு' ஒன்று நியமிக்கப்பட்டு, அதில் விடுதலைப் புலிகளுக்கும் சரிசமமான அங்கத்துவம் வழங்கப்படவேண்டும். வடகிழக்கு மாகாணங்களுக்கான புனர்நிர்மான நிதிகளை முழுமையான முறையில் செலவிடுவதற்கு ஓர் 'அபிவிருத்தி வங்கி' உருவாக்கவேண்டும். அதற்குப் பின்புதான் புனர்நிர்மான வேலைகளை நடத்தவேண்டும். வெளிநாடுகளில் இருந்து பெருமளவு நிதி வடக்கு – கிழக்கு வேலைகளுக்கென கிடைக்க உள்ளது. இந்த நிதி முழுமையாக எமது மக்களுக்குப் பயன்படவேண்டும். அபிவிருத்தி வேலைகள் நடைபெற வேண்டும். ஊழல்கள் இடம்பெறக்கூடாது என்பதற்காகவே நாம்

தொடர்ச்சி 5 ஆம் பக்கம்...

## பிரிவா? அல்லது தீர்வா? தெரிவிற்கான வேளையிது

### ஐ.தே.க சுசில் முனசிங்கா

பிரிந்து வாழ்வதா? இணைந்து வாழ்வதா? சமஸ்டி அமைப்பில் ஐக்கியப்பட்டு வாழ்வதா? எனத் தீர்மானிக்கும் வேளை வந்துவிட்டது. ஐ.தே.க வும் சுதந்திரக் கட்சியும் மற்றும் இதர அமைப்புக்களும் ஒன்றிணைந்து இந்த நெருக்கடியைத் தீர்க்க முன்வரவேண்டும் என மேல் மாகாண முன்னாள் முதலமைச்சரும், ஐ.தே.க கொழும்பு மாவட்ட சிறீலங்காப் பாராளுமன்ற உறுப்பினருமான சுசில் முனசிங்க நீதி அரசியலமைப்பு அமைச்சு ஒதுக்கீட்டு விவாதத்தில் பேசுகையில் கூறினார்.

"சமஸ்டி அமைப்பானது சிறுபான்மையினர் புவியியல் ரீதியாக ஒன்றுபட்டிருந்தால் பயனளிக்கும், கனடா போன்ற நாடுகளில் இத்தன்மையைக் காணலாம். பல இனங்கள் ஒருமித்து வாழும் சந்தர்ப்பத்தில், அதாவது சிறுபான்மை சமூகம் புவியியல் ரீதியாக தனித்து இருக்காத பட்சத்தில் சமஸ்டி அமைப்பு பயன்தராது. ஐக்கிய அமெரிக்காவில் இந்நிலையைக் காணலாம்" எனவும் கூறினார்.

அப்படியானால் ஐக்கிய தேசியக் கட்சி பிரிந்து செல்வதை அனுமதிக்கப் போகிறதா? அல்லது அடக்கி அடிமை கொள்ளத் துடிக்கிறதா? என அவதானிகள் எதிர்க் கேள்வி எழுப்புகின்றனர்.

## விடுதலைப் புலிகளைத் தவிர...

எவருடனோ பேசி, வடக்கு – கிழக்குப் பிரச்சினையைத் தீர்க்கலாம் என நினைப்பது சிறுபிள்ளைத்தனமாகும். இந்த நாட்டில் ஒற்றையாட்சி அரசியலமைப்பின்கீழ் தமிழர்களுக்கு விமோசனம் கிடைக்கப்போவதில்லை. சமஸ்டி அரசியலமைப்பு மூலந்தான் அது சாத்தியமாகும் என தந்தை செல்வா அன்றே கூறினார்.

அவர்கள் சிந்திக்கத் தொடங்கினாலும் தங்கள் வசமுள்ள அதிகாரங்களைப் பகிர்ந்துகொடுக்க, அவர்களுக்கு மனம் வரவில்லை. இதன் காரணமாகத்தான் மொழிப் போராட்டமாகத் தொடங்கிய எமது போராட்டம் நாளடைவில் இனப்போராட்டமாக விஸ்வரூபம் எடுத்தது.

இன்று புலிகள் இதனைத்தொடர்ந்து நடத்துகின்றனர். எனவேதான் இன்றைய சூழ்நிலையில் அவர்களோடு பேசித்தான் பிரச்சினையைத் தீர்க்கமுடியும் என நாம் கூறிவருகிறோம். இந்த யதார்த்த நிலையை எல்லோரும் புரிந்துகொள்ளவேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தில் நாங்கள் ஓர் ஆக்கபூர்வமான உந்துசக்தியாக இருக்கமுடியுமே அன்றி, எம்முடன் பேசித்தான் இனப்பிரச்சினையைத் தீர்க்கமுடியும் எனக்கூறுவோமேயானால், அது அரசியல் துரோகத்தனமாகும்.

# ஒன்றாக்கலும் வேறாக்கலும்

சிறீலங்காப் பாராளுமன்றத்தில் பேசிய சிறீலங்காவின் பொது நிருவாக பாராளுமன்ற அலுவல்கள், பெருந்தோட்ட கைத்தொழிற்துறை பிரதியமைச்சர் அத்தாவுட செனிவிரத்தின "துண்டு துண்டான பகுதிகளை ஒன்று சேர்ப்பதற்கும் ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கும் சமஸ்டிமுறை முக்கிய தீர்வாகும்" எனக் கூறியுள்ளார். பிரதியமைச்சர் தனது பேச்சில் விடுதலைப் புலிகளினால் மீட்கப்பட்ட தமிழீழப் பிரதேசங்களை மீளவும் சிறீலங்கா வரைபடத்துள் பொருத்திக் கொள்வதற்கான முயற்சியாக இனப்பிரச்சினைக்கான தீர்வினை கொண்டுவரும் முயற்சியை பார்க்கின்றார். அதாவது வரலாற்றுக்கு முற்பட்டகாலம் முதல் வாழும் தேசிய நாட்டினமான தமிழர் தாயகத்தை அங்கீகரித்து அந்த அரசியலில் யதார்த்தத்தினூடாக தீர்வுக்கு போதல் என்கிறதை விடுத்து துண்டு துண்டான பகுதிகளை மீண்டும் சிறீலங்காவுடன் இணைத்துத் தமிழீழப் பிரதேசத்தில் செயலற்றுப் போயிருக்கும் சிறீலங்கா அரசின் இறைமைக்கு புத்துயிர் கொடுப்பதற்கான ஒன்றாக்கலுக்காக சிறீலங்கா துடிக்கிறது என்ற நியாயமான சந்தேகத்தை தோற்றுவித்துள்ளது.

அதேவேளை அத்தாவுட செனவிரத்தின "நாம் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அப்பகுதி மக்களின் நல்லெண்ணத்தைப் பெறவேண்டும் தமிழர்கள் அனைவரும் புலிகள் அல்லர். அதனால் தற்போது அரசு அப்பகுதி மக்களது பலதேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதற்கு முன்வந்துள்ளது. இதற்கு மாறாக நாம் செயற்பட்டோமானால் நாம் அவர்களை மேலும் மேலும் எமக்கு எதிரானவர்களாக்கி புலிகளுடன் மேலும் நெருக்கமாவதற்கு வழிவகுப்பதாகும்" எனக் கூறுவதன் மூலம் புனர்வாழ்வு புனரமைப்பு எனும் உத்திகளை கையாண்டு மக்களையும் விடுதலைப் புலிகளையும் வேறாக்கலாமென சிறீலங்கா திட்டமிடுகிறதா என்ற தொடர்ச்சியான மற்றொரு சந்தேகத்தையும் கிளப்பியுள்ளார்.

இதற்கு வலுவுவூட்டுவது போல் அமைந்துள்ளது தனது கணவர் விஜயகுமாரதுங்காவின் ஏழாவது நினைவுதினத்தன்று இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா அளித்த செவ்வி.

"இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முயற்சியில் நாம் முன்னைய அரசைக் காட்டிலும் இப்பொழுது பெருமளவு முன்னேற்றம் கண்டுள்ளோம். இந்த முயற்சியானது மெதுவானதாகவும் வேதனைகள் தருவதாகவும் இருக்கும். இந்த நூற்றாண்டில் முழு உலகமே கண்டிராத இரக்கம் குறைந்த கெரில்லா இயக்கம் ஒன்றுடனேயே நாம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகிறோம் என்பதனையும் நாங்கள் அறியாதவர்கள் இல்லை" எனக்கூறிய சந்திரிகா விடுதலைப் புலிகள் இயக்கத்தை பற்றி கடினமான வார்த்தைப் பிரயோகங்களை கையாண்டதுடன் நிற்காமல் "கடந்த கால கசப்புணர்வுகளை ஒதுக்கிதள்ளிவிட்டு சமாதான முயற்சிகள் வெற்றிபெற தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட வடபகுதி மக்கள் அனைவரும் சிறீலங்கா அரசுக்கு ஒத்துழைப்பு தரவேண்டும்" என அழைப்பு விடுத்து விடுதலைப் புலிகளையும் மக்களையும் வேறு வேறாக காண்பது போன்று பேசியுள்ளார்.

அதேபோல் வடக்கு-கிழக்கு மாகாணங்களின் கல்வித்திணைக்கள அதிகாரிகளுக்கும், பாடசாலை அதிகாரிகளுக்கும் சிறீலங்கா தேசியகொடியானது ஏனைய கொடிகள் எல்லாவற்றுக்கும் மேல் பறக்கவிடப்படல் வேண்டும் என அறிவுறுத்தியுள்ளமை சிறீலங்கா அரசு தனது இறைமையை நிலைநாட்டி துண்டு துண்டாக போய்விட்ட நாட்டை ஒன்றாக்கல் என்பதிலேயே முக்கிய கவனம் செலுத்துகிறது என்பதை உறுதி செய்கிறது.

உண்மையில் தந்திரோபாயங்களை விடுத்து உறுதியாகிவிட்ட தமிழீழத் தேசியத்தையும் உருவாகிவிட்ட தமிழீழ அரசு நோக்கிய அரசையும் (De facto State) அதனுடைய உறுதியானதும் வலிமையானதுமான தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசிய பாதுகாப்பு வழங்கும் ஆற்றலையும் உணர்ந்து நிகழ்கால அரசியல் யதார்த்தத்துடன் பிரச்சினைகளை அணுகினால் நிச்சயமாக அமைதித் தீர்வு விரைவு பெறும்.

முதலாம் பக்கத் தொடர்ச்சி...

# தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களால், ஜனாதிபதி சந்திரிகாவுக்கு 25.02.95 இல் எழுதப்பட்ட கடிதம்

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா,
சிறீலங்கா ஜனாதிபதி,
ஜனாதிபதி தலைமைச் செயலகம்,
கொழும்பு.



**அன்பின் ஜனாதிபதி அவர்களுக்கு!**

16 பெப்ரவரி 1995 திகதியிடப்பட்ட உங்களது கடிதம் கிடைத்தது. நன்றி. உங்களது செயலாளர் பாலபட்ட பென்டி அவர்களுக்கு 13 பெப்ரவரி 1995 இல் ஒரு முக்கிய கடிதம் அனுப்பிவைத்தோம். அதற்கான பதிலை எதிர்பார்த்திருந்த காரணத்தால் உங்களுக்குப் பதில் எழுதத் தாமதம் ஆகியது. திரு. பாலபட்ட பென்டி அவர்கள் எழுதிய மிகவும் சுருக்கமான கடிதத்தில் நாம் எழுப்பிய மிகவும் பாரதூரமான விடயங்கள் எதற்கும் பதில்கள் தரவில்லை.

மோதல் தவிர்ப்பு உடன்பாடு சம்பந்தமான நடைமுறைகள், கண்காணிப்புக் குழுக்களை அமைத்தல், பேச்சுக்களைத் தொடர்தல் போன்ற பிரச்சினைகளுக்கும் பதிலளிக்கவில்லை. எங்கள் பிரச்சினைகள் எல்லாவற்றையும் ஓரங்கட்டி, வடக்கில் வாழும் தமிழ் மக்களின் அன்றாட அவலங்களைப் போக்கும் வகையில் அரசாங்கம் பலவித நடவடிக்கைகளையும் எடுத்திருப்பதாக அவர் எங்களுக்குக் கூறுகிறார். பாதை குறித்து எமது நிலைப்பாட்டை அரசு உதாசீனம் செய்துள்ளது. யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கும் வடமாகாணத்திற்கும் இடையில் பாதைத்திறப்பு விடயமாக விடுதலைப் புலிகள் எவ்வித நிலைப்பாட்டில் உள்ளார்கள் என்பதை அரசாங்கம் நன்கு அறியும். இந்த முக்கிய விடயத்தில் எமது நிலைப்பாட்டை உதாசீனம் செய்துவிட்டு, பூநகரி, ஆனைமிறவுப் பாதைகளை மக்களுக்குத் திறந்துவிட்டிருப்பதாக ஒருதலைப்பட்சமான முறையில் அவர் அறிவித்தல் ஒன்றையும் விடுத்துள்ளார். இது அரசின் பழைய பல்லவிதான். இந்த அறிவிப்பானது பொய்யான பிரச்சார இயக்கத்திற்கு உதவலாமே தவிர, சமாதான சூழலை முன்னெடுக்க உதவப்போதில்லை. இதையிட்டு நாம் மிகவும் ஏமாற்றம் அடைந்துள்ளோம். இந்த ஒருதலைப்பட்சமான அறிவிப்பு ஒரு விடயத்தைத் தெட்டத்தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. அதாவது பரந்துபட்ட தமிழ் மக்களின் அவசரத் தேவைகளுக்கு மேலானதாக, எமது மண்ணை ஆக்கிரமித்து இருக்கும் இராணுவத்தின் போர்த் தந்திரோபாயத்திற்கு அரசாங்கம் முதன்மை கொடுக்கின்றது. பொருட்களின் தடைநீக்கம் பற்றிய அறிவிப்பு, உண்மையைத் திரித்துக்காட்டும் பிரசாரம். பொருளாதாரத்தடைகள் முற்றாக நீக்கப்படவில்லை. இதனை நீங்கள் நன்கு அறிவீர்கள். பெற்றோல், டீசல், வாகனங்கள், வாகன உதிரிப்பாகங்கள், பட்டறிகள் போன்ற பொதுமக்களின் சமூக, பொருளாதார வாழ்விற்கு அத்தியாவசியமான பொருட்கள் அனைத்தும் இராணுவ பண்டங்கள் என்று முத்திரைகுத்தி தடுத்துவைக்கப்பட்டுள்ளன. அது மட்டுமன்றி தடைநீக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் பொருட்கள்கூட, வவுனியாவில் இராணுவத்தினர் தம்பாட்டில் விதிக்கும் தடைகளால் மக்களை வந்தடைவதில்லை. இதுதான் உண்மையான யதார்த்தநிலை. இந்த உண்மை நிலையை வடக்கில் உள்ள எமது மக்கள் நன்கு அறிவார்கள். நிலைமை இப்படி இருக்க, சகல அத்தியாவசியப் பொருட்கள் மீதுள்ள தடைகள் நீக்கப்பட்டிருப்பதாக திரு. பலாபட்ட பென்டி அவர்கள் எமக்கு அறியத்தருகின்றார். உண்மையைத் திரித்துக்காட்டும் இத்தகைய பொய்ப்பிரச்சாரங்கள், எமது மக்களின் துன்பத்தைக் குறைத்துவிடாது. சமாதான நலனையும் வெளிவிடாது. போர் நிறுத்தம் குறித்த விடயத்தில் அசமந்தமாக அரசு உள்ளது. தற்போதுள்ள தற்காலிக மோதல் தவிர்ப்பு நிலையை ஒரு முழுமையான உறுதியான போர் நிறுத்தமாக மாற்றும் விடயத்தில் அரசாங்கத்தின் அசமந்தபோக்கு ஆச்சரியத்தைத் தருகின்றது. இது குறித்து நாம் பல கடிதங்களை அரசிற்கு எழுதியிருக்கின்றோம். மோதல் தவிர்ப்பு ஒழுங்குமுறை சம்பந்தமாக எழுந்துள்ள பல்வேறு சிக்கல்களுக்கும் பிரச்சினைகளுக்கும் நாம் விளக்கம் கூறியபோதிலும் அரசாங்கம் இதுவரை உருப்படியான பதில் எதையும் தரவில்லை. அரசாங்கத்தின் அக்கறையீனமான போக்குக் காரணமாக, வெளிநாட்டுப் பிரதிநிதிகளைக்கொண்ட கண்காணிப்புக் குழுக்களை உருவாக்குவதில் பெருந்தாமதம் ஏற்பட்டு வருகின்றது. சமாதானத்தைப் பேணுவதில் இந்தக் குழுக்களின் பங்கு மிகமுக்கியமானதாகும். இந்த, பாரதூரமான விடயங்களைத் தீர்த்துவைக்க அரசாங்கம் தவறுமானால் சமாதான சூழ்நிலைக்கு இதுபெரும் பங்கம் இழைத்துவிடும்.

புனர்நிர்மாணம் பற்றிப் பேசி இணக்கம் காணப்படவேண்டும். எரிபொருள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் மீதான தடைநீக்கப்படுவது, யாழ்ப்பாணத்திற்கான பாதை திறக்கப்படுவது, போர் நிறுத்தம் நிலைமையை பலப்படுத்துவது ஆகியன வடக்கில் மேற்கொள்ளப்படவிருக்கும் பாரிய புனர்நிர்மாண அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு அத்தியாவசியமானவை என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். எனவேதான், இந்த விடயம் குறித்து விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பேச்சுமூலம் இணக்கப்பாடு காணப்படவேண்டும். அப்படியானதொரு இணக்கப்பாடு ஏற்பட்டால், பெரிய அளவிலான புனர்நிர்மாணத் திட்டங்களை செம்மையான முறையிலேயே செயற்படுத்துவது சாத்தியமாகும். பொருளாதாரத்தடையை நீக்க, புனர்நிர்மாண வேலைகளைத் திட்டமிட்டுச் செயற்படுத்த, தகுந்த அதிகாரங்கள்கொண்ட ஒரு அமைப்பு உருவாக்கப்படவேண்டும். அதில் அரச பிரதிநிதிகளும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் அங்கம் வகிக்கவேண்டும் என்றும் கடந்த சுற்றுப்பேச்சின்போது விடுதலைப் புலிகள் விடுத்த வேண்டுகோளை அரச தரப்பினர் ஏற்றுக்கொண்டனர். எனவே பேச்சுவார்த்தைகளின்போது காணப்பட்ட உடன்பாடுகளின் அடிப்படையில் அரசாங்கம் செயற்படவேண்டும் என்றும் அதன்மூலம் புனர்நிர்மாணம் செவ்வனே செய்ய முடியும் என்பதையும் நாம் வலியுறுத்துகின்றோம்.

**இப்படிக்கு,**
**உங்கள் நேர்மையுள்ள**
**வே. பிரபாகரன்**
**தலைவர், தமிழீழ விடுதலைப் புலிகள்.**

# அரசியலமைப்பு

## ஜேயாரால் ஜேயாருக்காக ஜேயாருடைய

## அரசியலமைப்பால் உருமறைப்புச்செய்யப்பட்ட நவீன முடியாட்சி

சென்ற இதழ் தொடர்ச்சி

தமிழீழத்திலிருந்து
மு.திருநாவுக்கரசு

"தேவையே, கண்டுபிடிப்பின் தாய்"; நெருக்கடியே புதியவற்றின் ஊற்று. அப்படியாயின் 1978 ஆம் ஆண்டு புதிய அரசியலமைப்புத் திட்டம் உருவாக்கப்பட்டதற்கான தேவை என்ன? இதற்கான பதிலில்தான் இந்த அரசியலமைப்புப் பற்றிய விளக்கமும் இதன் எதிர்காலம்பற்றிய கணிப்பீடும் அடங்கமுடியும்.

இலங்கையில் பிரித்தானியர்கள் காலத்துக்குக்காலம் தமது தேவைகளிற்கேற்ப மாற்றங்களைச் செய்தார்கள். அவ்வப்போது சில நெருக்கடிகளும் மாற்றங்களைத் தூண்டியிருந்தன. இறுதியாகத் தமது பாணியிலான ஒரு நாடாளுமன்ற அரசியலமைப்பு முறையினை நிறுவினர். அந்த அரசியலமைப்பு இலங்கைக்குப் பழக்கப்பட்டுவிட்டது. சுதந்திர இலங்கையை இலங்கைக் குடியரசாக ஆக்கமுற்பட்டபோது, பிரித்தானிய முடிக்குரிய யாப்பினை இலங்கையின் குடியரசுக்கான யாப்பாக மாற்றம் செய்தனர். ஆனால் நாடாளுமன்ற முறையில் மாற்றம்செய்யாது, ஏற்கனவே நிலவிவந்த அதே யாப்பு முறையையே பேணினர். இருசபைகளைக்கொண்ட நாடாளுமன்றத்துக்குப் பதிலாக ஒரு சபையைக்கொண்ட நாடாளுமன்ற ஆட்சியையும் மாதேசாதிபதிக்குப் பதிலாக சனாதிபதியும் தவிர வேறு மாற்றங்களைச் செய்யவில்லை. உண்மையில் பெயர் மாற்றங்களைத்தவிர அடிப்படையில் இதற்கு முன்பிருந்த சோல்பரி யாப்பை அப்படியே பேணியமைதான் 1972 ஆம் ஆண்டின் குடியரசு யாப்பு ஆகும்.

எனவே 1972 ஆம் ஆண்டின் யாப்பிலிருந்த ஒரேயொரு தேவை முடியரசின் கீழாக யாப்பிற்குப் பதிலாக ஒரு குடியரசுக்கான யாப்பு என்பது மட்டுந்தான். அதுவும் பெயர் மாற்றங்களைத் தவிர வேறொன்றுமில்லை. இதற்கு முன்பிருந்த யாப்பு சுமூகமாக இயங்கியதாலும் அதற்கு சிங்கள அரசியல்வாதிகள் பழக்கப்பட்டிருந்த படியாலும் அதைப் பின்பற்றினர்.



ஆனால் 1978 இன் யாப்புக்கான தேவை என்ன? அரசியற் திட்ட நெருக்கடிகள் 1978 இன் யாப்பை உருவாக்கத் தூண்டவில்லை. யாப்பு மாற்றம்கோரி நாட்டில் கிளர்ச்சியெழவில்லை. யாப்பில் திருத்தங்கள் வேண்டுமென்று பொதுவாகச் செய்தித்தாள்களோ, அறிவுஜீவிகளோ கருத்துக்களை வெளியிடவில்லை. இந்நிலையில் யாப்பு மாற்றம் ஏன் தேவைப்பட்டது?

தமிழரை ஒடுக்குவதற்கு 72 இன் யாப்பு போதுமானது அல்ல என்று கருதமுடியாது. ஏனெனில் இனப்பிரச்சினை பற்றிய விவகாரத்தில் 72 இன் யாப்பின் கருத்துக்களையே 78 இன் யாப்பும் அப்படியே பின்பற்றியிருந்தது. அத்துடன் தமிழரை ஒடுக்குவதற்கு ஐ. தே. கட்சிக்கு சுதந்திரக்கட்சியின் ஆதரவு எப்பொழுதும் கிடைக்கும். சில நுணுக்கவிடயங்களைப் பற்றிச் சிந்தித்தாலும்கூட அடிப்படையில் இது சம்பந்தமாகச் சிந்திக்கத் தேவையிருக்கவில்லை. எனவே இந்த யாப்பு மாற்றத்துக்கான தேவையை அடையாளங் காண்பது இலகுவானது.

ஜே. ஆர். தன்னையும், திறந்த பொருண்மியத்தையும் மனதில்கொண்டு இந்த யாப்பு மாற்றத்தை மேற்கொண்டார்.

1. அவர் குடும்ப ஆதிக்கத்தால் அரசியலில் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தவர். எனவே தன்முன் குடும்ப ஆதிக்கத்தின் இறுதித் தூணாக இருக்கும் திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்காவை எதிர்கொள்வது.

2. சேனநாயக்கா குடும்பத்தின் விசுவாசியாக டட்லியால் வளர்க்கப்பட்ட பிரேமதாசா ஐ. தே. கட்சிக்குள் பலமான ஒரு சக்தியாக இருப்பதால், அவரை எதிர்கொள்வது.

3. ஐ. தே. கட்சியை உறுதியான நிலையில் வைத்திருப்பதற்கு பலமான அமைப்பை உருவாக்குவது.

4. தனக்கெதிராக எழக்கூடிய மக்களின் கிளர்ச்சிகளையும் ஏனைய சக்திகளையும் ஒடுக்குவது.

5. தனக்குச் சாதகமான பல அரச செயற்பாடுகளை உருவாக்குவது.

6. இவற்றிற்காகத் தன்கையில் பெரும் வல்லமைகளைக் குவித்து, அவற்றைப் பாதுகாக்கும் விதத்தில் அரசியல் திட்ட அரண்களை அமைப்பது.

7. திறந்த பொருண்மியத்தை நிறுவுவது.

8. உள்நாட்டில் உறுதியான தனியார் முதலீட்டை ஏற்படுத்துவது.

போன்ற தேவைகளே இவ்வரசியலமைப்புத் திட்டத்தை உருவாக்குவதற்கான நிபந்தனைகளாக அமைந்தன. ஆனால் அதேவேளையில் இனரீதியாக மேற்கொள்ளக்கூடிய விடயங்களையும் அவர் கைவிட்டாரில்லை. இவை அனைத்திற்கும் ஈடுகொடுக்கக்கூடிய அமைப்பை அவர் யோசித்தார். இதற்காக அவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியற் திட்டம் பிரஸ்சியாவில் மன்னராட்சிக் காலத்தில் காணப்பட்டதுபோன்ற ஒரு அரசியலமைப்பு ஆகும்.

அதை அடிப்படையாகக்கொண்டு, வேறு பல நாடுகளின் அரசியலமைப்புத் திட்டங்களின் அங்கங்களையும் தனது திட்டத்தில் சேர்த்துக்கொண்டார். பொதுவாக பிரான்சில் உள்ள டிகோல் இன் அரசியலமைப்பையே இவர்கள் பின்பற்றியதாகக் கூறப்படுவதுண்டு. ஆனால் டிகோலின் அரசியலமைப்புத் திட்டத்தின் தேவையையும் மூலத்தையும் பார்த்தால், இதன் உண்மை விபரம் தெரியவரும்.

இரண்டாம் உலகப் போரில் பிரான்ஸ் யேர்மனால் கைப்பற்றப்பட்டுவிட்டது. அந்தச் சூழலில் பொதுவுடமையாளர்கள் கிட்லரிற்கெதிரான தேசிய விடுதலைப் போராட்டத்திற்கூடாக பிரான்சில் துரித வளர்ச்சியடைந்தனர். கிட்லரைத் தோற்கடித்த நேசநாடுகளின் படைகள் இறுதியாகப் பிரான்சை மீட்டு, டிகோலிடம் ஒப்படைத்தனர். யேர்மன் துருப்புக்களால் சீரழிக்கப்பட்ட பிரான்ஸ் ஒருபுறமும் பொதுவுடைமையாளர்கள் போர்க்குணத்துடன் வலிமைபெற்றுவருவது மறுபுறமுமாக பிரான்ஸ் கொந்தளித்துக்கொண்டிருந்தது. இச்சமயம் தீவிரவலதுசாரியான டிகோல் பொதுவுடைமையாளர்களைத் தோற்கடிக்கவும் பிரான்சை வழமை நிலைக்குக்கொண்டு வரவும் அதிகாரத்தை ஓரிடத்தில் குவிக்கும் அரசியலமைப்பை உருவாக்க நினைத்தார். அந்த நிலையில் பிரஸ்சியாவின் மன்னராட்சிக்கால அரசிலமைப்பைக் கண்ணுற்றார். பிரஸ்சியாவின் சட்டசபைக்கு டயற் என்ற பெயர். டயற்றும் மன்னனும் இணைந்தவகையில் சில நவீன தன்மைகளையும் சேர்த்து டிகோல் தனது அரசியற்த திட்டத்தை உருவாக்கினார். அந்த டயற்றின் பின்னணியில் இருந்துதான் முதலாவது உலகப் போருக்கு வித்திட்ட கைசர் வில்லியமும் இரண்டாவது உலகப்போரை உருவாக்கிய கிட்லரும் தோன்றினர். எனவே டிகோலின் அரசியற் திட்டத்தின் மூலம் பிரஸ்சியாவின் மன்னராட்சியும் டயற்றும் இணைந்த ஒரு அமைப்பாகும்.

## அத்தியாயம் - 8

ஜே. ஆரும் தன்னை எதிர்நோக்கிய குடும்ப ஆதிக்கம், பிரேமதாசாமீதான அச்சம், வெகுசன எழுச்சிகளை அடக்குவதற்கான தேவை, திறந்த பொருண்மியத்தை உறுதிப்படுத்துவதற்கான அவசியம் ஆகிய அனைத்தினதும் மத்தியில் உலகில் ஒரு காலத்தில் நிலவிய வல்லமை பொருந்திய முடியாட்சியைப் (Absolute Monarch) போன்ற முடியாட்சி அரசியலமைப்பை உருவாக்கினார். ஐரோப்பாவில் காணப்பட்ட மாபீற்றர், மாபிரடெரிக், 14 ஆம் லூயி போன்ற வல்லமைமிகுந்த மன்னர்கள்போலத் தன்னை அரசியலமைப்புத் திட்டத்தினூடாக மன்னராக்கினார். ஜே. ஆரை மன்னராக்குவதற்கான அரசியலமைப்புத் திட்டம் இதுவெனக் கூறலாம்

இவற்றுக்காகத் தனது காலகட்ட நவீன நிலைமைகளை உள்வாங்கிய ஜே. ஆர். நவீன முலாம் பூசிய பழைய மன்னர் போலானார். சட்டங்கள், சம்பிரதாயங்கள்போன்ற தோற்றங்களை இவர் ஏற்படுத்தினார். அதற்கு அரசியலமைப்பை ஒரு கருவியாக ஆக்கிக்கொண்டார்.

இதனால் ஐ. தே. கட்சியைப் பலப்படுத்த, விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையையும் சிறீமாவின் குடும்ப ஆளுமையை எதிர்கொள்ளமுடியாத நிலையில், அவரை அரசியற் களத்திலிருந்து அகற்ற, 81 ஆவது சரத்தையும் பிரேமதாசாவை எதிர்கொள்ள உபசனாதிபதியின்மையையும் மேலும் தனக்குச் சாதகமான நேரத்திற்பயன்படுத்துவதற்கென மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பையும் திறந்த பொருண்மியத்தை உறுதிப்படுத்துவதற்காக சிறப்புச் சரத்துக்களையும் உருவாக்கியதுடன், சட்டத்துறைக்கும் நீதித்துறைக்கும் மேலாக சனாதிபதி முறைமையை உருவாக்கியும் 1985 இல் ஐ. தே. கட்சியின் 28 ஆவது மாநாட்டில் ஜே. ஆர். உரையாற்றும்போது சட்டசபை, நீதித்துறை ஆகிய இரண்டிற்கும் மேலான இடத்தில் சனாதிபதி உள்ளார் என்று கூறினார். (Cited in Lanka Guardian 15.07.1991). அரசியற் திட்டத்தின் முற்பகுதியால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள மக்களின் கிளர்ச்சிகளை ஒடுக்குவதற்குமெனப்பொதுமக்கள் பாதுகாப்புச்சட்டம் எனப்படும் 155 ஆவது சரத்தையும் உருவாக்கினார்.

இந்தவகையில் ஜே. ஆர். தனது காலத்திற்காணப்பட்ட எல்லா வளங்களையும் பயன்படுத்தி அவ்வளங்களைத் தான் தொடர்ந்து பேணக்கூடிவகையில் அரசியலமைப்பை உருவாக்கினார். இவரிடமிருந்து முதன்மையான வளம் நாடாளுமன்றத்தில் 6 இல் 5 பெரும்பான்மைப் பலமும், அவர்களிலும் பெரும்பாலானோர் பிரேமதாசாவின் ஆட்களாயிராமல் தன்னுடைய ஆட்களாயிருந்ததும்தான். இப்பலத்தை வைத்துக்கொண்டு உருவாக்கிய அரசியலமைப்பைத் தொடர்ந்து பேணவும் இந்த அரசியலமைப்பாலேயே வழியும் வகுத்தார் என்பதால், நாடாளுமன்றத்தைக் கட்டுப்படுத்தும் வல்லமை மிக்கவராகவும் இருந்தார். இவரின் சிறப்புச் சூழலுக்கேற்ற இந்த அமைப்பு எல்லோருக்கும் எல்லாவேளைகளிலும் பொருந்தும் என்பதல்ல. ஜே. ஆர். மையத்தில் இருந்து எழுந்த இத்தகைய குறைபாடுள்ள அரசியலமைப்பானது, இயல்பான நெருக்கடிக்குள்ளாவது தவிர்க்கமுடியாதது. இந்த அரசியலமைப்பு நடைமுறையிலிருந்த காலப்பகுதியில்தான், முன்னெப்பொழுதும் இல்லாத அளவுக்கு இலங்கைத்தீவில் மக்கள் கொன்று, குவிக்கப்பட்டனர். இக்காலப் பகுதியில்தான் இலங்கைத்தீவு மனித உரிமைமீறல்களுக்குப் பேர்போன ஒரு நாடாகியது. இது ஓர் ஆக்கநோக்க அரசியலமைப்பு அல்ல. ஜே. ஆரின் எதிரிகளை எதிர்கொள்வதற்கான அரசியலமைப்பாகவும் அமைக்கப்பட்டதுடன், இதன்விளைவு இரத்தக்களரியாகவும் அமைந்துவிட்டது.

(தொடரும்)

# அரசாங்கத்தின் அசமந்தப் போக்கும் சமாதானப் பேச்சுவார்த்தையில் தடங்கலும்

— வளவன்

மோதல் தவிர்ப்பு உடன்படிக்கையை நடைமுறை விதிகள் மூலம் விஸ்தரிக்கவும், அதனை முழுமையான யுத்த நிறுத்தத்திற்கு இட்டுச்செல்லவும் விடுதலைப் புலிகள் விருப்பமாக இருந்தனர். இது குறித்துக் கலந்துரையாட, வெளிநாட்டு மோதல் தவிர்ப்புக் கண்காணிப்புக் குழுத்தலைவர்களை யாழ்ப்பாணத்திற்கு வருமாறு அழைத்தனர். சிறீலங்கா அரசாங்கம் இச்சந்திப்பை நிகழாமல் தடுக்கும்பொருட்டுக் காலம் கடத்தியபோதிலும், விடுதலைப் புலிகளின் கடுமையான வற்புறுத்தலின்பேரில், இவ்வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் யாழ். வர அரசால் அனுமதிக்கப்பட்டனர். நோர்வேயைச் சேர்ந்த ஓடன் கோல்ம் (Audun Holm), யொகான் கபிரியல்சன் (Johan Gabrielson), கனடாவைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் சி. மில்னர் (Maj. Gen. C. Milner), நெதர்லாந்தைச் சேர்ந்த லெப். கேணல் போல் கென்றி கோஸ்ரிங் (Lt. Col. Paul Henry Horsting) ஆகியோர் யாழ். வந்து, தமிழ்த் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களைச் சந்தித்தனர். மேலதிக விதிகளால் ஒப்பந்தம் விஸ்தரிக்கப்பட்டால்தான் கண்காணிப்பு, நடைமுறைச்சாத்தியம் என ஒப்புக்கொண்ட அவர்கள், முழுமையான யுத்த நிறுத்தத்தை நோக்கிய அச்செயற்பாடு விரைவுபடுத்தப்படவேண்டும் என்றும் கூறினர். தலைவர் பிரபாகரனைச் சந்தித்தமை தமக்குப் பெருமை அளிப்பதாகத் தெரிவித்த அவர்கள், சமாதான முன்னெடுப்புக்கான தமது சக்திக்குட்பட்ட அனைத்தையும் செய்வதாக வாக்குறுதி அளித்தனர். யாழ்ப்பாணத்தில் பத்திரிகையாளர்களிடம், தலைவர் பிரபாகரனுடனான சந்திப்புப்பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் நெதர்லாந்து நாட்டுப் பிரதிநிதி, "அச்சந்திப்பு தனக்கு மட்டுமல்ல தனது நாட்டுக்கே கிடைத்த பெருமை" என்றும் கூறினார்.

வெளிநாட்டுக் கண்காணிப்புக்குழுத் தலைவர்கள், விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம், அரசியற்றுறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் மற்றும் பேச்சுவார்த்தைக் குழுவினர் ஆகியோரைச் சந்தித்தபோது, சமாதானப் பேச்சுவார்த்தை குறித்தும், அதில் ஏற்படுத்தப்பட்டுள்ள தடங்கல்கள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது. கொழும்பு திரும்பி, சனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவைச் சந்தித்த வெளிநாட்டுப் பிரதிநிதிகள் சந்திரிகாவிடம், பேச்சுவார்த்தை தொடர்பாக விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு சரியானதாகவும் நியாயம்மிக்கதாகவும் உள்ளதாகத் தெரிவித்தனர். அரசாங்கத் தூதுக்குழு, யாழ்ப்பாணத்தில் இணக்கங்கண்ட பல விடயங்கள் அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என்றும் அரசியல்மட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகளை இராணுவம் சரியாக நிறைவேற்றுவதில்லை என்றும் விடுதலைப் புலிகள் தெரிவித்த கருத்தில் நியாயம் உண்டெனத் தாம் கருதுவதாகத் தெரிவித்தனர். அண்மையில் நவசமாஜக் கட்சித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்காரா தலைமையில் யாழ். வந்த சமாதானக்குழுவும் விடுதலைப் புலிகள் தரப்பு நியாயத்தை ஒத்துக்கொண்டது. மின்சாரம், எரிபொருள், விவசாய உரங்கள் ஆகியவற்றுக்கான தடைகள் முற்றாக நீக்கப்படவேண்டும்; இதுகுறித்து அரசாங்கத்துடன் உரையாடுவேன் என்று திரு. வாசுதேவ நாணயக்காரா பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

பூநகரி இராணுவ முகாம் மூடப்பட்டு, மக்கள் போக்குவரத்துக்கான பாதை திறக்கப்படவேண்டியது அவசியம் என்றும், கிளாலி நீரேரியூடாகத் தாம் மேற்கொண்ட கஸ்டமான பயணமே இதனைத் தமக்கு உணர்த்துவதாகவும் சமாதானக் குழுவில் வந்த பேராசிரியர் ஜெயதிலக உயான்கொட தெரிவித்தார். வவுனியா– தாண்டிக்குளம் தடைமுகாமில், அரசாங்கத்தால் தடைநீக்கம் செய்யப்பட்ட பொருட்களைக்கூட, படையினர் தடுப்பதையும் மக்களுக்கு நெருக்கடிகள் கொடுப்பதையும் தான் நேரில் கண்டதாகவும் அவர் பத்திரிகையாளரிடம் கூறினார்.

மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு, சகஜநிலை கொண்டுவரப்பட்டு, கட்டம் கட்டமான பேச்சுவார்த்தைகள் மூலம் இனப்பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்று தலைவர் பிரபாகரன் அவர்கள் அரசுக்கு கடிதம் எழுதியிருந்தார். அவர் 08.12.1994 இல் எழுதிய கடிதத்தில், "சமாதானப் பேச்சுவார்த்தை நிரந்தர சமாதானத்திற்கும் இனப்பிரச்சினையின் தீர்வுக்கும் வழிவகுக்கும் என்று உறுதியாக நம்புகின்றோம்" என்றும் தெரிவித்தார். அதே கடிதத்தில், "பேச்சுவார்த்தையின் ஆரம்பக் கட்டங்களில், எமது மக்கள் எதிர்நோக்கும் உடனடி அன்றாடப் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டும் என்றும் நாம் வலியுறுத்தியிருந்தது தங்களுக்குத் தெரியும். முதற்கட்டப் பேச்சுவார்த்தையில், முன்னைய அரசின் இராணுவ அணுகுமுறையால் உருவாக்கப்பட்ட இனப்பிரச்சினைகளை எமது பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியிருந்தனர். அரசுப் பிரதிநிதிகள், மக்கள் நாளாந்தம் அனுபவிக்கும் கஸ்டங்களை நீக்குவதாக வாக்குறுதி அளித்திருந்தார்கள். ஆயினும், அவர்களுடைய துன்ப துயரங்களை நீக்குவதற்கு அரசு எவ்வித நடவடிக்கையையும் எடுக்கவில்லை. யுத்தப் பிரதேசங்களில் உண்மையான அமைதிச் சூழ்நிலையையும், மக்கள் வாழ்வில் சகஜ நிலைமையையும் உருவாக்குவதற்கு இத்தகைய பிரச்சினைகள் அவசரமாகத் தீர்க்கப்படவேண்டும்.

எமது மக்களுடைய அன்றாடப் பிரச்சினைகள் அதிமுக்கியமானவை என்பதையும் அவை உடனடியாகத் தீர்க்கப்படவேண்டும் என்பதையும் வலியுறுத்த விரும்புகின்றேன். இதுவே, தமிழ்த் தேசியப்பிரச்சினையின் அடிப்படை அம்சங்களைப் பற்றிக் கதைப்பதற்கு முன்னோடியாக அமைதல்வேண்டும்." என்றும் தெளிவுபடுத்தியிருந்தார்.

13.12.1994 இல் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர், தலைவர் பிரபாகரனுக்கு எழுதிய கடிதத்தில், "தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள்மீது எமக்குள்ள ஆழமான கரிசனையையும், அவற்றை எங்கள் சக்திக்கேற்ற வகையிலும், தங்கள் பூரணமான ஒத்துழைப்புடனும் தீர்த்துவைக்க ஆவலோடு இருக்கிறோம் என்பதையும் தங்களுக்கு உறுதிப்படுத்த விரும்புகிறோம்" என்று தெரிவித்திருந்தார்.

இவ் அன்றாடப் பிரச்சினைகள் தீர்க்கப்படாத காரணத்தால், சமாதானப் பேச்சுவார்த்தையில் ஒரு இக்கட்டானநிலை ஏற்பட்டது. 4 ஆம் கட்டப் பேச்சுவார்த்தையைத் தொடங்கமுடியாத முட்டுக்கட்டைநிலை அரசால் தோற்றுவிக்கப்பட்டது. அரசாங்கம் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கான தீர்வை இராணுவத்தின் தந்திரோபாயத் திட்டங்களுடன் (Strategic designs) இணைத்துப் பார்த்தது. யாழ். குடாநாட்டைச்சுற்றி வளைத்துநின்று, பாரிய தாக்குதல் நடத்தி, குடாநாட்டைக் கைப்பற்றவேண்டும் என்ற இராணுவக் குறிக்கோளின் பிரகாரம் பூநகரி முகாமை அகற்றவோ, பாதை திறக்கவோ அரசாங்கம் மறுத்தது. அதேபோன்று கடல்வலயத் தடைச்சட்டங்களையும் இராணுவ நலன்கள்கருதி நீக்கமறுத்தது. அதேபோல் எரிபொருள், விவசாய உரங்கள் போன்ற மக்களின் வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களை, இராணுவப் பொருட்களாகக் கணக்கில் எடுத்து, அவற்றின் மீதான தடைகளை அகற்ற மறுத்து வருகின்றது. இத்தகைய அரசாங்கத்தின் விட்டுக்கொடுக்காத (Intransigent) அணுகுமுறையினால், சமாதானப் பேச்சுவார்த்தை அரசியல் தீர்வைநோக்கி முன்னெடுக்கப்பட முடியாத முட்டுக்கட்டைநிலை தோன்றியது.

இதேவேளை அரசாங்க சமாதானக் குழுவின் தலைவரான குசுமசிறி பாலபட்டபெண்டி, விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளருக்கு கடிதம் ஒன்றை எழுதி அரசாங்கத்தின் ஒருதலைப்பட்ச முடிவுகளைத் தெரிவித்துள்ளார். அதன்பிரகாரம் – பூநகரி முகாம் அகற்றப்படமாட்டாது என்றும், பொருளாதாரத்தடை முற்றாக நீக்கப்படாதென்றும், தடைநீக்கப்பட்ட பொருட்கள் அனுமதிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த அரசியற்றுறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன்,

"பொருளாதாரத் தடைநீக்கம் பேச்சளவிலேயே உள்ளது. தடைநீக்கப்பட்ட எந்த ஒரு பொருளும் இதுவரை முழுமையாக யாழ். குடாநாட்டிற்கு எடுத்துவரப்படவில்லை. மக்கள் போதியளவு பொருட்களைக் கொண்டுவர இராணுவம் அனுமதிக்கவில்லை. அரசாங்கம் இதனை நிவர்த்தி செய்வதாகக் கூறியபோதும் நிறைவேற்றவில்லை. எரிபொருள், உரவகைகள் ஆகியவற்றுக்கான தடைகளை நீக்காமலேயே, பொருளாதாரத்தடை நீக்கப்பட்டதாக அரசு உண்மைக்கு மாறான விடயத்தைத் தெரிவிக்கின்றது.

இராணுவத்தை முற்றாக விலத்திக்கொள்ளாது, இராணுவ முகாமை 500 மீற்றர் மட்டும் தள்ளிக்கொள்வதாகவும், தடைவிதிக்கப்பட்டுள்ள பொருள் தவிர்ந்த ஏனையவற்றை அனுமதிப்பதாகவும் தெரிவித்துள்ளது. எமது கோரிக்கையை நிறைவேற்றுவதன் மூலமே, வடபகுதி புனரமைப்பு என்று கூறுவது நடைமுறைச் சாத்தியமானதாக இருக்கும். எனவே, இவை செய்யப்படாத நிலையில், இத்தகைய ஒருதலைப்பட்சமான அறிவிப்பானது, எமது மனதில் அரசின் போக்குகள் மீது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. இத்தகைய சம்பவங்கள் எமக்கு அரசின் மீது இருந்த நம்பிக்கையைச் சிதறடிக்கச் செய்கின்றது. இத்தகைய சூழலில் நாம் விழிப்புடன் செயற்படாவிடின், அரசு உதவி வழங்கும் நாடுகளை ஏமாற்றி, பெருமளவு நிதியைப் பெற்று, இராணுவ உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கும், படைபலத்தைக் கூட்டுவதற்கும், பாரிய யுத்த நடவடிக்கைகளை தமிழ்ப் பிரதேசங்களில் மேற்கொள்வதற்கும் நாம் வழிசமைத்துக் கொடுத்தவர்களாக இருப்போம். எனவே மக்கள், அரசின் இத்தகைய போலித்தனமான பிரச்சார தந்திரங்களை இட்டு விழிப்பாக இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்" என்றும் கூறினார்.

## சமாதானப் பேச்சுவார்த்தை...

மேற்கண்ட கோரிக்கைகளை விடுத்திருந்தோம். இவற்றை ஏற்று, தாம் நடைமுறைப்படுத்துவதாக அரசதரப்புக் குழுவினர் எம்மிடம் உறுதி அளித்துச்சென்றனர். ஆனால் அவர்கள் தற்போது இதனை எல்லாம் மூடிமறைத்துவிட்டு, சிறிய அளவில் அதிலும் வடக்கு – கிழக்கு மாகாணம் என்று கூறிவிட்டு, தற்போது குறைந்தளவிலான யாழ். மாநகரசபை எல்லைக்குள் புனர்நிர்மாணம் மேற்கொள்வதாகக் கூறியுள்ளனர்.

அடுத்த மாதம் பாரிசில் உதவி வழங்கும் நாடுகளின் முதன்மையான கூட்டம் ஒன்று நடைபெற உள்ளது. அதில் வடகிழக்குப் புனரமைப்பு என்று கூறி, பெருமளவு நிதியைப் பெற்று, சிறீலங்கா அரசு தனது தேவைகளுக்குப் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளது. இதனாலேயே வடக்கில் புனரமைப்பு நடப்பதாக அரசு பொய்ப்பிரச்சாரம் செய்துவருகின்றது என்பதனை எமது மக்கள் நன்கு புரிந்துகொள்ளவேண்டும்" என்றும் தமிழ்ச்செல்வன் கூறினார்.

## தமிழீழப் பெண்களும்...

பொருத்தமானதாகவும், பொருளுள்ளதாகவும் அமைகிறது.

அனைத்துலகப் பெண்கள் நாளை நாம் பெண்ணொடுக்கு முறை வடிவங்களையும், அவற்றிலிருந்து மீள்வதற்கான வழிவகைகளையும் தமிழீழப் பெண்களுக்கு எடுத்து விளக்கி, அவர்களையும் தேசிய, மற்றும் பெண்ணுரிமைப் போராட்டங்களில் அணிதிரட்டுவதற்கான பொதுக் கூட்டங்களையும் கலைநிகழ்ச்சிகளையும் நடத்துகின்ற வகையில் கொண்டாட வேண்டும்.

அடக்கப்பட்ட பெண்களாக இருந்து, விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து, புரட்சிகர சக்தியாக மாறி, இன்று களத்தில் தமது ஆற்றல்களை வெளிப்படுத்தி வரும் விடுதலைப் புலிகள் மகளிர் அணியில் தமிழீழப் பெண்கள் அனைவரும் ஒன்று திரண்டு உழைப்பதன் மூலமே தமிழீழ விடுதலைக்கு வழி அமைப்பதுடன், பெண்களுக்கெதிரான அனைத்து அடக்கு முறைகளையும் உடைத்தெறிய முடியும்.

# குமுறும் உட்கட்சிப் பூசல்கள்

**தென்னிலங்கை அரசியல் களத்தில் இன்று எழுந்துள்ள பலப்பரீட்சை சந்திரிகா குமாரதுங்காவுக்கும் - ரணில் விக்கிரமசிங்காவிற்கும் இடைப்பட்ட ஒன்றல்ல. உண்மையில் ஜே. ஆர் - சந்திரிகா பலப்பரீட்சையின் விளைவே இன்றைய கால்வாரல்களாகும்.**

நிமலராஜன்

தென்பகுதியின் இருமுதன்மையான கட்சிகளிலும் தற்போது பெரியளவில் உட்பூசல்கள் வெளிக்கிளம்பத் தொடங்கியுள்ளன. எந்தக்கட்சி விரைவில் பிளவைச் சந்திக்கும் என்ற கேள்வியே இன்று தென்னிலங்கை அரசியல் வட்டாரங்களில் மேலோங்கியுள்ளது.



ஐக்கிய தேசியக் கட்சியைச்சேர்ந்த பலர், அக்கட்சியைவிட்டு வெளியேற முயற்சிகள் மேற்கொண்டுவருவதும் பொதுசன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த சிலர் கட்சிக்குள் எழுந்துள்ள கருத்துவேற்றுமைகளின் உச்மாகத் தாங்கள் கட்சியைவிட்டு வெளியேற நினைத்தாலும் – வெளியேறி என்ன பயன் காணப்போகிறோம் என்று சங்கடப்பட்டுக்கொண்டிருப்பதும் தென்னிலங்கை அரசியல் மேடையில் அரங்கேறும் இறுதிக் காட்சிகளாகும்.

ஐக்கிய தேசியக் கட்சியைவிட்டு விலகுபர்கள், பொதுசன ஐக்கிய முன்னணிக்குள் நுழைவதனால், அரசியல் ஆதாயம் அடையலாம் எனக்கருதினாலும் –

பொதுசன ஐக்கிய முன்னணியிலிருந்து விலகுபவர்கள், அரசியலைவிட்டே விலகுவதையே எண்ணிவருவதாக அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுன்றது.

ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்தவரை, அதன் உத்தியோகபூர்வமான தலைவராக ரணில் விக்கிரமசிங்கா இருந்தாலும் – அதன் மறைமுகமான தலைவராக இருந்துவருபவர் முன்னாள் சனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஆவார்.

ஜே. ஆர். – ரணில் நெருக்கமான உறவினால், அதிருப்தியுற்ற பிரேமதாசா ஆதரவாளர்கள் கட்சியைவிட்டு, ஜே. ஆரின் வழிநடத்தலில் ரணிலால் விலக்கப்படுவதற்கு முன்னால், தாமாகவே விலகிவிடத் திட்டம் வகுத்துள்ளார்கள் எனத்தெரியவருகின்றது.

இவர்களோடு ரணிலுக்குக் கிடைக்கவேண்டிய கட்சித் தலைமைப் பதவியையும் எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும் காமினி திசாநாயக்காவுக்குத் தட்டிப்பறித்துக்கொடுத்த பல ஐ. தே. க. பிரமுகர்களும் பிரேமதாசா ஆதரவாளர்களின் வழியைப் பின்பற்ற முயற்சித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அரசு அமைத்துள்ள ஊழல்மோசடி ஆணைக்குழுவின் விசாரணைகளிலிருந்து தப்புவதற்காக, வேறு சில ஐ. தே. க. பிரமுகர்கள் சிலர், அரசுடன் இணைந்துவிடும் தந்திரோபாயத்தைக் கடைப்பிடிக்க முயற்சித்துவருவதாகவும் கூறப்படுகின்றது.

அரசு ஊழல் தொடர்பாக எடுக்கும் விசாரணைகளுக்கு ஐ. தே. க. முழுமையாக ஒத்துழைக்கும் என, ரணில் விக்கிரமசிங்கா அறிவித்திருப்பதும் அவர்களை அச்சத்திற்குள் தள்ளியிருக்கின்றது□

மேற்கூறப்பட்டவைகளில் பொதுசன ஐக்கிய முன்னணியுடன் இணைந்துவிடுவதற்கு விரும்பிவரும் ஐக்கிய தேசியக் கட்சிப் பிரமுகர்கள், ஆளுங்கட்சியின் அமைச்சர்களுடன் பேச்சுக்களைத் தொடங்கியும் உள்ளனர்.

குறிப்பிட்ட ஐ. தே. கட்சியினருடனான பேச்சுக்களின் முடிவை, சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா ஆவலுடன் எதிர்பார்த்திருப்பதாகவும் தெரியவருகின்றது.

எனினும் ஐ. தே. கட்சியினருடனான பேச்சுக்கள் தனக்கு பூரண திருப்தியைத் தரவில்லை என்பதால், தானே நேரடியாக ஐ. தே. கட்சியினருடன் சந்திப்பை நடத்த, சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தீர்மானித்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மறைமுகமாக – பொதுசன ஐக்கிய முன்னணிக்குள் முறுகல்நிலை இன்னும் தீவிரமடைந்துவருகின்றது. ஒன்றில் முன்னணியில் இணைந்துள்ள கட்சிகளோ – இல்லையேல் தனியாக கட்சிப் பிரமுகர்களோ வெளியேறக்கூடிய சூழ்நிலை அங்கு உருவாகியுள்ளது.

இவ்வாறு வெளியேற்றம் நடைபெறும்பட்சத்தில், வெளியேறுபவர்களைத் தொடர்ந்தும் தக்கவைத்துக்கொள்ளும் முயற்சிகளில் இறங்காமல், ஐக்கிய தேசியக் கட்சியைவிட்டு வருபவர்கள் மூலம் இவர்களது இடங்களை நிரப்பிக்கொள்ளலாம் என சந்திரிகா குமாரதுங்கா கருதுவதாகவும் கூறப்படுகின்றது.



தனது கட்சி உறுப்பினர்களைக் கைவிட்டு, ஐ. தே. கட்சியினை நம்பும் சனாதிபதி சந்திரிகாவின் செயற்பாடுகள், கட்சிக்குள் இன்னும் சிக்கலை உருவாக்கும் என்றே அவதானிகள் கருதுகின்றனர்.

இதேமாதிரியான அரசியல் விளையாட்டும் ஐ. தே. கட்சிப் பக்கத்தில் நடப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. தன்னைவிட்டுப் பிரியும் ஐ. தே. கட்சியின் முதன்மையான தலைவர்களைப் பற்றிக் கவலைப்படாமல், பொதுசன ஐக்கிய முன்னணியைப் பிரித்து, அரசுக்கு ஆதரவு வழங்கும் கட்சிகளைத் தன்பக்கம் இழுப்பதிலேயே ரணில் விக்கிரமசிங்காவும் கவனத்தைச் செலுத்திவருகின்றார்.

முற்றுமுழுதாக ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் ஆலோசனையின்படி நடக்கும் இக்கவரல் முயற்சிகள் மூலம், பாராளுமன்றத்தில் அரசுக்குப் மிகப்பெரிய தடையொன்றை ஏற்படுத்த, ரணில் ஆர்வம் காட்டி வருவதும் கவனிக்கத் தக்கது. சனாதிபதி ஆட்சி முறையை மாற்றி, பாராளுமன்றத்திற்கு அதிகாரம் தேடிக் கொடுக்கும் அரசின் முயற்சிகளுக்கு இவ் வாறான நிலை ஓர் தடைக்கல்லாக இருக்கும் என்பது வெளிப்படையானது.

இதன்மூலம் பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றைக்கொண்டுவருவதும் ஐ. தே. கட்சிக்கு எளிதாக இருக்கலாம்.

அரசுக்கு ஆதரவான சிறுகட்சிகளின் திசைகளைத் திருப்புவதன் மூலம், அரசிற்கு மக்களிடையே ஆதரவுத்தளத்தைப் பலவீனப்படுத்தவும் முடியும் என்றவாறு ஐ. தே. கட்சி கருதுவதாக, அரசியல் வட்டாரங்களில் கூறப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

ஒன்றுக்கொன்று இருகட்சிகளின் தலைமைகளும் தங்களைப் பலப்படுத்தும் முயற்சிகளில் இறங்காமல், எதிர்த்தரப்பைப் பலப்படுத்தும் முயற்சிகளில் இறங்கியுள்ளமை இதனால் தெளிவாகின்றது.

மக்களின் அபிலாசைகளை சந்திரிகா அரசு தொடர்ந்தும் பூர்த்திசெய்யத் தவறிவருவதாக பரவலாகத் தெரிவிக்கப்பட்ட இச்சூழ்நிலையில் –

தொடர்ச்சி 10 ஆம் பக்கம்...

# அறிவுச்சோலையில் பூத்த நினைவுப் பூக்கள்



காந்தருபன் அறிவுச்சோலையைச் சேர்ந்த சிறார்கள் சிலர், தாங்கள் ஏதிலிகளாக்கப்படுவதற்குக் காரணமாகவிருந்த மறக்கமுடியாத சம்பவங்களைப் பகிர்ந்துகொண்டபோது பெற்ற விபரங்களே, 'அறிவுச்சோலையில் பூத்த நினைவுப் பூக்கள்' என்ற தலைப்பின் கீழ் வெளியிடப்படுகின்றது.

**வை. சிவா**

எமது கிராமம் கல்வியங்காடு, எனக்கு நான்கு சகோதரர்கள் உள்ளனர். எனது பெரிய அண்ணா விடுதலைப் புலிகள் இயக்கத்தில் ஒரு போராளியாக உள்ளார். என்னுடைய அப்பா வைத்தியசாலையில் வேலைசெய்து இருதயநோய் காரணமாக இறந்துவிட்டார். எமக்கு மிகவும் கஸ்ரமானநிலை ஏற்பட்டது. அம்மா வேலைசெய்தும் மாமாக்களின் உதவியோடும் வாழ்ந்துவந்தோம், அம்மாவின் தம்பி எனப்படும் மாமா கொழும்பில் வேலைசெய்த வேளையில் அவருடன் இருந்த சிலர் தேனீருக்குள் நஞ்சைக்கலந்து, மாமாவிற்கு கொடுத்தனர். மாமா தேனீரைக் குடித்துவிட்டு குளிப்பதற்குச்சென்று சவர்க்காரம் போட்டுக்கொண்டிருக்கும்போது, தொட்டியில் விழுந்து இறந்துவிட்டார். நாம் இச்செய்தி கேட்டு கல்வியங்காட்டிலிருந்து கொழும்புக்குச் சென்றோம், நானும் அம்மாவும் அண்ணாவும் றெயினில் ஏறும்போது, அண்ணா தவறுதலாக சறுக்கி விழுந்துவிட்டார். மீண்டும் அவரைத் தூக்கிக்கொண்டு கொழும்பு சென்றோம். அங்கு சென்றதும் மாமாவின் உடல் கிடைக்கவில்லை. மீண்டும் ஊருக்கு வந்துவிட்டோம், எமக்கு மிகவும் கவலை, வீட்டில் ஒரே கஸ்ரம் நான் முத்துத்தம்பிப் பாடசாலையில் சேர்க்கப்பட்டேன் (திருநெல்வேலி). அங்கு கல்வி கற்று பின்னர் புலி மாமாக்களின் உதவியோடு காந்தரூபன் அறிவுச்சோலையில் கல்வி கற்றுவருகிறேன். நான் இங்கு எவ்வித கஸ்ரமுமின்றி மிகவும் உற்சாகமாக கல்வி கற்கிறேன். நான் நன்றாகப் படித்து வாலிபனாக வளர்ந்து அறிவு உள்ள ஒரு மாணவனாக வீட்டிற்குச் சென்று அம்மாவையும் சகோதரங்களையும் மகிழ்விக்கவேண்டும் என்பதே எனது ஆசையாகும்.

வை. சிவா

(தொடரும்......)

# புதிய அரசின் வெளியுறவுக் கொள்கையும் இனப்பிரச்சினைக்கான சமாதானத் தீர்வும்

17 ஆண்டுகளின் பின்னர் ஆட்சிக்கு வந்துள்ள சுதந்திரக்கட்சி தலைமையிலான அரசும் உள்நாட்டு அரசியல், பொருண்மியம் என்பவற்றிற்கான புதிய கொள்கையோடு, தமது புதிய வெளியுறவுக் கொள்கையையும் வகுக்க வேண்டியுள்ளது. இவ்வெளியுறவுக் கொள்கையானது, கெடுபிடிப்போரின் முடிவின் பின் மாற்றமடைந்து வரும் புதிய உலக ஒழுங்கிற்கேற்பவும், அரசு கடைப்பிடிக்கும் என உறுதி வழங்கியுள்ள திறந்த பொருண்மியக் கொள்கைக்கு ஏற்பவும், இலங்கையில் நடைபெற்றுவரும் உள்நாட்டுப் போருக்கு ஏற்பவும் வகுக்கப்படவேண்டிய அவசியம் அரசிற்குண்டு.

இந்த வகையில் இறுதியாக சுதந்திரக்கட்சி ஆட்சியில் இருந்த காலமான 1970 -1977 ஆம் ஆண்டு கால வெளியுறவுக் கொள்கையில் இருந்து மாற்றமுடையதாகவும், கடந்த 17 ஆண்டுகால ஐக்கிய தேசியக் கட்சியின் வெளியுறவுக் கொள்கையில் இருந்து வேறுபட்டதாகவும், இருக்க வேண்டிய நிர்ப்பந்தம் உண்டு. ஏனெனில் அன்று சுதந்திரக்கட்சி ஆட்சியில் இருந்தபோது இருந்த உள்நாட்டு, வெளிநாட்டு அரசியற் சூழ்நிலை இன்றில்லை என்பதோடு, கடந்த கால ஐ. தே. கவின் வெளியுறவுக் கொள்கையும் திருப்திகரமானதாக பின்பற்றக்கூடியதாக இருக்கவில்லை எனலாம்.

இதேசமயம் சிறீலங்கா அரசின் வெளியுறவுக் கொள்கையானது, முன்னர் எப்பொழுதும் இல்லாத அளவிற்கு இன்று முக்கியம் பெற்றதாக மாறிவிட்டது. தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டம் பெருவளர்ச்சி கண்டுள்ள இன்றைய நிலையில், முன்னைய கால வெளியுறவுக் கொள்கைகளைப் போன்று நேரத்திற்கு நேரம் மாற்றிக்கொள்ள முடியாத ஒரு அரசியற் சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது.

இதனைப் புதிய அரசும் தெளிவாகவே விளங்கிக் கொண்டிருப்பதாகவே தெரிகின்றது. இதனை வெளிக்காட்டுமாப் போன்றே, வெளிவிவகார அமைச்சரான லக்ஸ்மன் கதிர்காமர் **"நிரந்தரமான வெளியுறவுக் கொள்கை வகுக்கப்படும்"** என அறிவிப்பு விடுத்துள்ளார்.

**"வெளியுறவுக் கொள்கையில் இந்தியாவிற்கு முதன்மையான இடம் என்பதே இலங்கையின் எதிர்கால அரசியலை நிர்ணயிக்கப் போகின்றதொன்றாக அமையும் முதன்மையான விடயமாகப் போகின்றது."**

இந்த வகையில் புதிய அரசின் வெளியுறவுக்கொள்கை பற்றி அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் நான்கு விடயங்களை சுட்டிக் காட்டியுள்ளார்.

**1. நாங்கள் அணிசேராக் கொள்கையைக் கடைப்பிடிக்க உறுதியாக இருக்கின்றோம்.**

**2. எங்கள் வெளியுறவுக் கொள்கையில் இந்திய உறவிற்கு முக்கிய இடம் உண்டு.**

**3. ஆசிய நாடுகளுக்கான உறவுகளைச் சீர்படுத்த எண்ணியுள்ளோம். இந்த உறவு நிலை பல காலமாகக் கவனிக்கப்படாமல் இருந்தது.**

**4. மேற்கத்தைய சந்தை வாய்ப்புக்களை இலங்கையில் ஏற்படுத்தவும் இடமளிக்கப்படும்.**

இந்தவகையில் **"அணிசேராக் கொள்கையைக் கடைப்பிடித்தல்"** என்பது புதிய உலக ஒழுங்கில் முக்கியமானதொரு இடத்தைப்பிடிக்குமா என்பதும், அது விவாதத்திற்குரிய ஒன்றாகவும் தெரியவில்லை. ஏனெனில் அணிசேராக் கொள்கை என்பது கெடிபிடிப்போர் காலத்தில் உருவாகிய ஒரு கொள்கை. ஆகையினால் இன்றைய நிலையில் உலக அரசியலில் அதன் முக்கியத்துவம் மறுக்கப்பட்ட தொன்றாகவே உள்ளது.

**"நிரந்தரமான வெளியுறவுக் கொள்கை வகுக்கப்படும்."**

**- லக்சுமன் கதிர்காமர்**

அடுத்ததாக, ஆசிய நாடுகளுடனான உறவு என்பது இந்தியா, சீனா, யப்பான், தென்கொரியா, பாகிஸ்தான் மற்றும், அரபு நாடுகளும் தவிர்ந்த ஏனைய நாடுகள் பற்றிக் குறிப்பவையாகவே இருக்க முடியும். இதில் சோவியத் ஒன்றியத்தின் சிதைவின் பின் உருவாகிய ஆசிய நாடுகளும் தென்கிழக்காசிய நாடுகளும் அடங்கக்கூடும். இப்புதிய உறவுகள் சிறீலங்கா அரசியலில் தாக்கங்களை விளைவிக்கக் கூடியதாக அமையப் போவதில்லை.

இதேசமயம் கடந்த ஐ. தே. க. ஆட்சியின் போது ஆசிய நாடுகள் வரிசையில் சீனா, யப்பான், தென்கொரியா என்பன ஏதோ ஒரு வகையில் முக்கிய பாத்திரத்தை வகித்து வந்தன. யப்பானும் கொரியாவும் முக்கிய முதலீட்டாளர்களாக இருந்தவேளை, சீனா பிரதான ஆயுத விநியோகஸ்தராக இருந்தது.

இந்நிலையானது எதிர்காலத்திலும் பேணப்படுவதற்கான வாய்ப்புக்கள் உண்டு. கடந்த கால உதவிகள் போன்றே புதிய அரசிற்கு இந்நாடுகள் உதவக் கூடும். அதேவேளை, சீனா முன்னைய சுதந்திரக்கட்சி ஆட்சிக் காலத்தில் சிறீலங்காவின் நெருங்கிய நண்பனும்கூட.

அடுத்ததாக, மேற்கத்தைய சந்தை வாய்ப்புக்களை இலங்கையில் ஏற்படுத்த இடமளிக்கப்படும் என்பது திறந்த பொருண்மியக் கொள்கையுடனும் சிறீலங்காவிற்கான மூலதன வருகை என்பவற்றுடனும் தொடர்புடையதாகும். இவ்விடயம் இன்றைய நிலையில் மனித உரிமைகள் மற்றும் சனநாயக உரிமைகள் என்பவற்றுடன் தொடர்புடையதாகவே உள்ளது.

ஆனால் வெளிவிவகார அமைச்சர் கூறிய வெளியுறவுக் கொள்கையில் இந்தியாவிற்கு முக்கிய இடம் என்பதே இலங்கையின் எதிர்கால அரசியலை நிர்ணயிக்கப் போகின்றதொன்றாக அமையும் முக்கிய விடயமாகப் போகின்றது. இது சிறீலங்கா அரசின் உள்நாட்டுக் கொள்கைக்கும் வெளிநாட்டுக் கொள்கைக்கும் இடையிலான முரண்பாடாகக்கூட அமைந்துவிடக் கூடியதாகும். ஏனெனில் இந்தியாவுடனான நெருக்கமான நட்புறவு என்பது. இலங்கையின் உள் விவகாரங்களில் இந்தியாவின் அழுத்தங்களை எவ்வளவு தூரம் அனுமதிப்பது என்பதைப் பொறுத்த விடயமாக இருக்கும்.

இதேசமயம் இந்திய - இலங்கை உறவில் சுதந்திரக் கட்சியின் ஆட்சிக்காலங்கள் மிக நெருக்கமான உறவைக் கொண்டவையாகும். சுதந்திரமடைந்த காலத்தில் இருந்து இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் இருந்து வந்த தப்பபிப்பிராயம் சுதந்திரக்கட்சி ஆட்சிக்காலத்தில் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவினாலேயே தீர்த்து வைக்கப்பட்டதெனலாம்.

**"விடுதலைப் புலிகளுடன் நடாத்தும் பேச்சுவார்த்தைகள் குறித்து எச்சரிக்கையாக நடந்துகொள்ளுமாறு சந்திரிகா அரசை இந்திய அரசு எச்சரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது; இந்த நிலையில் இந்தியாவுடனான நட்புறவிற்கு முதன்மையான இடமும் விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை என்பதும் ஒன்றிற்கு ஒன்று முரண்பட்ட அம்சங்களாகவே உள்ளன."**

இலங்கை அணிசேராக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் என்ற பண்டாரநாயக்காவின் அறிவிப்பே இந்நட்பிற்குக் காரணமாக அமைந்தது.

இதன் பின்னர் சுதந்திரக் கட்சி ஆட்சி புரிந்த எல்லாக் காலகட்டத்திலும் அநேகமாக இந்தியாவினதும் இலங்கையினதும் நட்புரிமை மிகவும் நெருக்கமானதாகவே இருந்தது. **சீன - இந்தியப் போர், இந்திய - பாகிஸ்தான் போர்** (1971 டிசம்பர்) ஆகியவற்றின் போது சுதந்திரக்கட்சி அரசுகள் இந்திய சார்புக் கொள்கையை எடுக்காது விட்டாலும், உறவு நிலையில் பெரும் பாதகமான விளைவுகள் ஏற்படவில்லை என்றே கூறவேண்டும்.

மாறாக இலங்கை - இந்திய உறவில் பல முக்கியமான உடன்பாடுகளும் ஒத்துழைப்புகளும் நிறைவேற்றிய காலப்பகுதிகள் சுதந்திரக்கட்சி ஆட்சிக்காலமே ஆகும். 1964 இல் இடம்பெற்ற மலையக மக்கள் தொடர்பான **சிறிமாவோ -சாஸ்திரி ஒப்பந்தம்,** 1974 இல் செய்துகொள்ளப்பட்ட **கச்சதீவை இலங்கைக்கு ஒப்படைப்பதான ஒப்பந்தம்** போன்ற ஒப்பந்தங்கள் கையொப்பம் இடப்பட்டன. அத்தோடு 1971 இல் இடம்பெற்ற ஜே. வி. பி. கிளர்ச்சியை அடக்க இந்தியா நேரடியாகவே படை உதவியும் புரிந்திருந்தது.

இந்த வகையில் சுதந்திரக் கட்சியின் தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணி தனது வெளியுறவுக் கொள்கையை இந்தியாவிற்குச் சார்பாக அமைத்துக் கொள்வதில் ஆச்சரியமளிக்கக்கூடியது ஒன்றும் இல்லைதான். ஆனால் சுதந்திரக்கட்சி, முன்னர் இந்தியாவுடன் நல்லுறவு வைத்த போது இல்லாத அரசியற் சூழ்நிலை இன்று நிலவுவது முக்கியமானதாகும்.

அதாவது கடந்த 17 ஆண்டு கால இந்திய -சிறீலங்கா உறவில் பல உறவுகளும் -பிரிவுகளும்



மோதல்களும் -முறுகல்களும் ஏற்பட்டன என்பதோடு, இவ்விரு நாடுகளின் உறவின் பரிமாணமும் மாறுபட்டுவிட்டது.

இக்காலப்பகுதியில் என்றுமில்லாதவாறு சிறீலங்காவின் ஐ. தே. கட்சி அரசிற்கும், இந்திய அரசிற்கும் இடையில் ஏற்பட்ட உறவானது இந்திய இராணுவத்தை இலங்கையில் தரையிறக்கும் அளவிற்குக் கொண்டு வந்தது. இதற்காகச் செய்து கொள்ளப்பட்ட **இந்திய -சிறீலங்கா உடன்பாடு** இலங்கை அரசியலில் பல பாதிப்புக்களை விளைவித்தவேளை, இந்தியாவிலும் அது எதிரொலித்தது.

தமிழீழத்திலிருந்து
ஜெயராஜ்

ஆயினும், அதே கட்சியின் ஆட்சியின்போதே இந்திய இராணுவம் அவமானப்பட்டு வெளியேறவும் வேண்டி வந்தது.

இறுதியாக 17 ஆண்டுகால ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியின் முடிவின்போது, இலங்கை தொடர்பான இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையானது தனித்துவமாக சிறீலங்கா அரசுடன் சம்பந்தப்பட்டதாக மட்டுமல்ல, விடுதலைப் புலிகளுடனும் தொடர்புபட்டதாக முப்பரிமாணங்களைக் கொண்டதாக மாறியிருந்தது.

அதாவது பெருமாற்றங்களுக்கெல்லாம் காரணமாக இருந்த தமிழர் தேசிய இன விடுதலைப் போராட்டம் தொடர்பாகவும் தனது நிலைப்பாட்டை உள்ளடக்கியதாகவே இந்தியா, இலங்கை தொடர்பான வெளியுறவுக் கொள்கையை வகுக்க வேண்டியிருந்தது.

இந்திய இராணுவம் இலங்கையில் இருந்து வெளியேறிய பின்னர், சிறீலங்காவுடனான உறவில் இந்திய அரசு ஒரு மௌனமான போக்கையே கடைப்பிடித்து வந்தது. சிறீலங்காவின் முன்னாள் சனாதிபதியான ஆர். பிரேமதாசா இந்தியாவுடன் ஆரம்பத்தில் முரண்பட்ட போக்கைக் கொண்டிருப்பினும், தனது நான்காண்டு ஆட்சிக்காலத்தின் இறுதி ஆண்டில் இந்தியாவுடனான உறவை நெருக்கமாகப் பேணவே முயன்றார். ஒருவகையில் இந்தியாவுடனான உறவை சீர்செய்திருந்தார்.

சிறீலங்காவைப் பொறுத்தும் இவ்விவகாரம் இந்தியாவுடன் பேசப்படுவதில் இருந்து தவிர்க்க முடியாத ஒரு நிலையை உருவாக்கி இருந்தது. தமிழர் தேசிய இனவிடுதலைப் போராட்டத்தைத் தனித்து நின்று ஒடுக்க முடியாது என்ற நிலையில், இந்தியாவின் ஒத்துழைப்பு அதற்கு அவசியமாகவேபட்டது. சனாதிபதி பிரேமதாசா இந்தியாவிடம் சரணடைய வேண்டிய நிலையும் அவ்வாறே ஏற்பட்டது. இந்நிலையில் டி. பி. விஜேதுங்கா பதவி ஏற்றபோதும் மாற்றம் எதையும் காணவில்லை.

இந்நிலையில் தான் சந்திரிகா அரசின் உள்நாட்டுக் கொள்கைக்கும் வெளிநாட்டுக் கொள்கைக்கும் இடையில் முரண்பாடு எழுகிறது.

அதாவது சந்திரிகா குமாரதுங்கா தலைமையிலான அரசு, விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் நேரடியாக நடாத்தும் பேச்சுவார்த்தைகள் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சியை இந்திய அரசு அனுமதிக்குமா? என்பதே கேள்வியாகும்.

ஏற்கனவே விடுதலைப் புலிகளுடன் நடாத்தும் பேச்சுவார்த்தைகள் குறித்து எச்சரிக்கையாக நடந்து கொள்ளுமாறு சந்திரிகா அரசை இந்திய அரசு எச்சரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த நிலையில் இந்தியாவுடனான நட்புறவிற்கு முதன்மையான இடமும் விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை என்பதும் ஒன்றிக்கு ஒன்று முரண்பட்ட அம்சங்களாகவே உள்ளன.

இந்தவகையில் சந்திரிகா அரசு வெளியுறவுக் கொள்கையில் எத்தகைய அளவிற்கு இந்தியாவை இலங்கையின் உள் விவகாரங்களில் அனுமதிக்கப் போகின்றது என்பதைப் பொறுத்தே விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தையின் முன்னேற்றம் தங்கியுள்ளது.

மறுவளமாகக் கூறுவதானால், விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தையை இந்தியா எவ்வளவு தூரம் அனுமதிக்கப் போகின்றது என்பதைப் பொறுத்தே பேச்சுவார்த்தையின் முன்னேற்றம் அமையும். ஆனால் இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியாவின் ஆலோசனையைக் கேட்பதற்கு முற்படின், அன்றி அவர்களின் ஆலோசனையின் பெயரில் நடக்க முற்படின், அது சந்திரிகா அரசு இவ்விடயத்தில் எடுத்த முன்முயற்சிகளைப் பாதிப்பு அடையச் செய்வது தவிர்க்க முடியாது போகலாம். ■

(நன்றி:ஈழநாதம்)

# அனைத்துலக பெண்கள்

## தமிழீழப் பெண்களும் அனைத்துலகப் பெண்கள் நாளும்

கடந்த 85 ஆண்டுகளாக: மார்ச் 8ஆம் நாள், உலகின் பெரும்பாலான நாடுகளில் பெண்கள் ஒருமைப்பாட்டு நாளாக, பெண்கள் எழுச்சி நாளாக கொண்டாடப்பட்டு வருகிறது. 1911 ஆம் ஆண்டிலிருந்து மார்ச் 8 ஆம் நாள் அனைத்துலக உழைக்கும் பெண்கள் நாளாக அறிவிக்கப்பட்டு, சமூக, பொருளாதார, அரசியல் துறைகளில் ஆண்களுக்கு நிகராக சம உரிமைகளைப் பெறும் போராட்டத்திற்கு, பெண்களை அணிதிரட்டும் ஒருமைப்பாட்டு நாளாக பெண் அமைப்புக்களால் கொண்டாடப்பட்டு வருகிறது. தொடக்கத்தில் இந்த உயரிய நோக்கங்களுக்காகத் தொடங்கப்பட்ட அனைத்துலகப் பெண்கள் நாள் நாளடைவில் பல நாடுகளில், பெண்களுக்காகப் பெண்களால் நடத்தப்படும் விழாவாக மாறிவிட்டது. உழைக்கின்ற பெண்களன்றி, மேல் தட்டு வர்க்கத்தைச் சேர்ந்த அரசியல் வாதிகள், அமைச்சர்களின் மனைவிமார் தலைமைதாங்கி நடத்தும் விழாவாகி விட்டது. ஆடம்பரமாக வாழும் பெண்கள் நடத்தும் விழாக்களில் உழைக்கும் பெண்களின் உணர்வுகளுக்கு இடமேது?

தமிழீழத்தில் அனைத்துலகப் பெண்கள் நாளைக் கொண்டாடுகின்ற நாம், அந்நாள் தொடங்கப்பட்டதினதும், நடத்தப்படுவதினதும், நிலைகளை உணர்ந்து செயற்பட வேண்டும். உலகத்திலுள்ள பெண்கள் எதிர் நோக்குகின்ற இன்னல்கள் இடர்களைவிட தமிழீழம், இந்தியா போன்ற நாடுகளில் பெண்கள், சமூக-பொருளாதாரத் துறைகளில் பேரிடர்களை எதிர்கொண்டு வருகின்றனர். சீதனக்கொடுமை, கைம்மை பேணல், மறுமணமறுப்பு, கல்வி உரிமை மறுப்பு போன்ற மேலதிக அழுத்தங்களால் அல்லலுறுகின்றனர்.



தமிழீழப் பெண்களைப் பொறுத்தவரை பெண்சிசுக்கொலைகள், சீதனக்கொலைகள், உடன் கட்டையேறுதல், சின்ன வயதுத் திருமணம் போன்ற இந்தியப் பெண்கள் எதிர் கொள்ளும் காட்டுமிராண்டித்தனமான கொடுமைகளை எதிர்கொள்ளாத போதிலும் சீதனம், மறுமணமறுப்பு, மதக்கோட்பாடுகள், சடங்குகள், பாலியல் வன்முறை போன்ற பெண்ணொடுக்கு முறைகளை எதிர்கொண்டு வருவதுடன், அரசியல் ரீதியில் தேசிய ஒடுக்கு முறைக்கும் உள்ளாகி வருகின்றனர்.

ஏனைய நாடுகளில் வாழ்க்கையை மேம்படுத்த போராட்டம் நடத்துகையில், எமது பெண்கள் வாழ்க்கை நடத்துவதற்கே போராட வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். ஏனைய நாடுகளில் பெண்கள் எதிர்கொண்டுவரும் ஒடுக்கு முறைகளுடன் சிங்கள ஏகாதிபத்தியப் படைகள், தமிழீழப் பெண்கள் மீது நடத்தும் பாலியல் வன்முறைகள், அடக்கு முறைகள், அவற்றை மேற்கொள்ளும் சிங்களப்படைகளுக்குத் துணையாகச் செயற்படும் துரோகப் படைகளின் இழிசெயல்கள், சிங்கள அரசின்

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்...




உயிரைத் திரியாக்கி ஊனை நெய்யாக்கி
ஊருக்கு விளக்கேற்றும் பெண்களடி-பெண்ணே!
உன்னை அழைக்கிறார், ஏந்து இலட்சியச் சுடரை
இதயநாதம் தமிழீழமாகட்டும்! இனி உன்னினம் விடியட்டும்!

உலக மக்கள் தொகையில் அ
பெண்களுக்கு எதிராகக்
அடக்குமுறைகளை எதிர்த்து, பெ
அரசியல் சமத்துவத்திற்காகப் போரா
பெண்கள் அமைப்புக்கள் தோன்றின.
மாநாடுகளை நடாத்தி, பெண்ணொடுக்கு
தூக்கி, வீறுடன் போராடிவந்துள்ளன.
தலைநகரான கோபன்கேகனில் நடை
சோசலிஸ்ட் பெண்கள் மாநாட்டில்,
வெளிப்படுத்திய கருத்துக்கமைய, ஒவ்
நாளை, அனைத்துலகப் பெண்கள் நா
எடுக்கப்பட்டது. அம்முடிவிற்கேற்பவே
அடக்குமுறைக்கெதிராகப் போராட,
எழுச்சிநாளாக அனைத்துலகப்
கொண்டாடப்பட்டுவருகின்றது. எமது
விடுதலைப் புலிகளின் தலைமையின்
காலத்திலிருந்து தமிழீழத்திலும்,
அனைத்து அடக்குமுறைகளுக்கு
குரலெழுப்பப்படுகின்றது. கடந்த எட்ட
பெண்கள் நாள் தமிழீழத்தில்
கொண்டாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது

## உன்னா

"நெஞ்சை நிமிர்
நிலவுக்குக் கை
கொஞ்சி மகிழ்
குளிர் நிலவைப்
உன்னால் முடியு
உலகத்தைப் பு
உன்னால் முடியு
உன்னாலே முடி

## கண்களை
## விழிநீரைத் து

பெண்ணே! கண்களை
விழிநீரைத் துடைத்து
அதில் திரிபோட்டு வி
உலகம் உனக்குத் தி
விலங்கிடப்படாத கை
உனது விடுதலைக்குத்
"என்னை விடுதல்ல
என்றாவது 'மகஜர்' கெ
அதுகூட இல்லை.
வளையலும், மெட்டி
உனக்கு வடிவுதான்.
அதனால்தானே,
சேலைக்கடைப் பொம்
காலம் கழிக்கின்றாய்.
எனக்குத் தாய்... இவ்
அடுத்தவனுக்கு அக்கா
எத்தனை அவதாரங்கள
என்றாலும் அடங்கிய
எத்தனை யுகங்களாக..
புல்லாகி, பூடாய், புழுவ
செல்லாத வாழ்வு உன
உன் ஊழிக்கூத்து எப்

பெண் ஒடுக்குமுறை
பிரச்சினை. நீண்ட
பண்பாட்டு வாழ்வில்
சமூகக்கொடுமை. இந்
வேரோடு பிடுங்கி எ
உறுதிபூண்டு நிற்கிறது.
வெற்றிகரமாகச் சாத
பெண்களின் ஆதரவும்
தமிழீழப் பெண்ணின
இயக்கத்துடன் அணி
முன்னெடுக்க முன்வரவே
-தமிழீழத் தேசியத் த

ரப்பங்கினருக்கு மேலாகவுள்ள
கட்டவிழ்த்துவிடப்பட்டிருக்கும்
களின் சமூக, பொருண்மிய,
மேலைத்தேய நாடுகளில் பல
வ்வமைப்புக்கள் ஆண்டுதோறும்
முறைக்கு எதிராகப் போர்க்கொடி
910 இல் டென்மார்க் நாட்டின்
இரண்டாவது அனைத்துலக
கிளாரா செட்சின் அம்மையார்
வாரு ஆண்டும் மாரச் எட்டாம்
க் கொண்டாடுவதென்று முடிவு
1911 ஆம் ஆண்டிலிருந்து
பெண்களை அணிதிரட்டும்
பெண்கள் நாள்
தேசிய விடுதலைப் போராட்டம்,
முனைப்புப்பெறத் தொடங்கிய
மிழீழப் பெண்களுக்கெதிரான
எதிராக இதேநாளில்
நாள் அன்றும் அனைத்துலகப்
மிகவும் உணர்வுபூர்வமாகக்

## முடியும்

து.
ட்டு.
தற்கு
டித்துக் கொள்.
ம்
ட்டிவிட
ம்
முமம்மா."



## த் திறந்து
## டைத்து எறி

திற.
றி.
கேற்று.
தவெளிச் சிறைச்சாலை.
நீ.
தி குறிக்கவில்லை.
ய்"
த்தாயா?
, கனகாம்பரமும்
போலக்
ாகுவனுக்குத் தாரம்...
. மற்றவனுக்கு மகள்...
கின்றாய்.
ாழ்வுதான்.
கி, மரமாகி
கு?
யாது?

என்பது, ஒரு சமூகப்
நெடுங்காலமாக எமது
ழுப்புரையோடி நிற்கும்
ச் சமூக அநீதி யை
ரிய எமது இயக்கம்
இந்த இலட்சியத்தை நாம்
த்து முடிப்பதாயின்,
பங்களிப்பும் அவசியம்.
ம் எமது விடுதலை
ர்ந்து, இந்தப் புரட்சியை
ண்டும்.
லைவர் வே.பிரபாகரன்

# நாளை முன்னிட்டு...

அனைத்துலகப் பெண்கள் நாள்

# ஆழமாகப் புரிந்து கொள்வோம்

1911 ஆம் ஆண்டிலிருந்து உலகிலே பெண்களுக்கென ஒரு நாள் பிரகடனப்படுத்தப்பட்டு, கைக்கொள்ளப்பட்டு வருகின்றது.



தொடக்கத்தில் ஊதியம், ஓய்வு வேண்டும் என்று ஒரு சில கோரிக்கைகளுடன் கைக் கொள்ளப்பட்டுவந்த அனைத்து லகப் பெண்கள் நாள், இன்று காலமாற்றத்திற்கு ஏற்ப பெண்க ளுக்கு ஏற்படுகின்ற பல்வேறுபட்ட சிக்கல்களுக்குத் தீர்வுகாணுமுக மான பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு கைக்கொள்ள ப்படுகின்றது. இப்படியான ஒரு சூழ்நிலையில் பலருக்கு அனைத்துலகப் பெண்கள் நாள் பற்றியும், பெண் விடுதலை பற்றியும், காலத்திற்குக் காலம் பெண்களால் முன்வைக்கப்படுகின் ற கோரிக்கைகள் பற்றியும் பல ஐயங்கள் ஏற்படுவதுண்டு. "உங்களுக்கு இன்னும் என்ன வேண்டும் என்று பெண்விடுதலை பற்றிப் பேசுகி றீர்கள், எழுதுகிறீர்கள்" "நாங்கள் செய்கின்ற எல்லாவற்றையும நீங்கள் செய்கின்றீர்கள் தானே? பின்னரும் பெண் விடுதலை என்று என்ன செய்ய விரும்புகிறீர்கள்? ஆண்களை அடிமைப்படுத்தப் போகின்றீர்களா?" "பெண்கள்தானே பெண்களை ஒடுக்கிறார்கள். பின்னர் ஏன் ஆண்களைக் குற்றம் சாட்டுகின்றீர்கள்?" என்றெல்லாம் பல கேள்விக் கணைகள் பெண்களை நோக்கி அடிக்கடி செலுத்தப்படுவதுண்டு.

இப்படியான அர்த்தமற்ற பல ஐயங்கள் பலரிடமும் இருப்பதால் தான் நாங்கள் எந்நேரமும் பெண் விடுதலை பற்றியும், பெண்களின் அடிப்படை உரிமைகள் பற்றியும் அடிக்கடி பேசவேண்டியிருக்கின்றது, எழுத வேண்டியிருக்கின்றது.

பெண்விடுதலை என்ற கோட்பாட்டை எல்லோரும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டியது முதலில் அவசியமாகிறது. பெண் விடுதலை பற்றிய கருத்துக்கள் வேறுபட்டுக் காணப்படுகின்றது என்பது உண்மையே. ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகளாகிய நாம் பெண் விடுதலைபற்றி ஒரு தெளிவான வரையறையை வைத்துள்ளோம். "ஆண்கள் செய்கின்ற எல்லாவற்றையும் பெண்கள் செய்வதுதான் பெண் விடுதலை என்றோ, அல்லது ஆண்களைப் பெண்கள் அடிமைப்படுத்துவதுதான் பெண்விடுதலை என்றோ நாம் எக்காலத்திலும் கருதவில்லை" பெண்களுக்கும், ஆண்களுக்கும் இடையிலான உறவில் ஏற்படும் ஆழமான புரிந்துணர்வுதான் பெண்விடுதலைக்கு வழிகோலும் என்பதே எமது கொள்கை.

பெண்களின்றி ஆண்கள் தனித்தோ, ஆண்களின்றிப் பெண்கள் தனித்தோ வாழ்வது சாத்தியமில்லாத ஒன்று. பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையில் ஏற்படும் புனிதமான உறவில் தான் வாழ்வு இயக்கமே தங்கியிருக்கின்றது. அப்படியிருக்கும்போது "ஆண்களை அடிமைப்படுத்தவேண்டும் என்ற நோக்கிலா பெண் விடுதலை பற்றிப் பேசுகிறீர்கள்?" என்பது எத்துணை அர்த்தமற்ற கேள்வி. ஒரு இனம் தன் உரிமைகள் கிடைக்கும்வரை போராடியே தீரும் என்பது உலக நடைமுறை. பெண்ணினமும் அப்படித்தான் போராடுகிறார்கள். தம்மீது திணிக்கப்பட்டுள்ள சமூக, அரசியல், பொருளாதார, ஆணாதிக்க அழுத்தங்களிலிருந்து தன்னை முழுமையாக விடுவிக்கும் வரை பெண்ணினம் போராடியே தீரும். ஈழப் பெண்களின் இந்த உரிமைப் போராட்டத்தை எமது இயக்கம் அங்கீகரிக்கின்றது. பெண்களுக்காக எமது இயக்கம் குரல் கொடுக்கின்றது. பெண் விடுதலையை தனது கொள்கைகளுள் ஒன்றாக எமது இயக்கம் வரித்துள்ளது. இந்த மண்ணிலே எதிரிகளால் இழைக்கப்படுகின்ற கொடுமைகளை எதிர்த்துப் போராடுவதற்குப் பெண்களுக்கு உள்ள உரிமையை மதித்து, அவர்களைத்தனது படையணிகளுள் ஒன்றாக இணைத்துள்ளது. பெண்களின் சொத்துரிமையைப் பேணக்கூடிய வகையில், அதே நேரம் சீதன வழக்கை இல்லாதொழிக்கும் நோக்கில் புதிய சட்டங்களும் ஆக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இவை யாவும்

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்...



# நாதஸ்வரக் கலைஞர் பஞ்சாபிகேசனுடன் ஒரு சந்திப்பு



யாழ்ப்பாணத்தின் புகழ்பூத்த நாதஸ்வரக் கலைஞர்களில் இன்றும் குறிப்பிடத் தக்கவராக வாழ்ந்துகொண்டிருப்பவர், முருகப்பா பஞ்சாபிகேசன். தளர்ந்த அகவையிலும் (வயது) நாதஸ்வரக் கலையின்பால் அவர் கொண்டிருக்கும் பற்று வியப்படைய வைக்கும் ஒன்று. சாவகச்சேரியிலுள்ள அவரது இல்லத்தில் அண்மையில் அவரைச் சந்தித்தோம். அவருடன் கலந்துரையாடியவற்றை வாசகர்களுடன் இங்கே பகிர்ந்துகொள்கின்றோம்.

**கேள்வி:** நாதஸ்வரக் கலையின்பால் உங்களுக்கு எப்படி ஆர்வமேற்பட்டது?

**பதில்:** குடும்பப் பின்னணி எனது கலை ஆர்வத்தைத் தூண்டியது. எனது இளமைக் காலத்தில் எனது தாயாரின் சகோதரர்களான சண்முகலிங்கம், அப்புலிங்கம் ஆகியோர் நாதஸ்வரக் கலைஞர்களாக இருந்தனர். இவர்களுடைய கச்சேரிகள் எனக்கு நாதஸ்வரக் கலையின்பால் கூடுதலான ஆர்வத்தைத் தந்தது. பாடசாலை நாட்களிலும் வகுப்பறையில் பாடல்களைப் பாடுவதில் விருப்புடையவனாக இருந்தேன். அடிப்படையில் இசையின் பக்கம் இளமையிலிருந்தே ஆர்வம் இருந்தது.

**கேள்வி:** ஆரம்பகாலப் பயிற்சி பற்றிக் கூறுங்கள்.

**பதில்:** எனது தாயாரின் சகோதரரையே குருவாகக்கொண்டு பயிற்சிபெற்றேன். பின், யாழ்ப்பாணத்திலிருந்து இராமையாபிள்ளையிடம் தீட்சைபெற்று, பயிற்சியைத் தொடர்ந்தேன். இந்த நிலையில், 1938 ஆம் ஆண்டளவில் இந்தியாவுக்குச் சென்று அப்போது புகழ்பெற்றிருந்த கக்காயி என்ற நடராசசிங்கம் என்பவரிடம் பயிற்சியைப்பெற்றேன். அதன்பின்பே இங்குவந்து கச்சேரிகளில் பங்குபற்றினேன்.

**கேள்வி:** உங்களது முதற் கச்சேரியை எப்போது நிகழ்த்தினீர்கள்?

**பதில்:** எனக்கு 16 வயதாக இருந்தபோதே கச்சேரி செய்ய ஆரம்பித்தேன். பருத்தித்துறை கோட்டடிப் பிள்ளையார் கோவிலில் சிவசாமி எனும் சக கலைஞருடன் இணைந்து அக் கச்சேரியை நடத்தினேன். அந்தக் கச்சேரி இன்னும் என்மனதில் பசுமையாக இருந்துவருகின்றது.

**கேள்வி:** சிரேஸ்ட கலைஞர்களுடன் உங்கள் அனுபவங்கள் எப்படி இருந்தன?

**பதில்:** நாதஸ்வரக் கலையின் ஆழம் உணர்ந்தவர்களுடன் வாசிப்பதென்பது ஆரம்பத்தில் கூச்சமாகத்தான் இருந்தது. ஆனால் அவர்களுடன் கச்சேரிகள் செய்தது, நாதஸ்வரக் கலையின் நுட்பங்களை உணர்ந்துகொள்ள உதவியது. சண்முகசுந்தரம்பிள்ளை எனது கலையுணர்வு வளர்ச்சிக்கு இவ்விதத்தில் மிகவும் உதவியாக இருந்தார்.

**கேள்வி:** நாதஸ்வரக் கலையினூடாக தமிழ் உருப்படிகள் வெளிப்படுத்தப்படுவது குறைவாகவே இருந்துவருகின்றது. இதுபற்றி உங்கள் கருத்து என்ன?

**பதில்:** எங்களது ஆரம்பப் பயிற்சி தியாகராஜா சுவாமிகளது தெலுங்குக் கீர்த்தனைகளில் அமைந்துவிடுவதும் இதற்குக் காரணமாகும். எனினும் முத்துத் தாண்டவரின் கீர்த்தனைகள் தமிழில் அமைந்தபின்பு, தமிழ் கீர்த்தனைகள் வாசிக்கப்படுவது அதிகரித்தேவருகின்றது. எந்த உருப்படியும் உயிரோட்டத்துடன் வாசிக்கப்படும்போது, அது ஆத்மாரீதியான இசையில் உருவானதாகவே இருக்கும். இன்று கூடுதலாகத் தமிழில் அமைந்த உருப்படிகள் வாசிக்கப்பட்டுவருவதைக் குறிப்பிட்டாக வேண்டும்.

**கேள்வி:** யாழ்ப்பாணத்தில் இன்று குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய வகையில் நாதஸ்வரக் கலையில் துடிப்புடன் செயலாற்றுபவர்கள் என யாரைக் குறிப்பிடுவீர்கள்?

**பதில்:** இந்தியாவில் நாதஸ்வரக் கலை வளர்ந்ததுபோல் இங்கும் ஒரு சீரான வளர்ச்சியை காணக் கூடியதாகவுள்ளது. பல கலைஞர்கள் காலத்துக்கு காலம் உருவாகியுள்ளார்கள். இங்குமட்டுமல்லாது தென் கிழக்காசிய நாடுகள் பலவற்றிலும் புகழ்பெற்றவர்களாக இவர்கள் உள்ளனர். இன்றைய காலத்தைக் கருதின் எம். ரி பத்மநாதன், கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி, சிதம்பரநாதன் எனப்பலர் இன்று நாதஸ்வரத்தின் உயிர்த்துடிப்பை வெளிக்காட்டக் கூடியவர்களாக உள்ளனர். யாழ்ப்பாண மாவட்டத்தில், அளவெட்டி, சாவகச்சேரி, இணுவில், மாவிட்டபுரம், யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களில் பல நல்ல தரமான கலைஞர்கள் உருவாகியுள்ளனர்.

**கேள்வி:** உங்களைப் பொறுத்தவரை நாதஸ்வரக் கலையின் மரபைக்காக்க வேண்டும் என்ற உணர்வோடு வளர்க்கிறீர்களா? இல்லையேல் தொழில் என்ற அடிப்படையில் மேற்கொள்கிறீர்களா?

**பதில்:** மரபைக் காக்க வேண்டும், கலையினை முழுமையாக உணரவேண்டும் என்பதுதான் அடிப்படையானது. ஆனால் தொழில் என்ற ரீதியிலும் இக் கலையினை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்; தனியே கலை என்பது மாத்திரமல்ல தொழில் என்பதும் இணைந்தது என்பதே உண்மையானது.

**கேள்வி:** நாதஸ்வர உருப்படிகளுக்கு சக்தியுண்டா?R

**பதில்:** நிச்சயமாக எனது அனுபவத்தில் நான் கண்ட உண்மை. இது உளப்பூர்வமாகசாஸ்திரயமாக வாசிக்கும்போது அதற்கு ஒரு சக்தி உண்டு. மேகவராளி வாசிக்கும்போது மழை பெய்யுமென்பது எவ்வளவு தூரம் உண்மையென்பது அது சாஸ்திரியமாக ஆத்ம லயிப்புடன் வாசிக்கப்படும்போதே நிரூபணமாவது. புளியங்குளத்தில் ஒரு மங்கள வைபவமொன்றில் நாகவராளியை நானும் சக கலைஞர் ஒருவரும் வாசித்தபோது, நாகம் ஒன்று அங்கு வந்து படமெடுத்தாடியது எனது அனுபவத்தில் கண்டது.

தமிழீழத்திலிருந்து
பொ.இராஜேஸ்வரன்

**கேள்வி:** நாதஸ்வர உருப்படிகளில் கையாள்பவரின் கற்பனைக்கு இடமுள்ளதா?

**பதில்:** ஆம். வாசிப்பவர்களின் முகபாவனைகளிலிருந்து, கையாள்பவரின் கற்பனை இன்னும் விரிவடையும் இரசிக்க, இரசிக்கவே, எங்களது சுயமான உருவாக்கங்களில் உச்சத்தை தொட முடியும். ஓர் உருப்படியிலிருந்தே, அதனை அனுபவித்து வாசிக்கும்போது புதியவகையில் அதனைக் கையாளவும் வாய்ப்புக் கிடைக்கும்.

**கேள்வி:** பெண்களுக்கு நாதஸ்வரக் கலையில் நாட்டமுண்டா?

**பதில்:** ஆம். இங்கும், இந்தியாவிலும் பல பெண் நாதஸ்வரக் கலைஞர்கள் உருவாகியுள்ளனர். இந்தியாவில் மதுரையில் பொன்னாத்தாயி, சுபானி என்னும் இஸ்லாமியப் பெண் என்பவர்கள் பெண் கலைஞர்களில் பிரபலமானவர்கள். இங்கும் அந்த வரலாறு தொடர்கின்றது. கல்வியங்காட்டில், முத்துலட்சுமி என்ற பெண் கலைஞர் நானறிந்த வகையில் யாழ்ப்பாணத்தில் குறிப்பிடத்தக்கவராக இருக்கிறார். அவரது குடும்பத்திலும் பல பெண் கலைஞர்கள் இன்று உருவாகியுள்ளனர். இவரைவிட நாகேஸ்வரி என்பவரும் குறிப்பிடத்தக்கவர். இது ஒரு சாதனை என்றே கூறலாம். கலை என்ற அமைப்புக்குள் ஆண், பெண் என்ற பேதங்கள் தேவையற்றவை. திறமையுள்ளவர், ஆர்வமுள்ளவர் யாராயிருந்தாலும் வரவேற்கப்படக் கூடியவரே.

**கேள்வி:** உங்களுக்கு பிடித்தமான இராகம்?

**பதில்:** எல்லாமே பிடித்தமானதுதான். எனினும் கல்யாணி இராகம் கூடுதலாக என்னைக் கவர்ந்தது. இராகங்களில் மங்களம், முகாரி என இருந்தாலும், கூடுதலாக மங்களத்தையே எல்லோரும் விரும்புவர். முகாரியை விரும்புவரும் உண்டு. எனவே, இராகங்கள் அனைத்தும் அற்புதமானவைதான் பிடிக்கும் பிடிக்காதென்பது அவரவர் மனநிலையைப் பொறுத்தது என்றே கருதுகின்றேன்.

**கேள்வி:** நாட்டியத்தில் வேறுவேறான பாணிகள் பின்பற்றப்படுவதுபோல் நாதஸ்வரத்திலும் பின்பற்றப்படுவதுண்டா?

**பதில்:** பிரபலமான கலைஞர்கள் தங்களுக்கென ஒவ்வொரு பாணியை உருவாக்கிக் கொள்வார்கள். திருவாவடுதுறை இராசரத்தினம்பிள்ளை, சேக் சின்ன மௌலானா என ஒவ்வொருவருக்கும் தனித்தனியே பாணி உண்டு. இது கடவுள் கொடுக்கும் வரமென்றே எண்ணுகின்றேன். கூடுதலாக இரு சீட முறையில், குருவின் பாதிப்பு அவரது சீட பரம்பரையில் தொடர்வதையும் கவனிக்கலாம். இதைவிட, நாதஸ்வரக் கச்சேரிகளிலும் பலப்பல உண்டு. கெஞ்சிற் கச்சேரிகள் இதற்கு உதாரணம். வழமையான நாதஸ்வரத்திலிருந்து மாறுபட்டு இருக்கும் இந்த வகையான வாசிப்புக்கள் இங்கும் கச்சேரிகளாக செய்யப்படுவதுண்டு. இங்கு ஓசை அடங்கியே வரும் பக்கவாத்தியமாக மிருதங்கம், வயலின் போன்றவையும் இடம்பெறும். ஆறுமுகம் பிள்ளை, நல்லூர் பிச்சையப்பா, எனது மகன் நாகேந்திரன் என்போர் இவ்வாறான கச்சேரிகளை செய்து வருகின்றனர்.

**கேள்வி:** பலகலைஞர்கள் ஒன்றாக வாசிக்கும்போது சிரமங்கள் ஏற்படுவதில்லையா?

**பதில்:** இல்லை, முதலிலேயே இன்னென்ன உருப்படிகளை வாசிக்கப் போகிறோம் என்பது தீர்மானிக்கப்பட்டுவிடும். அனேகமாக, எல்லாக் கலைஞருக்கும், உருப்படிகள் தெரியுமென்பதால் எவ்வித சிக்கலும் எழுவதில்லை.

**கேள்வி:** ஒரு குறிப்பிட்ட வயதிற்குப் பின்னால், நாதஸ்வரம் வாசிப்பதில், கலைஞர்கள் முன்வருவதில்லை, இதற்குக் காரணம் என்ன?

**பதில்:** நாதஸ்வரம் வாசிப்பதற்கு, முக்கியமாக பற்களின் அமைப்பு நன்றாக இருக்க வேண்டும். பல்லுப்போனால் சொல்லும் போச்சு என்பது போல், பற்கள் உறுதியாக இருக்கும்போதேநாதஸ்வரம் வாசிக்கமுடியும். முக்கியமாக முன் வாய்ப்பற்கள் உறுதியாக இருக்க வேண்டும். எனவே குறிப்பிட்ட வயதின் பின்னர் நாதஸ்வரக் கலைஞர்கள் வாசிப்பிலிருந்து ஒதுங்கி விடுகின்றார்கள். எனக்கு இன்று 70 வயதாகிறது. கடவுள் ஆசியால் இன்றுவரை வாசிக்க முடிகின்றது. அதைவிட பொறுமை அவசியம். ஐம்புலன்களும் ஒருமித்து தொழிற்படும்போது சிறப்பான கலை உருவாக முடியும். காரைக்குறிச்சி அருணாசலம்பிள்ளை தொடர்ந்து ஏழு மணித்தியாலங்களுக்கு நாதஸ்வரக் கச்சேரியை நிகழ்த்தியவர். இது உண்மையில் போற்றப்பட வேண்டிய ஒரு விடயம்.

"இறுதியாக எதுவும் கூறப் போகிறீர்களா?" எனக் கேட்டோம். "நாதஸ்வரக் கலை இன்னும் பரவலாக வளர்ச்சியடைய வேண்டும்; எனது கண் முன்னால் இந்த வளர்ச்சி காணப்படவேண்டும். இதுவே எனது விருப்பம்" என உணர்ச்சியோடு கூறி கலந்துரையாடலை முடித்துக் கொண்டார் பஞ்சாபிகேசன். ■

# கண்காணிப்புக் குழுவைக்...

வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் விடுதலைப் புலிகளின் தலைமையைச் சந்திக்க முடியாதிருந்தது. சம்பந்தப்பட்ட இருதரப்பினரையும் மோதல் கண்காணிப்பாளர்கள் சந்திக்க வழிவகுக்கப்படும் என நீங்கள் கூறியிருந்தீர்கள். பல இடையூறுகளின்பின் நீங்கள் கோரிக்கையை ஏற்றதையடுத்து, இப்பிரதிநிதிகளை யாழ்ப்பாணத்தில் சந்தித்துப் பேசக்கூடியதாக இருந்தது. இச்சந்திப்பின்போது, கண்காணிப்புக் குழுவில் அவர்கள் இடம்பெற்றமைக்கு வரவேற்புத் தெரிவித்ததோடு, தாமதமின்றி அவர்கள் பணி தொடங்கப்படவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டோம். எவருடனோ பேசி, வடக்கு – கிழக்குப் பிரச்சினையைத் தீர்க்கலாம் என நினைப்பது சிறுபிள்ளைத்தனமாகும். இந்த நாட்டில் ஒற்றையாட்சி அரசியலமைப்பின்கீழ் தமிழர்களுக்கு விமோசனம் கிடைக்கப்போவதில்லை. சமஸ்டி அரசியலமைப்பு மூலந்தான் அது சாத்தியமாகும் என தந்தை செல்வா அன்றே கூறினார். இன்று நாற்பத்திரண்டு ஆண்டுகளின் பின்புதான், பெரும்பான்மை இனத்தவர் இதை சிந்திக்கத் தொடங்கியுள்ளனர்.

அவர்கள் சிந்திக்கத் தொடங்கினாலும் தங்கள் வசமுள்ள அதிகாரங்களைப் பகிர்ந்துகொடுக்க, அவர்களுக்கு மனம் வரவில்லை. இதன் காரணமாகத்தான் மொழிப் போராட்டமாகத் தொடங்கிய எமது போராட்டம் நாளடைவில் இனப்போராட்டமாக விஸ்வரூபம் எடுத்தது.

அகிம்சைப் போராட்டத்தில் நம்பிக்கை இழந்த தமிழ் இளைஞர்கள், ஆயுதம் ஏந்தினார்கள். இன்று புலிகள் இதனைத்தொடர்ந்து நடத்துகின்றனர். எனவேதான் இன்றைய சூழ்நிலையில் அவர்களோடு பேசித்தான் பிரச்சினையைத் தீர்க்கமுடியும் என நாம் கூறிவருகிறோம். இந்த யதார்த்த நிலையை எல்லோரும் புரிந்துகொள்ளவேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தில் நாங்கள் ஓர் ஆக்கபூர்வமான உந்துசக்தியாக இருக்கமுடியுமே அன்றி, எம்முடன் பேசித்தான் இனப்பிரச்சினையைத் தீர்க்கமுடியும் எனக்கூறுவோமேயானால், அது அரசியல் துரோகத்தனமாகும். இந்த அடிப்படையை முழுமையாக உணர்ந்துதான், அரசு – புலிகள் பேச்சை நாம் ஆதரிக்கின்றோம் என அவர் தெரிவித்தார்.

# குமுறும் உட்கட்சிப்...

இருகட்சிகளும் இவ்வாறு ஒருவர் மற்றவர் காலை வாரிவிடுவதை நோக்காகக்கொண்டு, தொடர்ந்தும் செயற்பட்டால்
சிறீலங்காவில் மூன்றாவது சக்தி என்று பெரிதாக ஒன்றுமில்லாத நிலையில்

மீண்டும் ஓர் ஆயுதக்கிளர்ச்சி ஏற்பட்டாலும் ஆச்சரியப்படத் தேவையில்லை எனக்கருதவேண்டியுள்ளது

தென்னிலங்கை அரசியற் களத்தில் இன்று எழுந்துள்ள பலப்பரீட்சை சந்திரிகா குமாரதுங்காவுக்கும் – ரணில் விக்கிரமசிங்காவுக்கும் இடைப்பட்ட ஒன்றல்ல; உண்மையில் ஜே. ஆர். – சந்திரிகா பலப்பரீட்சையின் விளைவே இன்றைய கால்வாரல்களாகும்.

"தம்பி... இலங்கையிலை தேர்தல் வாக்குறிதியள் எல்லாம் பெரியதொரு சீறுவாணம்போன்றது... அது சீறயுக்கை பாக்கிறதுக்கு அழகாத்தான் இருக்கும்.
சீறிமுடிஞ்சுதெண்டால், மின்னுகின்ற ஒவ்வொன்றும் கரிக்கட்டியாய்த்தான் நிலத்திலை விழும்...
அந்தக் கரிக்கட்டியள் பல்லுத்தீட்டக்கூட உதவாது...!" நடராசர் கூறுகிறார்.




அமர்ந்திருக்கின்றார் நடராசர். விறாந்தையில் நிற்கின்ற கூட்டத்தோடோ, மரத்தடியில் நிற்கின்ற கூட்டத்தோடோ அவர் சேராமல், கிணற்றுக்கட்டிலில் தனியாகவே இருக்கின்றார்.

நடராசர் பத்திரிகைக்காக வரவில்லை; பாண் வாங்குவதற்காவே வந்திருந்தார். அங்குள்ளவர்களின் பேச்சுக்களை அவதானித்தபடி இருக்கின்றார்.

"சம்பள மாற்றமொண்டு வருமெண்டுதான் நினைக்கிறன்..." சந்திரசேனா தன்ரை பிரச்சாரத்திலை கூறினவன்தானே......... ஒவ்வொரு தேர்தலுக்குப் பிறகும் சம்பள மாற்றமொண்டு வாறதுதானே... பெரும்பாலும் வரத்தான்செய்யும்..."

கடந்த இரவு கடும்பனி தூரத்தே இன்னமும் பனிப்புகார் தெரிகின்றது. பனியில் நனைந்த புல், பூண்டுகள் குருத்துச் சரிந்து நிற்கின்றன. வீதிகூட நனைந்து கிடக்கின்றது... வீதியின் மறுகரையில் கடைக்கு நேராக நிற்கின்ற அலரி மரத்தின் இலைகளிலிருந்து, முழுகிய பின் துவட்டியும் துவட்டாத நிலையிலுள்ள பெண்ணின் தலைமயிரின் நுனியிலிருந்து நீர்ச்சொட்டுக்கள் சிந்துவதுபோல், பனித்துளிகள் சிந்திக்கொண்டிருக்கின்றன...



"சந்திரசேனா வெல்லுவனெண்டு தெரியும். ஆனால் இவ்வளவு தொகையாலை வெல்லுவனெண்டு ஒருதரும் நினைக்கையில்லை..." மரத்தடியில் குழுமி நின்றவர்களில் ஒருவர் கூறுகிறார், நேற்றைக்கு முதல் நாள் நடந்த தேர்தலின் முடிவுபற்றி கடந்த இரவுச்செய்தியில் கூறப்பட்டுவிட்டது.

"நான் போனகிழமை கொழும்பிலை நிண்டனான்... சந்திரசேனாவின்ரை தேர்தல் பிரசாரக் கூட்டமொண்டுக்கு போனனான்... சகல விசயங்களையும் துணிவோடை பேசினான்..." இன்னொருவர் கூறுகிறார்.

சந்திரசேனாவின் வெற்றி பற்றியும் இத்தேர்தலில் தோறறுப்போன சிறீவர்த்தனா பற்றியும் அவர்களின் அரசியல் போக்குகள் பற்றியும் வெகுவாகப் பிரஸ்தாபிக்கப்படுகின்றன.

அந்த மரத்தடியிலும் கடை விறாந்தையிலும் கிட்டத்தட்ட முப்பதுக்கும் மேலானவர்கள் நிற்கின்றனர். அத்தனைபேரும் இன்றைய பத்திரிகைக்காகக் காத்து நிற்கின்றனர்.

வீதியின் வலதுபக்கமாகக் கடை அமைந்திருக்கின்றது.

"இவன்ரை ஆட்சியிலையாவது தமிழாக்களுக்கு ஒரு முடிவு வந்ததெண்டால்... எத்தினை காலத்துக்கெண்டுதான் இப்படிச் சீரழியிறது..." ஒருவர் தனது மனக்கொதிப்பைக் கூறிக்கொள்கிறார்.

"ஏன் தம்பி... கொழும்பிலை ஏதாலும் கலவரம் நடந்ததாமே" அப்போதுதான் அங்கு வந்த ஒருவர் கேட்கிறார்.

"பேப்பர் என்னும் வரயில்லைப்பாருங்கோ. ஏதாவது நடந்திருந்தால்... பேப்பரிலை வரும்".

"என்னும் பேப்பர் வரயில்லையே..." இப்படிக் கூறியவர் திரும்பிக் கடைவாசலைப் பார்க்கின்றார். அவரது கண்கள் மூர்த்தியைத் தேடுகின்றன.

கடை பூட்டப்பட்டிருக்கின்றது. அந்தச் சிறிய விறாந்தையின் தொங்கலில், பின்னுக்குக் கைகட்டியபடி மூர்த்தி நிற்கிறார். அவரது பார்வைக்கோடுகள் வீதியில் நீண்டிருக்கின்றது. அவர்தான் இந்தக்கடையின் ஒரே ஊழியன்.

ஆறுமணிக்கு முன்பின்னாகப் பத்திரிகைக்காரர்களும் பாண்காரர்களும் வருவார்கள்.

"இந்தக் குளிரையும் பொருட்படுத்தாமல், தேர்தல் முடிவுகளை அறிகின்ற ஆவல் அவர்களுக்கு..."

"இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வுதான் ஒரேவழி... நானே வடபகுதிக்குச்சென்று பேச்சுவார்த்தை நடத்துவேன்... எண்டு சந்திரசேனா கூறியிருக்கிறான்... எனி என்ன செய்யப்போறான்... வரத்தானே வேணும்...

சைக்கிளில் வந்து, காலால் பெருவிரலை நிலத்தில் ஊன்றியபடி நின்று, சாமியார் கூறுகிறார்.

"..தமிழர்கள் நாய்கள் எண்டு சொன்னவை இப்ப... தமிழர்கள் புலிகள்... எண்டு சொல்ற அளவுக்கு வந்திட்டினம்... அப்ப எங்கடை ஆக்களெல்லாம் நாயள்மாதிரி அடியும் உதையும் வாங்கிச்சுதுகள்... இப்ப உள்ளதுகள் புலியள்... தேடிவரத்தானே வேணும்..."

"என்ன இருந்தாலும் சந்திரசேனா தகுதியானவன்; அவன் எங்கடை பிரச்சினையைத் தீர்க்கத்தான் பாப்பான்..." சாமியார் திட்டவட்டமாகக் கூறுகிறார்.

"கிணற்றுக்கட்டிலிருந்து நடராசர் தலையை நிமிர்த்திச் சாமியாரைப் பார்க்கின்றார்... உதடுகள் பிரியாதநிலையில் மொட்டானதொரு சிரிப்பொன்று உதிர்கிறது...

சாமியார் –

'கந்தசாமி' இதுதான் இவரது பிறப்புச் சாட்சிப்பத்திரத்தில் ஒட்டியிருக்கும் பெயர். பெயரைச் சுருக்கிச் சாமியார் என அழைக்கப்படுகின்றார். அரசாங்க சேவையிலிருந்த இவர், பென்சன் வயதுக்கு முன்னரே பென்சன் எடுத்துக்கொண்டவர். சாமியாருக்கிப்போது ஐம்பத்திரண்டு வயது ஆனால் பார்ப்பவர்கள் மிகவும் குறைத்துத்தான் மதிப்பிடுவார்கள். மெல்லியவராக இருந்தாலும் திடகாத்திரமானவர்.

கருங்காலி வைரம்போன்ற உரோமக்கட்டான உடற்கட்டு கம்பளி மயிர்க்கொட்டிபோன்ற மீசை, சிங்கப்பூர்ச் சங்கிலி... எப்போதுமே கலகலப்பாக இருப்பார்... ஊர்விசயங்கள் எதுவானாலும் முன்னிற்பார்...

"அப்பு... இண்டைக்கு இருபத்தைஞ்சு பேப்பர் கூடத்தரச்சொல்லி முதலாளி சொன்னவர்... இருபத்தைஞ்சு பேப்பர் கூடவைச்சிருக்கு எண்ணி எடுங்கோ" அங்கு வந்த பத்திரிகைக்காரன் இப்படிக் கூறிவிட்டு, ஒரு பத்திரிகைக்கட்டை மூர்த்தியிடம் கொடுத்துவிட்டு, அங்கிருந்து செல்கிறான்.

மூர்த்தி அவசர அவசரமாகப் பத்திரிகைக்கட்டை அறுத்துப் பத்திரிகையை எண்ணுகின்றார். இரவல் பத்திரிகை பார்ப்பதற்கும் தேர்தல் புதினங்கள் பொறுக்குவதற்கும் வந்தவர்கள் நிற்க, பத்திரிகை வாங்கவந்தவர்கள் மூர்த்தியைச் சூழ்ந்துகொள்கின்றனர்.

இரண்டாவது பத்திரிகைக்காரனும் வந்து, பத்திரிகைக்கட்டைப் போட்டுவிட்டுச் செல்கிறான். அந்தப் பத்திரிகைக்கட்டையும் அறுத்துப், பத்திரிகைகளை எண்ணுகின்றார் மூர்த்தி.

"அப்பு கெதியாய் எண்ணிமுடியுங்கோ..."

"அப்பு நான் எண்ணட்டே..."

"அவசரப்படுத்தாதையுங்கோ... வயதுபோன காலம்... ஆறுதலாய் எண்ணட்டும்..." அக்கூட்டத்தில் முன்னணியில் நின்ற சாமியார் கூறுகிறார்.

முதலாளி கடைக்கு வந்து, கடையைத் திறந்து, வியாபாரத்தை ஆரம்பிக்க ஏழரை மணிக்கு மேலாகிவிடும். அதற்கிடையில் பத்திரிகை வியாபாரத்தையும் பாண் வியாபாரத்தையும் மூர்த்தி முடித்துவிடுவார். மூர்த்தி வயதுபோனவரெண்டாலும் மிகவும் சுறுசுறுப்பானவர். அதுமட்டுமல்ல, மிகவும் நேர்மையானவர் என்று சத்தியம் பண்ணிக்கூறலாம்.

பத்திரிகைக்காக முண்டியடித்துக்கொண்டு நிற்பவர்களைக் கிணற்றுக்கட்டில் இருந்தபடியே நடராசர் பார்க்கின்றார்...

முன்பு பார்த்த அதே பார்வை...

அதே மொட்டான சிரிப்பு...

"அப்பு பேப்பரைத் தாருங்கோ..."

"அப்பு எனக்குமொண்டு..."

முதல் பத்திரிகையைச் சாமியார் வாங்கிக்கொள்கிறார். பத்திரிகையும் காசும் கைமாறிக்கொண்டிருக்கின்றன. பத்திரிகையை வாங்கியவர்கள் திரும்பவும் அந்த மரத்தடிக்கு வருகின்றனர்.

பிரதான வீதி, வீதியிலிருந்து வலதுபக்கமாக ஒரு கல்லுறோட்டு, இடப்பக்கமாக ஒரு மண் ஒழுங்கை, "நாற்சந்தி" என்று கூறுமளவுக்குப் பிரபலமான இடமிது. இச்சந்தியில் வலதுபக்கமாக இக்கடை அமைந்திருக்கின்றது. கடைக்கு முன்னால் ஒரு மருதமரம்; இது சாதாரண மரமல்ல; கிட்டத்தட்ட அரை நூற்றாண்டுக் காலத்தை உள்ளடக்கிய மரம். இந்த மரத்தடியில் மிகவும் அழகானதொரு கோவில் அமைந்திருக்கின்றது.

இந்த மருதமரத்தின் கீழ்த்தான் சகலரும் நிற்கின்றனர்.


"கொழும்புத் தமிழர்... மலையகத் தமிழர்... பொதுவாக சந்திரசேனாவைத்தான் ஆதரிச்சிருக்குதுகள்..." தமிழ்ப்பிரதேச வாக்குகளை அவதானித்த சாமியார் கூறுகிறார்.

"அப்பு நான்தான் முதல் வந்தனான்... எனக்குப்பிறகு வந்தவையெல்லாம் பேப்பர் வாங்கிப்போட்டினம்..."

ஒருவர் குறைபட்டுக்கொள்கிறார்.

"இந்தத் தேர்தல் முடிவுகளைப் பார்த்து என்னதான் செய்யப்போறியளோ... மூர்த்தி கூறுகிறார்; அதுவும் உரக்கக் கூறுகின்றார். அவரது பேச்சு நடராசரின் காதுகளுக்கும்

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்...



இடதுபக்கமாக ஒரு கிணறு அமைந்திருக்கின்றது. கிணற்றுக்கட்டிலில் கால்களைத் தொங்கப்போட்டபடி

இருளும் ஒளியும் சமர்புரிந்து, இருளைப் புறங் காட்டி ஒளிக்கதிர்கள் பூமியைத் தழுவத் துடிக்கின்ற நேரம்... அதிகாலை...

# நிலக்கீழ் நீரின் சேமிப்பை அதிகரிப்பது யாழ். குடாநாட்டின் முக்கிய தேவை

எமது தமிழீழத்தின் எந்தவொரு வளமும் பயனற்றவை அல்ல. அன்று காலனித்துவ நாடுகளின் ஆக்கிரமிப்புகள் சிறீலங்காவின் திட்டங்களையும் முயற்சிகளையும் மழுங்கடித்த காலகட்டம் வேறானது. ஆனால் இன்று அதாவது எமது சுதந்திரப் போராட்டம் தொடக்கப்பட காரணமான சிறீலங்கா ஆக்கிரமிப்புக்கள், அடக்குமுறைகள் எல்லாமே மிகத் தீவிரமாக முன்னெடுக்கப்பட்ட காலகட்டத்தில் எமது விழிப்புணர்வும் வீறுடன் எழுந்தது. இந்த அடக்குமுறைகளில் ஒன்றுதான் பொருண்மியத் தடை. ஆனால் இத்தடை, வளங்கள் அற்ற பிரதேசத்தைத் தான் கட்டுப்படுத்த உகந்ததே தவிர, எமது தமிழீழத்தைக் கட்டுப்படுத்தக் கூடியதல்ல.

இந்நிலையில்தான் 'தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்' சுயமாக தற்சார்புப் பொருண்மியத்தில் வாழ எதிர்பார்ப்புடன் இருந்த மக்களுக்கு அத்திவாரமாக அமைந்தது. அதன் செயற்பாடுகளும் முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கும் கைகொடுத்து உறுதுணையாக நிற்பவை தமிழீழ வளங்களே. எனவே காலாகாலமாக எமது தற்சார்புப் பொருண்மியத்திற்கு உந்துசக்தியாக இருக்கின்ற வளங்கள் பாதுகாக்கப்படுவதுடன், சிக்கனமாகவும் பாவனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

அந்த வகையிலேயே தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன உட்கட்டுமானப் பகுதியின் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இம்முயற்சிகளில் ஒன்றுதான் நீர்வள பாதுகாப்பாகும். இந்த நீர்வளப் பாதுகாப்பு முயற்சிகள் 1991 ஆம் ஆண்டிலிருந்து தொடங்கி இன்றுவரை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால், தற்பொழுது நீர்வளப் பாதுகாப்பு முயற்சிகள் தீவிரமடைந்து செல்கின்றமைதான். இம்முயற்சிகளில்தான் துரித நீர்வள மேம்பாட்டுத் திட்டங்களும் உள்ளடக்கப்படும்.

நீர்வளப் பாதுகாப்பில் பல்வேறு முயற்சிகளும் செயற்பாடுகளும் அடங்கும். முதலில் நீர் வளத்தை பாதுகாக்க வேண்டுமெனின் அந்நீர்வளத்தைக் கொண்டிருக்கின்ற நீர்நிலைகள் பராமரிக்கப்பட வேண்டும். இவை சிறந்த முறையிலே பராமரிக்கப்பட்டாலே குறிக்கப்பட்ட காலகட்டத்தில் கிடைக்கின்ற மழைநீரைச் சேமித்து வைக்க முடியும். இந்நீர்நிலைகளைப் பராமரித்தல் என்கின்றபோது யாழ். குடாவைப் பொறுத்தவரையிலே குறைவாக உள்ளது. ஏனெனில் இங்கு நீர்நிலைகள் அதாவது தரைமேல் நீர்நிலைகள் என்பது சிறியளவாகத்தான் காணப்படுகின்றது. ஆனால் இந் நீர்நிலைகளைப் பராமரிப்பது சிரமம் அற்றதாக, சிறியதாக இருந்தாலும் இன்னுமொரு பாரிய வேலை காத்துக் கிடக்கின்றது.

அந்தவகையிலே யாழ். குடாநாட்டிலே மேற்கொள்ளவேண்டிய பாரிய வேலையானது நிலக்கீழ் நீரின் சேமிப்பை அதிகரிப்பதாகும். அத்துடன், உவர்நீரின் ஊடுருவல் எமது பிரதேசத்தில் அதிகளவில் நடைபெறும் முன்னர் நாம் நன்னீர் வளத்தை பாதுகாக்கவேண்டும். இதனால் மழை கிடைக்கின்ற காலங்களில் மழைநீர் கடலைச் சென்றடைவதைத் தடுத்து, நிலக்கீழ் நீரை சேமிக்க முயற்சிகளைத் தொடரவேண்டும். இம்முயற்சியால் எமக்குத் தேவையான நன்னீர் வளத்தை சேமிக்க முடிவதோடு, உவர்நீர் ஊடுருவுவதையும் தவிர்க்க முடியும்.

மேலும் வன்னிப் பெருநிலப்பரப்பைப் பொறுத்தவரையிலே இதன் புவியியல் அமைப்பு யாழ். குடாவைவிட வித்தியாசமானது. இங்கு யாழ். குடாவைப் போன்று நிலக்கீழ் நீரைத்தான் சேமித்து வைக்க வேண்டும் என்பதல்ல. இங்கு நிலத்தின் மேல் பெரும்பாலான நீர்த்தேக்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. எனவே இங்கு தொடரும் முயற்சிகள் என்கின்ற போது மழை நீரை எவ்வளவுக்கு எவ்வளவு தேக்கிவைக்கமுடியும் என்பதிலே நீர்வள பாதுகாப்பு முயற்சிகள் தொடர்கின்றன. இவ்வாறான முயற்சிகளே வன்னிப் பெருநிலப் பரப்பில் 1991 ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

அந்த வகையிலேயே தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன உட்கட்டுமானப் பகுதியால் நீர்வளங்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. அன்றைய காலகட்டங்களில் சிறீலங்கா அரசு தமது பிரதேசத்தின் நலன்களை மாத்திரம் கவனத்தில் கொண்டு துரித மகாவலி அபிவிருத்தி, விக்டோரியா, ரந்தனிகல என பல முன்னேற்றகரமான திட்டங்களை முன்வைத்து மேற்கொண்டது. ஆனால் எமது தமிழீழப் பிரதேசத்தின் நலன்களைக் கவனத்தில் கொண்டு எமது பிரதேசத்தில் எந்தவிதமான முன்னேற்றகரமான திட்டங்களும் மேற்கொள்ளப்படவில்லை. இன்று சுயசார்புப் பொருண்மியம் என்பதில் முன்னேறிக் கொண்டு இருக்கின்ற தமிழீழத்தில் துரிதநீர்வள மேம்பாட்டுத்திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது எமது நீர்வளங்களைப் பாதுகாக்கின்ற செயற்பாடுகளாகவும் முயற்சிகளாகவும் அமைகின்றது. ■

# ஆழமாகப் புரிந்து ...

பெண்களின் உரிமைகளை உயர்நிலையில் பேணுவதற்காக எமது இயக்கத்தால் எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளே ஆகும்.

இந்நேரம் "பெண்களைப் பெண்கள்தானே ஒடுக்குகின்றார்கள். பின் எதற்காக ஆணாதிக்கம் என்கிறீர்கள்?" என்று கேட்பவர்களுக்கு ஒரு விடயத்தைக் கூற விரும்புகின்றோம்.

'பெண்களைவிட ஆண்கள் உயர்ந்தவர்கள் என்பது ஆணாதிக்கக் கருத்து ஆகும். இக்கருத்தை உடையவர்கள் பெண்களாயிருந்தாலென்ன, ஆண்களாயிருந்தாலென்ன அவர்கள் ஆணாதிக்க வாதிகள்தான். ஆணாதிக்கக் கருத்துக்கள் ஆண்களிடம் மட்டுமல்ல பெண்களிடமும் இருக்கிறது என்பது உண்மைதான். ஆனால் நாம் 'ஆணாதிக்கக் கருத்துலகத்திற்கு' எதிராக போராடுகின்றோமே தவிர, ஆண்களுக்கு எதிராக அல்ல. ஆணாதிக்கக் கருத்துலக மாயைக்குள் சிக்கியிருக்கும் பெண்களையும் ஆண்களையும் அதிலிருந்து விடுவிக்க விரும்புகின்றோம்.

பெண்களும் ஆண்களும் ஒருவரையொருவர் ஆழமாகப் புரிந்து கொண்டு, விட்டுக்கொடுத்து வாழ்வதுதான் பெண்ணின விடிவுக்கு வழிகோலும் என்பதையே நாம் அழுத்திக் கூறவிரும்புகின்றோம்.

–விடுதலைப் புலிகளின் மகளிர் அமைப்பு–

# தமிழீழப் பெண்களும்..

கடுமையான பொருண்மியத் தடையினால், கர்ப்பிணித் தாய்மார்கள், குழந்தைகள் உணவு, மருத்துவ வசதியின்மையினால் எதிர்நோக்கி வரும் அல்லல் போன்ற கொடுமைகளையும் எதிர்த்து போராட வேண்டிய நிலையில் இருக்கின்றார்கள்.

தேசிய ஒடுக்கு முறைகளை எதிர்த்து களத்தில் நிற்க வேண்டியதன் இன்றியமையாமையை உணர்ந்து கொண்ட தமிழீழப் பெண்கள் பலர் தேசிய விடுதலைப் போராட்டத்தை நடத்தும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தம்மை இணைத்துக் கொண்டு தேசிய விடுதலைப் போராட்டத்தில் தாம் பெறும் வெற்றிகளினூடே பெண்ணினத்துக்கு எதிராகச் செயற்படும் சக்திகளை எதிர்கொள்ளும் ஆற்றல் வாய்ந்த உன்னத நிலையில் இன்று செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இதுவரை தமிழ் மக்களை ஆயிரக்கணக்கில் கொன்று குவித்து, தமிழ் நிலத்தை ஆக்கிரமித்து, ஏராளமான தமிழ் பெண்கள் மீது பாலியல் வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிட்டு வந்த சிங்களப் படைகளை, இன்று தமிழீழப் பெண்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்திலும், விடுதலைப் போராட்டத்திலும் தம்மை இணைத்துக் கொண்டதன் மூலம் நேரடியாகக் களத்தில் எதிர்கொண்டு தகுந்த பதிலடி கொடுத்து வருகின்றனர்.

ஆயினும், பெரும்பாலான பெண்கள் பெண்ணொடுக்கு முறைகள் பற்றியோ, அவற்றிலிருந்து விடுபடுவதற்கான வழிவகைகள் பற்றியோ, எதுவித எண்ணப்பாடுமற்றவர்களாகவே இருக்கின்றனர்.

சீதனச் சிக்கல், கல்வி, தொழில், பொருண்மியப் புறக்கணிப்பு, கைவிடப்படல், மறுமணமறுப்பு எனப் பெண்கள் எதிர்நோக்குகின்ற ஒடுக்குமுறைகள் எமது சமுதாயத்தில் இன்னும் குறைந்தபாடில்லை.

கலை இலக்கியம் என்ற போர்வையில் இழிவுபடுத்தப்படுதல் ஒருபுறம்.

மதம், மரபு, சரித்திரம், சடங்கு என்ற பழமைவாதிகளால் ஒடுக்கப்படுதல் மறுபுறம்.

கோடரிக்காம்புகள் போன்ற பெண்களே பெண்விடுதலைக்கு, பெண்கள் நலன்களுக்கு எதிராகச் செயற்படும் கொடுமை இன்னொருபுறம். தமிழீழப் பெண்களை வாட்டுகின்ற ஒடுக்கு முறைகளாக இருக்கின்றன.

சாதியத்திற்குப் பலியாகின்றவர்களே சாதியத்தை மரபென மதித்து பேணும் அறியாமையாலெழுந்த அவல நிலைபோல,

இன விடுதலைக்கு எம்மினத்தவர்களே கருங்காலிகளாக இருந்து தடைக் கற்களாகச் செயற்படுவது போல,

பெண்விடுதலைக்கு எதிரிகளாகச் செயற்பட்டுவரும் பெண்களின் அறியாமையைப் போக்கும் முயற்சியில் ஈடுபடுவதுதான் பெண்ணொடுக்கு முறைக்கெதிராக மேற்கொள்ளப்படவேண்டிய முதல் நடவடிக்கையாகும்.

தேசிய விடுதலைப் போராட்டத்தைச் சிறப்புற முன்னெடுத்துச் செல்வதைப் போன்றே, பெண்ணொடுக்கு முறைக்கெதிராக பெண் விடுதலைப் போராட்டத்தையும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் முன்னெடுத்து வருகின்றது. படிக்காத நிலையிலும், படித்துவிட்டும், இதுவரை சமயலறையில் அகப்பையையும், உலக்கையையும் ஏந்திக் கொண்டிருந்த பெண்கள் இன்று ஆயுதமேந்தி களத்திலே நிற்கின்ற நிலை உருவாகியிருக்கின்றது.

விடுதலைப் புலிகள் மகளிர் அணியினர், தலைவர் பிரபாகரன் அவர்களது சீரிய வழிகாட்டுதலினால் தேசிய விடுதலையுடன், பெண் விடுதலையும், சமகாலத்தில் மலரக் கூடிய வகையில் வேலைத்திட்டங்கள் அமைத்து செயற்பட்டுவருகின்றனர்.

தேசிய இன ஒடுக்குதலை மேற்கொள்ளும் இன எதிரிகளை களத்தில் நேரடியாகச் சந்தித்து வரும் பெண்கள் அணியினர், அது போலவே பெண்ணொடுக்கு முறையாளர்களையும் எதிர்கொண்டு, அவர்களைத் தட்டிக் கேட்கும் அளவிற்கு ஆற்றல் வாய்ந்த அமைப்பாக வளர்ந்திருக்கிறார்கள்.

□□வீரம் ஆண்மையின் சின்னம், அச்சமும் அடக்கமும்தான் பெண்களுக்கு அணிகலன்□□ என்று கூறி பெண்களை இனிமேலும் ஏமாற்றி அடக்கி வைத்துவிட முடியாது. தமிழீழப் பெண்கள் விழிப்படைந்து விட்டார்கள். ஆண்கள் உயர்ந்தவர்கள், பெண்கள் தாழ்ந்தவர்கள் என்ற நிலையை மாற்றி, பெண்களும் ஆண்களும் ஒத்த உரிமையுள்ள சமுதாயமாக எமது சமுதாயத்தை ஆக்குவதற்கான வேலைத்திட்டங்களை மகளிர் முன்னணி வகுத்து வருகிறது.

ஜான்சிராணி, லட்சுமிபாயிலிருந்து சரோஜினி நாயுடு, வீரமங்கை கல்பனா எனப்பல ஆயிரக்கணக்கான பெண்களின் பங்களிப்பையும், ஈகங்களையும் விடுதலைப் போரின் போது விழுங்கிய பாரத நாடு போன்று, விடுதலை பெற்றதின் பின்னர் அங்கு பெண்கள் ஒடுக்கப்பட்டு வருவது போன்ற நிலைமை தமிழீழத்தில் ஏற்பட முடியாது. தமிழீழ விடுதலையுடன் பெண்கள் விடுதலையும் கிடைக்கக் கூடிய வகையிலேயே செயற்பாடுகள் வகுக்கப்படுகின்றன.

ஆண்களைவிட, மிகுதியான பெண்கள் இன்று விடுதலைப் புலிகள் இயக்கத்தில் அணிதிரண்டு கொண்டு இருக்கின்றார்கள்.

உலக அரங்கில் தமது ஆற்றல்களையும் தியாகங்களையும் வெளிப்படுத்தி, ஆற்றல் மிக்க பெண்கள் படையாக மிளிர்ந்து வரும் விடுதலைப் புலிகளின் மகளிர் அணியினர், அனைத்துலகப் பெண்கள் நாளான மார்ச் 8 ஆம் நாளை மகளிர் எழுச்சி நாளாக அறிவித்துள்ளார்கள்.

தற்போது பெரும்பாலான நாடுகளில், மேல்நாட்டு வர்க்கத்தைச் சேர்ந்த பெண்களாலும், பெண்களை அடக்கி ஒடுக்கும் சர்வாதிகார அரசியல்வாதிகளின் மனைவியராலும் சடங்குகள் போன்று நடத்தப்பட்டு வரும் அனைத்துலகப் பெண்கள் நாள் போலன்றி, விடுதலைப் புலிகளின் மகளிர் அணியினர் அந்நாளை எழுச்சி நாளாக அறிவித்து கொண்டாடுவது சாலப்

தொடர்ச்சி 5 ஆம் பக்கம்...

# கப்டன் வாமன்

## நெடுநாளாக எனது மனதில் கிடந்த இந்த மிகப் பெரிய ஆசை நிறைவேறும் நாள் நெருங்கிவிட்டது

**வா**மன்!

அவனொரு நல்ல மனிதன்.

அதற்கு அப்பால் - எங்களுக்கு ஒரு அற்புதமான நண்பன்.

தனித்த சிலரோடு மட்டுமல்லாமல், பரந்து எல்லாரோடுமே நட்பைப் பேணிய ஒரு சிறந்த பண்பாளன்.

கூட இருந்த அத்தனை பேரிலுமே அன்பு கொண்டிருந்த அதே நேரத்தில், அக்கறையாகவும் இருந்த உற்ற தோழன்.

எந்த நேரமும், ஏதோ ஒரு வகையில் தன்னால், இயன்ற அளவுக்கு எங்களுக்கு உதவிகள் செய்து கொண்டேயிருந்த துணைவன்.

எங்கிருந்து என்ன கதைத்துக்கொண்டிருந்தாலும், கடைசியில் அவன் முடிக்கும் இடங்கள் எப்போதும் இரண்டு விடயங்களைத் தொனிப்பொருளாகக் கொண்டிருக்கும்.

ஒன்று, எங்களை நல்வழிப்படுத்துகிற விதமான நல்ல புத்திமதிகள் -அறிவுறுத்தல்கள் -ஆலோசனைகள்.

அடுத்தது, கரும்புலித் தாக்குதல்கள்; இலக்குகள்; வழிமுறைகள்; உத்திகள்.

"நல்லதான ஒரு வாழ்வைத் தந்தருள்க!" என்று கடவுளிடம் மன்றாடித் திரியும் எங்கள் சமூக வாழ்வியக்கத்துக்குள்ளிருந்துதான் அவனும் புறப்பட்டான்.

ஆனால் -

"நல்லதான ஒரு சாவைத் தந்தருள்க!" என்றுதான், இறைவனின் சன்னிதானங்களில் அவன் இரந்து வேண்டிக் கொண்டு திரிந்தான்.

ஒரு கரும்புலித் தாக்குதல் வாமனின் கனவு!

ஒரு கரும்புலித் தாக்குதலே வாமனது நினைவு!

பகைவனின் நெற்றியில் வெடிக்கும் ஒரு தாகத்தைத் தாங்கியே அவனது சொல், செயல், சிந்திப்பு எல்லாமே.

தளபதிகளுக்கு அலுப்புக் கொடுத்துக் கொடுத்து, ஒரு வழியாக அந்த வாய்ப்பைப் பெற்றபோதும், அவனுக்குரிய சந்தர்ப்பம் சரிப்பட்டு வராமல் இழுபட்டுக்கொண்டே போனபோதுதான் -

கடவுளின் திருப்பாதங்களில்கூட போய் விழுந்து வேண்டத் துவங்கினானாம்.

**சாவும், அழிவும், பட்டினியும், துயரமுமே நாளாந்த வாழ்வாகிப் போன தமிழீழத்தின் தென் பிராந்தியத்திலிருந்து, இழப்புக்களால் உரமேறி வந்தவன்தானே அவன்!**

அதனால்தானாக்கும் - அப்படி ஒரு சுதந்திர வேட்கை அவனுக்குள் இருந்திருக்கின்றது.

இந்தியர் காலம் -

எங்கள் போராட்ட வரலாற்றின் இருண்ட பதிவு.

அதுவரை - தானுண்டு, தன் வீடுண்டு என இருந்தவன் அதன் பிறகு -தனக்கென ஒரு நாடும் உண்டு என்று புலியாகி வந்தான்.

இருபதாண்டுகளுக்கு முன்னால் ஒரு இரவு.

கோயில்போரதீவு கிராமத்தில் ஒரு சின்னக் குடிசை.

தொட்டிலில் ஆடி, "குவா குவா" சத்தத்தோடு கண்சிமிட்டினான் அந்தக் குழந்தை.

ரவிக்குமார் - ஆசையாக அவர்கள் இட்ட திருநாமம்.

அப்பா கந்தசாமி; அம்மா யோகம்மா.

வீட்டில் பூர்வீகச் சொத்து என்று சொல்ல அவர்களிடம் இருந்தது, வறுமை ஒன்றுதான்.

பாவம்.

தன்னந்தனியாக எல்லாப் பாரங்களையும் தலையில் சுமந்தார் தந்தை.

தாயின் மடியில் அழகாய்ச் சிரித்த அந்தக் குழந்தை, தாயக மடியில் தவழ்ந்து, விழுந்து விழுந்து, எழுந்து நிமிர்ந்து உயர்ந்த போது -சலசலத்து ஓடும் அந்த எழிலான அருவிகளில் குதித்து நீராடி மகிழ, அவனுக்கு நேரமிருக்கவில்லை.

பள்ளிக்கு நடந்த பிஞ்சுப் பாதங்கள், மீதி நேரங்களில் -வயலுக்கு நடக்கவேண்டியிருந்தது.

சின்னப் பையன் - மாடாய் உழைத்தான்.

வரம்புகளுக்குள்ளே - வியர்வைச் சகதியில் வறுமை மூழ்க, மெல்ல மெல்ல அவர்கள் உய்யத் துவங்கினார்கள்.

இந்திய நெருக்கடி; அடிவருடிகளின் அநர்த்தங்கள்; நிம்மதி இழந்துபோன வாழ்வு.

திடீரென -

அந்தக் கிராமத்திலிருந்து கொஞ்சம் இளையோரைக் காணவில்லை.

மூதூரின் அடர்ந்த காடு.

நெடித்துச் சடைத்த, தடித்த மரங்களின் கீழ் அவர்கள் களைத்தார்கள்

இந்தியர்கள் வளைத்துத் தாக்கியபோதும், இடம்மாறி இடம்மாறி அதற்குள்ளேயே.

ஓடி.... கயிறேறி.... மூடை தூக்கி.... 'சயிட்றோளில்' வாந்தியெடுத்து, 'குறோள்' இழுத்துப் பிய்ந்த முழங்கையில் இரத்தம் ஒழுக ஒழுக அணிவகுத்து.... அணி நடந்து.... புலிக்கொடியின் கீழ் உறுதிப் பிரமாணம் எடுத்து...

சீரான உணவில்லை, ஒழுங்கான உறக்கமில்லை, தேவையான உடையில்லை, நோயிற்கு மருந்துமில்லை, நிலையாக ஒரு இடமுமில்லை.... ஆனாலும் ஓயாத பயிற்சி.

முடிந்தபோது - தளராத புலிகளாகக் களமாடத் தயாராக உருவாகியிருந்தனர் அவர்கள்.

ரி. 56 உம் கையுமாக வெளியில் வந்தான் வாமன்.

மண்டூர் அவனது முதற்களம்.

இரும்புப் பாலத்தடியில் ஒரு பதுங்கித் தாக்குதல்.

இலக்கு - இந்திய வல்லரசின் ஒரு தரைப்படை ரோந்து அணி.

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலை சிறந்த சேனாதிபதிகளில் ஒருவரும், தென்பிராந்தியத் துணைத் தளபதியுமான லெப்ரினன்ற் கேணல் ரீகன், களத்தில் நின்று வழி நடாத்திய அதிரடி.

நடு வீதியில் -

30 இந்தியச் சிப்பாய்கள் பிணங்களாய்ச் சுருண்டார்கள்.

தென் தமிழீழத்தின் நிகழ்வுகள் பற்றித்தான், எப்போதும் அந்த மைந்தனுக்குப் பெரிய கவலைகள்.

கடற்கரை மணலில் நடந்து கால் நனைக்கிறபோது, பக்கத்தில் நடந்து கதைகள் சொல்லுவான்; சண்டைப் படகின் இயந்திரத்தைப் பழுது பார்க்கிறபோது, அருகில் அமர்ந்து சோகம் சொல்லுவான். 'பிப்ரி கலிபரை' கழற்றித் துப்புரவு செய்கிறபோது, கூட இருந்து துயரம் விவரிப்பான்.

சிதைந்தழிந்து போய்க் கிடக்கும் எங்கள் மண்ணில் அந்த இன்னொரு துருவத்தை, கண்களுக்கு முன்னால் அவன் விவரிப்பான்.

உயிருக்குள் இரத்தம் வடியும்.

"அந்தச் சனங்கள் பாவம் மச்சான்" எனும்போது -

அவனைப் பார்க்கப் பாவமாய் இருக்கும்.

"அங்கையும் நாங்கள் கரும்புலித் தாக்குதல்களைச் செய்யவேண்டும்; அப்பதான் சிங்களவனைக் கலைக்கலாம்"

அவனுக்குள் அது பெரியதொரு ஆசை வேட்கை.

சுகயீனமாக மருத்துவமனையில் படுத்திருந்தவனுக்கு, பூநகரி அடிக்கும் சேதியைச் சொன்னான் பார்க்கப்போன ஒரு நண்பன்.

துள்ளிக் குதித்துக்கொண்டு முகாமிற்கு அன்றே வந்து சேர்ந்து விட்டான் வாமன்.

'ஒப்பறேசன் தவளை'

பாசறையில் படையெடுப்புக்கான தயார்ப்படுத்தல்.

தளபதி குழுக்களை ஒழுங்குபடுத்தியபோது, அமைதியாக நின்று பார்த்துக்கொண்டிருந்தவன் -

தாக்குதல் அணி எதிலும் தான் சேர்க்கப்படாததைக் கண்டதும் இடையில் புகுந்து சண்டை பிடித்தான்.

"தம்பி உனக்கு ஏலாதெண்..." சொல்லி முடிக்க விடாமல் கரைச்சல் தந்தான்.

ஆய்க்கினை தாங்க முடியாமல் அவ்னையும் ஒரு அணியோடு இணைத்தார் தளப்தி.

கனரக ஆயுதப் பிரிவில் அவன்.

பயிற்சிகள்.

மாதிரி உரு இலக்கை அவனது 'லோ' அடி, இம்மியும் பிசகாமல் நொருக்கியபோது -

தலைவர் தோள்களில் தட்டி வாழ்த்தினார்.

இனம்புரியாத தெம்பு.

சரித்திரப் பிரசித்தி பெற்ற அந்த நாள்.

நாகதேவன்துறை நோக்கிய ஒரு நீருடகத் தாக்குதலணியில் வாமன்.

அந்த வரலாற்றுச் சிறப்பான நிலத்தை நோக்கி, எங்கள் வரலாற்றுப் பெருமைமிக்க படையெடுப்பு.

72 மணி நேரத்தின் பின் அங்கிருந்து நாங்கள் வெளியேறிக் கொண்டிருந்தபோது, உலகம் பூநகரி பற்றியும் புலிகளைப் பற்றியுமே பேசிக்கொண்டிருந்தது.

வந்ததன் பின்னர்தான் கரும்புலித் தாக்குதலுக்கான அவனது நச்சரிப்பு உச்சநிலை அடைந்தது.

அண்மைக்காலம்.

அவன் தாக்குதலுக்காகக் காத்திருந்த நாட்கள்.

"இனி மச்சான் பேச்சுவார்த்தை துவங்கப் போகுது, சமாதானம் வரப்போகுது, உனக்கு இடிக்க சந்தர்ப்பம் கிடைக்காது..."

நாங்கள் சுற்றிவர இருந்து அவனைக் கிண்டல் செய்வோம்.

"ஐயோ மச்சான் அப்படியெல்லாம் சொல்லாதேங்கோடா. என்னால தாங்கேலாது" -உண்மையிலேயே வேதனைப்பட்டான்.

**குலுக்கல்முறையில் தெரிவாகிய கரும்புலி வீரர்களுக்குள்ளும் அவன் எடுபடவில்லை. அந்த நேரத்தில் அவனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. காலில் விழாத குறையாகக் கெஞ்சினான்; தானேதான் இடிக்கவேண்டும் எனத் தளபதியிடம் வேண்டினான். அவர்களில் யாருக்குத்தான் மனமில்லை; எல்லாரும் முரண்டு பிடித்தார்கள்; அத்தனை பேரும் "நானே" என்று நின்றார்கள். இந்த அபூர்வம் பூலோகத்தில் புலிகளிடம் மட்டுமே காணக்கூடிய ஆச்சரியம். பிரபாகரனின் பிள்ளைகளிடம் மட்டுமே பார்க்கக்கூடிய அதீத தேசப்பற்றின் வெளிப்பாடு.**

இறுதியில் -

தளபதியின் சொல்லுக்கிணங்க அவனுக்காக விட்டுக் கொடுத்து மற்றவர்கள் ஒதுங்கினார்கள்.

கடற்புலிகளுக்கு வாமன் வந்த புதிதில் -

நீந்துவதிலிருந்து, படகோட்டுவது வரை, அவனுக்கு எல்லாவற்றையும் சொல்லிக் கொடுத்தது லக்ஸ்மன் தான்.

ஆகக்கடைசியாக - சிலாவத்துறைக்கடல் சிலிர்த்த அந்தக் கரும்புலித் தாக்குதலைச் செய்தவரை!



வாமன்!

16 வயதுப் பராயத்தில் ஒரு போராளியாக எழுந்துவந்தபோதும் சரி -

பின்னர் - பகைவனை எதிர்கொண்ட சண்டைகளில் நெருப்பென நின்று களமாடியபோதும் சரி -

இடையில் - தன்னாமுனைச் சண்டையில் 'கால் கஸ்ரோ' செல்லை விட்டதற்காக மாதக்கணக்கில் நின்று சமைக்கையிலும் சரி -

அடுத்து - எதிரியின் நெஞ்சுக்குள் வெடித்து வெல்லச் சந்தர்ப்பம் கேட்டு அழுதுகொண்டு திரிந்த நாட்களிலும் சரி -

எல்லாவற்றுக்கும் மேலாக - தலைவர் பிரபாகரனின் பாதுகாப்பிற்கான அதிசிறப்புப் படையணியில் ஒரு காவல் வீரனாய், அவரது நிழலென நின்றபோதும் சரி -

தேசத்தையும் தலைவரையும், மக்களையும் போராட்டத்தையும் அளவுகடந்து நேசித்த ஓர் உண்மை வீரன் அவன்.

கழுத்தில் கட்டிய 'சயனைட்'டுக்கு எப்போதும் விசுவாசமாகவும், நம்பிக்கையாகவும் வாழ்ந்த விடுதலைப் புலி.

தமிழீழத் தனியரசின் உருவாக்கத்திற்காக இதயசுத்தியோடு உழைத்து வாழ்ந்து, செத்த ஒரு அப்பழுக்கில்லாத போராளி.

கடைசியாகத் தலைவர் வழியனுப்பி வைத்தபோது - அவருக்கென்று வாங்கிப் பத்திரமாக வைத்திருந்த 'ரீ சேட்'ஐ தன் அன்புப் பரிசாக அவருக்கு வழங்கினான்.

அவன் கடைசியாக வரைந்த மடலில் பின்வருமாறு குறிப்பிடுகிறான்:

"நான் அதிஸ்டசாலி என்றுதான் சொல்லவேண்டும். இயக்கத்தில் சேர்ந்த காலத்தில் கணிசமான நாட்கள் நான் தலைவரோடுதான் நின்றேன். தலைவர் எம்மக்களைப் பற்றிச் சொல்லும் ஒவ்வொரு வசனமும் எனது நெஞ்சை உருக்கும். அப்போதெல்லாம், இந்த மக்களுக்காக நான் அளப்பரிய ஒரு தியாகத்தைச் செய்யவேண்டும் என்ற எண்ணந்தான் எனக்குள் வரும்.

நெடுநாளாக எனது மனதில் கிடந்த இந்த மிகப்பெரிய ஆசை நிறைவேறும் நாள் நெருங்கிவிட்டது.

என்னைக் கரும்புலிக்கு அனுப்பும்படி எனது அன்புத் தளபதி சொர்ணம் அண்ணனுக்கு எத்தனையோ கடிதங்கள் எழுதினேன். ஆனால், நான் என் அன்புத் தலைவருக்கு ஒரு கடிதம்கூட எழுதவில்லை. ஏன் என்றால், என்னை வளர்த்த தலைவரோடு நான் இரண்டு ஆண்டுகள் அருகிலேயே வாழ்ந்தேன். அப்போதெல்லாம் நான் பார்த்திருக்கின்றேன்; இரவும் பகலும் தனக்கு வரும் கடிதங்களை வாசித்து முடிக்கவே நேரமில்லாமல் அவர் கஸ்டப்படுவார். அவருக்கு இன்னும் கஸ்டம் கொடுக்க நான் விரும்பவில்லை.

**எனக்கு இருக்கும் கடைசி ஆசை ஒன்றே ஒன்றுதான். எங்கள் தலைவர் பல்லாண்டு காலம் இந்த மண்ணில் எம்மக்களோடு வாழவேண்டும். அப்படி வாழ்ந்தால் -நிச்சயமாக எமது இனத்துக்கு அவர் சுதந்திர தமிழீழத்தைப் பெற்றுக் கொடுப்பார். அந்த அசையாத நம்பிக்கையோடுதான் நான் இப்போது புறப்படுகிறேன்."** ■

# கண்காணிப்புக் குழுவைக்...

உங்களுக்கு எழுதிய கடிதத்தில் கிழக்கில் விடுதலைப் புலிகள் நடமாட்டம் குறித்த எம்நிலைப்பாட்டை குறிப்பிட்டிருந்ததோடு, இது தொடர்பாக இருதரப்பும் கலந்துரையாடி இணக்கம்கண்ட விடயங்களை மோதல் தவிர்ப்பு உடன்படிக்கையின் இணைப்பாகச் சேர்க்கவும் குறிப்பிட்டிருந்தோம். இதன் மூலம் கண்காணிப்புக் குழுக்கள், அப்பணிகளைச் செவ்வனே செய்ய வழிவகுக்க முடியும். முதன்மையாக ஆயுதம்தரித்த போராளிகளின் நகர்வு, கரையோரக் கடற்பகுதியில் நடமாட்டம், மீன்பிடி போன்றவற்றைப் பரிசீலிக்க நீங்கள் முன்வந்தீர்கள். எமது கோரிக்கைகளுக்கு உங்கள் சாதகமற்ற, முறைப்பட்ட பதில்களே கிடைத்தன. இவ்விடயங்கள் தொடர்பாகப் பேச, நான்காம்கட்டப் பேச்சுக்கள் உங்கள் தாமத நடவடிக்கையால் பின்தள்ளப்படுகின்றன. பாதுகாப்புப் படைகளால் பல ஆத்திரமூட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படினும், விடுதலைப் புலிகள் மோதல் தவிர்ப்பை முறையாகக் கடைப்பிடிப்பதை நீங்கள் அறிவீர்கள். மீறல் சம்பவங்கள் என நீங்கள் பட்டியல் இட்டுள்ளமை, தவறான தகவலின் அடிப்படையிலானவை. நாம் இத்துடன், கிழக்கில் பாதுகாப்புப் படையின் மீறல் நடவடிக்கைகளைப் பட்டியல் இட்டு அனுப்புகின்றோம். பாரதூரமான மீறல் என நீங்கள் கூறியிருந்த சம்பவம் தொடர்பாக ஏற்கனவே கேணல் ரத்வத்தவுடன் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது.

இச்சம்பவம் 23.01.1995 இல் மட்டக்களப்பில் கல்குடாவில் இடம்பெற்றுள்ளது. எமது ஏழு போராளிகளுடன் கடற்புலிகள் படகு, இயந்திரக் கோளாறு காரணமாக கல்குடா கரையில் ஒதுங்கியமை இது விபத்தே அன்றி, உடன்படிக்கை மீறல்செயல் அல்ல. இப்படகு இயந்திரத் துப்பாக்கியைக்கொண்டிருந்தது. நீங்கள் கூறியவாறு அதில் பீரங்கி இருக்கவில்லை. எமது போராளிகள் கைதாகி விடுவிக்கப்பட்டபோதும், இரு ஆயுதங்கள், வோக்கி டோக்கி மற்றும் படகுகள் இன்னும் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றன. பறிமுதல் செய்யப்பட்டவற்றை மீளத்தருமாறு நாம் பல தடவைகள் கூறியும், இன்னமும் பயன்தரவில்லை. இது உடன்படிக்கை மீறல் அல்லாமல் விபத்தாக இருப்பதால், ஆயுதங்களையும் வோக்கி டோக்கிகளையும் திருப்பி ஒப்படைக்குமாறு உங்கள் கள அதிகாரிகளைக் கோருமாறு, உங்களைக் கேட்டுக்கொள்கின்றோம். மோதல் தவிர்ப்புக் காலத்தில் ஆயுதங்களைப் பறிமுதல்செய்ய அனுமதிக்கப்படவில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்த ஆயுதங்கள் திருப்பி உடனடியாக ஒப்படைக்கப்படாவிட்டால், இது நட்புறவுச் சூழலைப் பாதிக்கும் என்பதுடன், போர் நிறுத்த உடன்படிக்கையை மீறுவதாகவே நாம் கருதவேண்டியிருக்கும். நித்தம்புவவில் நடைபெற்றதாகக் கூறப்படும் சம்பவத்தில், நாம் சம்பந்தப்படவில்லை என முழுமையாக நிராகரிக்கின்றோம். நீங்கள் அதில் குறிப்பிட்டநபர், விடுதலைப் புலிகளைச் சேர்ந்தவர் அல்ல.

ஜனாதிபதியின் பாதுகாப்புக்கு விடுதலைப் புலிகள் அச்சுறுத்தலாக உள்ளனர் என நீங்கள் கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதைக்கண்டு, நாம் அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைகின்றோம். இது முற்றிலும் ஆதாரமற்ற குற்றச்சாட்டு. கிழக்கில் பாரிய இராணுவ நடவடிக்கைகளுக்காகப் புலிகள் புதிய முகாம்களை அமைப்பதாகவும் ஆட்களைச் சேர்ப்பதாகவும் நீங்கள் குறிப்பிட்டிருந்தமை முற்றிலும் தவறானது. எமது மக்களிடையே தமது பணிகளைச் சுதந்திரமாகச்செய்ய நீங்கள் இணக்கம் தெரிவித்து இருந்தீர்கள். விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள முருங்கனில் சிவில் நிர்வாகத்தை மேற்கொள்வதற்காக ஒரு பொலிஸ் நிலையத்தை நாம் அமைத்தது உண்மையே. அது போர் நிறுத்த மீறல் நடவடிக்கை அல்ல.

மேலும் அரசின் தேவையற்ற தாமத நடவடிக்கையினால்,

தொடர்ச்சி 10 ஆம் பக்கம்...

# விடுதலைப் புலிகள் தலைவர்...

மட்டக்களப்பு நகர பிதாவினால் அளிக்கப்பட்ட வரவேற்பின்போது மட்டக்களப்பில் வைத்துத் தெரிவித்தார். இதற்கு முன்னர் அமெரிக்கத் தூதுவர் மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர், அரச அதிபர், நகர பிதா உட்பட பல அமைப்பின் பிரதிநிதிகளையும் சந்தித்து, இனப்பிரச்சினை விடயம் குறித்தும் இன்றைய அரசு மேற்கொள்ளும் முயற்சிகள் குறித்தும் கலந்துரையாடினார்."

# சிறீலங்காவின்...

அறிக்கை, "பொதுமக்களின் பயன்பாட்டிற்காக யாழ். குடாநாட்டிற்கான சங்குப்பிட்டி, பூநகரிப் பாதைகள் மாசி 25 ஆம் நாள் சனிக்கிழமை காலை 8 மணிமுதல் திறந்துவிடப்பட்டிருக்கின்றது" என்று மட்டும் தெரிவித்து, படைகளின் 500 மீற்றர் பின்வாங்கல் பற்றி எதுவும் தெரிவிக்காது உள்ளது. அத்தடன் ஆனையிறவுப் பாதை திறப்பு பற்றியும் எதுவித தகவலும் இருக்கவில்லை. இதற்கு முன்னர் நடந்த பேச்சுவார்த்தைச் சுற்றுக்களின்போது, பொதுமக்களின் பயன்பாட்டிற்காக பூநகரிப் பாதையைத் திறந்துவிடவேண்டும் எனவும் பொதுமக்களின பாதுகாப்புக்கருதி பூநகரி இராணுவ முகாம் அகற்றப்படவேண்டும் எனவும் விடுதலைப் புலிகள் சிறீலங்கா அரசுப் பிரதிநிதிகளிடம் வலியுறுத்திவந்தனர். ஆனால் சிறீலங்கா அரசோ பூநகரி இராணுவ முகாமை அகற்றமுடியாது என முட்டுக்கட்டை போட்டுவந்த நிலையில், இவ்விவகாரம் இருதரப்பினரும் மேலும் பேசித்தீர்க்கவேண்டிய சர்ச்சைக்குரிய ஒன்றாகத் தொடர்ந்துவந்தது. ஆனால் இருதரப்புப் பேச்சுவாரத்தை என்ற சொல்லின் அர்த்தத்தை வன்முறைப்படுத்தக்கூடிய வகையில், சிறீலங்கா அரசு ஒருதலைப்பட்சக் கருத்துத் திணிப்பை பாதைத்திறப்பு அறிவித்தல் மூலம் அமுல்செய்துள்ளது. இதனால், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைச்செயலகம் இதனை ஒருதலைப்பட்சமான செயற்பாடு என வர்ணித்துள்ளது. அத்துடன் இத்தகைய முயற்சிகள் இருதரப்புப் பேச்சுவார்த்தைக்கான தளத்தைத் தகர்த்து, பேச்சுவார்த்தைக்கு முட்டுக்கட்டையாக மாறக்கூடிய அபாயநிலை எதிர்வுகாட்டப்படுவதையும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதற்கிடையே யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் சிறீலங்கா அரசு மேற்கொள்ளவுள்ள புனர்நிர்மாண வேலைகளுக்கென இருமின்பிறப்பாக்கிகளையும் (யெனரேட்டர்கள்), மின்சாரக்கம்பிகள் மற்றும் மின்சார உபகரணங்களையும் "லங்கா முதித்த" என்னும் கப்பல் மூலம் பருத்தித்துறைத் துறைமுகத்திற்கு அனுப்பியுள்ளதாக சிறீலங்கா அறிவித்துள்ளது.

இதற்கு முன்னதாக வடக்கே மேற்கொள்ளப்படவேண்டிய பணிகள் குறித்து ஆராயவென, கலாநிதி சி. குணசிங்கம் தலைமையில், சமூகவியலாளர் அஜித்ரூபசிங்கா, பொறியிலாளர்கள் எஸ். இராஜேந்திரன், கே. ரூபமூர்த்தி ஆகியோர் அடங்கிய சிறீலங்கா அரச குழுவினர் யாழ்ப்பாணம் சென்று, உடனடியாக நிறைவேற்றவேண்டிய புனரமைப்பு வேலைகள், திட்டமிட்ட அடிப்படையில் நிறைவேற்ற வேண்டிய வேலைகள் என இருபிரிவுகளாக புனரமைப்புப் பணிகளைத் திட்டமிட்டுத் திரும்பினர். இவர்கள் சிறீலங்கா சனாதிபதியால், சிறீலங்கா அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள உயர்மட்டச் செயலணிக்குழுவிடம் தமது அறிக்கையைச் சமர்ப்பித்திருந்தனர். இந்த உயர்மட்டச் செயலணியின் முதலாவது கூட்டத்தில், சிறீலங்கா சனாதிபதியின் செயலாளர் கே. பாலபட்டபெண்டி, நளின் குணரத்தினா, யாழ். மாவட்ட சிறீலங்காவின் அரச அதிபர் கே. பொன்னம்பலம், யாழ். மாநகரசபை ஆணையாளர் எஸ். பாலசிங்கம், கலாநிதி சி. குணசிங்கம், சிறீலங்காப் பாராளுமன்ற உறுப்பினர்களான திலான் பெரேரா, அஜித் பெரேரா, சாலிய திசாநாயக்கா, சாந்த பிரேமரத்னா மற்றும் துறைமுகங்கள் கப்பற்றுறைப் புனர்வாழ்வு அமைச்சகம், மின்சக்தி எரிபொருள் அமைச்சகம், மீன்பிடித்துறை, நீரியியல் வள அமைச்சகம், தொலைத்தொடர்பு அமைச்சகம், வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சகம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் பங்குபற்றினர். இக்கூட்டத்தில் முதலில் யாழ். மாநகரசபை எல்லைக்குள்ளான வீதிகளே செப்பனிடப்படும் எனவும் பின்னர் மற்றைய வீதிகளுக்கு விரிவாக்கப்படும் எனவும் முடிவுசெய்யப்பட்டது. யாழ்ப்பாணத்தில் நாசமாக்கப்பட்ட நூலகத்தை நினைவுச்சின்னமாகப் பேணிக்கொண்டு, புதிய பொதுநூலகம் ஒன்றை அருகில் அமைப்பதெனவும் சேதமாக்கப்பட்ட நூலகத்தின் கட்டிட வரைவமைப்பையொத்த கட்டிட வரைவினை இருவாரத்துள் தயாரிக்குமாறு, நகர அபிவிருத்தி சபை அதிகாரிகள் சபைக்கு உத்தரவிடுவதெனவும் முடிவாகியது.

அத்துடன் வடக்கில் சுழற்சிமுறையிலில்லாத எண்களைஅழுத்தும் தொழில்நுட்பமுள்ள தொலைபேசி அமைப்புக்களை உருவாக்குவதற்கான ஆய்வுகளைத் தொடங்குமாறு தொலைத்தொடர்புத் திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது. யாழ். மாநகரசபை எல்லைக்குள் மின்சாரத்தை விநியோகிப்பதற்குப் புதிய மின்பிறப்பாக்கிகளை வழங்குவதெனவும் முடிவாகியது. யாழ்ப்பாணத்தில் உள்ள மருத்துவமனைகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் போதியளவு மருந்துகளை வழங்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. அத்துடன் நீண்டகாலப் புனரமைப்புக்கான வெளிநாட்டு நிதி வழங்கலுக்கான சாத்தியக்கூறுகளை ஆராயவென மாசி 27 இல் இந்த சனாதிபதி செயலக உயர்மட்ட செயலணிக்குழு உதவி வழங்கும் நாடுகள் மற்றும் அமைப்புக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசுவது எனவும் அப்போது அறிவிக்கப்பட்டது.

ஆயினும் இதன் பின்னர் சிறீலங்கா அரசு இதுவரை இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை அமுலாக்குவதில், அதிகவேகத்தைக் காட்டவில்லை. இருந்தபோதிலும் இதுதொடர்பாக யாழ். குடாநாட்டுடன் சிறீலங்கா அதிகாரிகள் மேற்கொண்ட அனைத்துத் தொடர்புகளுக்கும் விடுதலைப் புலிகள் எதுவித இடையூறுகளும் செய்யவில்லை. மாறாகப் புனரமைப்பு வேலைகளுக்குத் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தனது ஊக்கத்தை வழங்கிவந்தது.

அத்துடன் யாழ். சென்று திரும்பிய கலாநிதி சி. குணசிங்கம் தலைமையிலான குழு, பகலிலும் இரவிலும் மீன்பிடிக்க அனுமதி வழங்கவேண்டியதன் அவசியம், எரிபொருட் தட்டுப்பாட்டைப்போக்க, மட்டுப்படுத்தப்பட்ட அளவில் எரிபொருட்கள் வடக்கே சென்றடையவேண்டியுள்ள உள்ளூர் நிலைமை, தாண்டிக்குளத்தில் தடைநீக்கம் செய்யப்பட்ட பொருட்கள் தாராளமாகச் சென்றடைவதில் காணப்படும் முட்டுக்கட்டைகள் என்பன பற்றி, உயர்மட்ட செயலணிக் குழுவிற்கு விதந்துரைகளையும் வழங்கியிருந்தது. இவைகள் எதுவும் சிறீலங்கா அரசால் அமுலாக்கப்படாதநிலை காணப்படுகின்றது.

உண்மை இப்படி இருக்க, புனர்நிர்மாண வேலைகளை பங்குனி முதலாம் நாள் தாம் தொடங்கப்போவதாகவும் அதற்கு விடுதலைப் புலிகளிடமிருந்து பதில் கிடைக்கவில்லையெனவும் மதிப்பீடு செய்யப்பட்ட புனர்நிர்மாண வேலைகளைப் பார்வையிடுவதற்கு, கொழும்பிலிருந்து யாழ். குடாநாடு செல்ல ஒரு குழு தயாராக நிற்பதாகவும் அதற்கு விடுதலைப் புலிகளிடம் இருந்து அனுமதி கிடைக்கவில்லையெனவும் சிறீலங்கா, செய்திகளை வெளியிட்டுவருகின்றது.

இச்செயற்பாடுகள் மூலம் சிறீலங்கா, மக்களுக்குப் புனர்நிர்மாண, புனர்வாழ்வு அளிக்க விரும்புவதாகவும் அதனை விடுதலைப் புலிகள் தடுத்துவருமாற்போலும் ஒரு போலியான பிரச்சாரத்தை முடுக்கிவிட்டுவருகின்றனர். இவ்விதப் பிரச்சாரங்கள் மூலம் தமிழீழ மக்களையும் விடுதலைப் புலிகளையும் அந்நியப்படுத்தல் எனும் செயற்பாட்டினைச் செய்யலாம் என சிறீலங்கா பகற்கனவு காண்கின்றது. அத்துடன் அனைத்துலக சமூகத்திடம் விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்டுவரும் அளப்பரிய மதிப்பைக் குறைக்கலாம் எனவும் திட்டமிட்டுச் செயற்படுகின்றது.

# விடுதலைப் புலிகளை ...

வெற்றிபெறவேண்டும். இதன்காரணமாகவே அரசு – புலிகள் பேச்சுக்களை நாம் முழுமையாக ஆதரிக்கின்றோம்.

வடக்கு – கிழக்குப் போரின் உண்மைநிலையை உணர்ந்த அரசு, புலிகளுடன் பேச முன்வந்தது வரவேற்கத்தக்கதாகும். எம்மைப்பொறுத்தவரை, வடக்கு – கிழக்குப் போரும் இனப்பிரச்சினையும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்தவையாகும். எனவே போரை முடிவுக்கு கொண்டுவருவதானால், போரில் ஈடுபட்டுள்ள புலிகளுடன்தான் பேசவேண்டும். அதேபோன்று கடந்த நாற்பது ஆண்டுகளாகப் புரையோடிப்போயிருக்கும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டுமானால், முதலில் புலிகளுடன் பேசவேண்டும்.

இதுதான் வடக்கு – கிழக்கின் உண்மையான அரசியல் நிலை.இதைவிட்டுவிட்டு, எம்முடனோ அல்லது வேறு

தொடர்ச்சி 2 ஆம் பக்கம்...

# மேற்கு அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற

## "கதம்ப மாலை"

சென்ற பொங்கல் திருநாளன்று (15.01.1995), மேற்கு அவுஸ்ரேலியாவில் உள்ள அனைத்து தமிழ்ச் சங்கங்களும் இணைந்து, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு நிதிசேகரிக்கும்முகமாக, "கதம்பமாலை" என்ற கலைநிகழ்ச்சி ஒன்றினை ஒழுங்கசெய்து, சிறப்பாக நடத்தியுள்ளன. இந்நிகழ்ச்சியில் ஈழத்தமிழர் சங்கம் (Eelam Tamils Association of W. A.) சிறீலங்கா தமிழ்ச் சங்கம் (Sri Lankan Tamil Association of W. A.) ஆகியன ஒன்றுசேர்ந்து ஓர் உயரிய நோக்கடன் செயற்பட்டன. முதற்கட்ட இக்கூட்டு முயற்சியே வெற்றிகரமாக அமைந்து, 2300 அவுஸ்ரேலிய டொலர்களை தமிழர் புனர்வாழ்வுக்காகச் சேர்க்க முடிந்தமை




பாராட்டுக்குரியது, வரவேற்கத்தக்கது. இவ்வொன்றிணைந்த முயற்சி ஆண்டுதோறும் நடக்க இருப்பதை அறிந்து பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட திருமதி Paula Cristossfamini (Director, Office of Multicultural Interest) அவர்கள் மங்கள விளக்கேற்றிவைக்க, திரு. முத்துக்குமாருடன், திருமதி சாந்தா ஜெயராஜனின் மாணவ, மாணவிகளின் (சிறுவர்கள்) "அருள்ஜோதி தெய்வம்..." என்ற பாடலுடன் இக்கதம்பமாலை நிகழ்வு பிற்பகல 6.45 மணியளவில் தொடங்கியது. திரு. இரத்தினசிங்கம் அவர்களின் வரவேற்புரையைத் தொடர்ந்து, திருமதிகள் ரஞ்சனா புவனேஸ்வரன், சாந்தா ஜெயராஜ், நிரஞ்சனா சுரேசன் ஆகியோர் சேர்ந்து பாடிய இரண்டு கர்நாடக இசைப்பாடல்களும் சிற்பாக அமைந்தன. அடுத்ததாக நடைபெற்ற மூன்று நடன நிகழ்ச்சிகளும் நன்றாக அமைந்து, சபையோறின பாராட்டுதலையும் பெற்றுக்கொண்டன. திருமதி பவானி சிவகுமாரின் மாணவியாகிய சிவதர்சினி சிவகுமாரின் "கலை வாழ மொழி வேண்டும் குமிலே..." என்ற பாடலுக்கான நடனம் தமிழீழத்தின் இன்றைய சூழ்நிலையைப் பிரதிபலிப்பதாக அமைந்தது. தொடர்ந்து




இடம்பெற்ற செல்விகள் பரமேஸ்வரன், சிவதர்சினி சிவகுமார், சரன் செல்வநாயகம் ஆகியோரின் "வேலனைக் காண்போம் வாரீர்..." என்ற பாடலுக்கான நடனம் சிறப்பாக இருந்தது. அடுத்ததாக இடம்பெற்ற திருமதி சாந்தா ஜெயராஜனின் நடன அமைப்பில் உருவான "அஞ்சாத சிங்கம் என் காளை..." என்ற கிராமியப் பாடலுக்கு செல்வி கிரிஜா ஜெயராஜ் ஆடிய நடனம் வெகுசிறப்பாக அமைந்து, சபையோரின் ஏகோபித்த பாராட்டைப் பெற்றுக்கொண்டது.

இடைவேளைக்கு முன்னதாக இடம்பெற்ற "ஏமாளிகள்" என்ற நகைச்சுவை நாடகம் ரசிக்கக்கூடியதாக அமைந்ததோடு, இதில் நடித்த திருமதிகள் வதனி செல்வநாயகம், நளாயினி பாலகுமார், நிரஞ்சனா சுரேசன், ரஞ்சனா பரமேஸ்வரன், சாரதா ராய்ர், திரு. சிவகரன் ராயர் ஆகியோரின் நடிப்பு பாராட்டப்படக்கூடியதாகவும் இருந்தது. இடைவேளையைத் தொடர்ந்து நடைபெற்ற "திரை இசை" நிகழ்ச்சி, இன்னிசை நிகழ்வாக நிறைவுபெற்றது. இதில் பங்கெடுத்த வாத்தியக் கலைஞர்களும், பாடகர்களும் வழங்கிய ஒத்துழைப்புப் பெரிதும் உதவியுள்ளது.

மேற்கு அவுஸ்திரேலியாவில் வாழும் தமிழர்கள் ஒன்றுகூடி, ஒருகாலத்தின் தேவைக்கேற்ப, தாயகக் கடமையுணர்வுடன் உருவாக்கிய இக்கதம்பமாலைக் கலை நிகழ்வு, நம்தமிழீழ மண்ணில் போர்க்கால சூழலுக்கு உறுதியோடு முகம்கொடுத்து, தமது அன்றாட வாழ்க்கையோடு போராடும் மக்களுக்காகப் பாடுபடும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதித்தேவையில் ஒருபகுதியைப் பூர்த்திசெய்ய உதவியதோடு, தமிழ்க் கலை, பண்பாட்டுடன் ஓர் இளைய தலைமுறை உருவாகவும் காரணமாகவும் அமைந்தது.

## ஐக்கிய அமெரிக்காவில் வதியும் தமிழ்ச் சகோதர, சகோதரிகளின் கவனத்திற்கு...!

உலகத்தமிழர் ஒருங்கிணைப்புக்குழு - ஐக்கிய அமெரிக்க அமைப்பானது அண்மையில் தனது செயல் நடவடிக்கைகளில் சில மாறுதல்களை ஏற்படுத்தியுள்ளது.

தமிழர் நலன்கருதி அவர்களுக்கான ஆதரவு குறித்து அன்றேல் வேறு ஏதும் விபரங்கள் வேண்டின் கீழ்க்காணும் முகவரியில் தொடர்புகொள்ளவும். உலகத்தமிழர் செயதித்தாள் ஒலி - ஒளி நாடா வெளியீடுகள் நூற்பிரசுரங்கள் ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ளவும் ஏதுவாக்கப்பட்டுள்ளது.

மேலும் தமிழீழ நிகழ்வுகளைத் தொலைபேசி இணைப்பின் மூலம் செய்திவடிவில் கீழ்வரும் எண்களில் இருந்து தெரிந்துகொள்ளவும் வகைசெய்யப்பட்டுள்ளது.

பொஸ்டன் பகுதி (ஆங்கிலம்) - (617) 639 8125
பொஸ்டன் பகுதி (தமிழ்) - (617) 397 7491
நியூயோர்க் பகுதி (தமிழ்) - (718) 739 1202
நியூயேர்சி பகுதி (தமிழ்) - (201) 997 1297
சிக்காகோ பகுதி (தமிழ்) - (312) 588 1039
கலிபோர்னியாப் பகுதி (தமிழ்) - (408) 244 9473
புளொரிடாப் பகுதி (தமிழ்) - (407) 736 7363

மேலதிக விபரங்களுக்கு: செயலக முகவரி.

WORLD TAMIL COORDINATING COMMITTEE,
SUITE 1L,
170 - 10 CEDARCROFT ROAD,
JAMAICA, NY 11432,
USA.

# சீறுவாணம்...

"அபப போக்குவரத்துப் பிரச்சினை...

"மின்சாரம் தாறதுக்கான ஒழுங்குகள் நடக்கிறது... போக்குவரத்துப் பிரச்சினை தானாய்ச் சரிவரும்... சாமியார் கூறுகிறார்.

"எத்தனை கொடுமையளை அனுபவிச்சுப்போட்டம்... கொஞ்சக்காலமெண்டாலும்... எங்கடை மண்ணிலை வாழ்ந்திட்டுச் சாவம்... எத்தனை ஆயிரம் புள்ளையள் உயிரை விட்டிட்டிதுகள்... அதுக்கெண்டாலும் ஒரு கடவுள் தீர்ப்பு வேணுந்தானே.." ஒருவர் மிகவும் வேதனைப்பட்டுக் கூறிக்கொள்கிறார்.

கிணற்றுக்கட்டிலிருந்த நடராசர் தலையை நிமிர்த்தி, அங்கு நின்றவர்களை பார்க்கின்றார்...

அதேபார்வை...

அதே மொட்டான சிரிப்பு...!

தேவையில்லாமல் புடிபட்டு மறியலிலை இருக்கிற பொடியள்... எத்தினையாயிரம் பொடியள்...'

"அவங்களை இனி விட்டிடுவங்கள்..."

"அப்ப வெளிநாடுகளுக்கு அகதியாய்ப் போனதுகளின்ரை முடிவென்ன..."

அவையளெல்லாம் திரும்பி வரவேண்டித்தான்வரும்; இஞ்சை பிரச்சினையில்லாட்டி வரலாந்தானே..."

நடராசர் தலையைக் குனிந்படி இருக்கின்றார். அவரது செவிப்பறை உணர்வு மட்டும் அங்கு நிற்பவர்களின் மத்தியில் நங்கூரமிட்டு நிற்கின்றது.

மருதமரத்தடியில் நிற்கின்ற அனைவரும் பிரச்சினைகள் தீர்க்கப்பட்ட ஒரு சுதந்திரபூமியில் நிற்கின்ற உணர்வில் நிற்கின்றனர்..."

நடராசரின் மனதில் நடந்துமுடிந்த தேர்தல்கள் படச்சுருளாய் நீண்டுகொண்டிருக்கின்றது...

"எங்கடை ஒடரப் பேப்பரைத் தாருங்கோ..." ஒரு சிறுவன் மூர்த்தியிடம் கேட்கின்றான். மூர்த்தி அந்தச் சிறுவனை உற்றுப்பார்த்து, அவனை இனங்கண்டு, அதன்பின் அவனது தகப்பனை நினைவுபடுத்தி, அதன்பின்தான் பத்திரிகையைக் கொடுக்கின்றார்.

பாண்காரன் வருகின்றான். மூர்த்தி பத்திரிகை வியாபாரத்தை நிறுத்திவிட்டு, பாண்பெட்டியை எடுத்துக்கொண்டு, பாண்காரனைநோக்கி வருகின்றார். பாண்காரன் கடைமதிலோடு சைக்கிளைச் சாத்திவிட்டு, பாணை எண்ண ஆரம்பிக்கின்றான்.

கிணற்றுக்கட்டிலிருந்த நடராசர் அங்கிருந்து வந்து, றோட்டுக்கரையோடு நிற்கின்றார். பாணை வாங்குவதற்காக வந்த இன்னும் சிலர், நடராசரோடு சேர்ந்துகொள்கின்றனர்.

"தமிழரர் பிரச்சினைக்கான முடிவைச் சந்திரசேனா ஏற்கனவே தீர்மானிச்சு வைச்சிருக்கிறான்..." பேச்சுத்தொடர்கிறது.

"ஏன் அப்பிடிச் சொல்லுறியள்..."

"அவன்ரை பேச்சிலிருந்து விளங்கியது..."

"என்ன மாதிரியான முடிவாயிருக்குமெண்டு நினைக்கிறியள்..."

"அதைத்தான் தீர்மானிக்கேலாமல் இருக்கு..."

"சந்திரசேனா சொல்ற முடிவு... எங்களுக்குப் பொருத்தமில்லாட்டி..." இக்கேள்வி அங்கு நின்ற அனைவரையும் குளப்புகின்றது. சாமியார் என்ன பதில் கூறப்போகின்றாரென்று சகலரும் எதிர்பார்க்கின்றனர்...

ஆனால் சாமியார்...? அவரால் எதுவும் கூறமுடியவில்லை...

நடராசர்... அதேபார்வை... அதே மொட்டான சிரிப்பு...

"என்ன நடராசண்ணை உங்கடை அபிப்பிராயத்தைச் சொல்லுங்கோவன்". சாமியார் நடராசரைக் கொழுக்கிபோடடிழுக்கிறார்... நின்றவர்களெல்லோரும் நடராசரைப் பார்க்கின்றனர்...

நடராசரின் பேச்சில் நிதானமிருக்கும் என்பது சகலருக்குந் தெரியும்...

நடராசர் குனிந்து நிலத்தைப் பார்க்கின்றார். இந்த நிலத்தின் சோகவரலாறுகளும்... நடந்துமுடிந்த அனைத்துத் தேர்தல்களும்... முரல்மீன்களாய் அவரது இதயத்தைக் குத்திக்கிழிக்கின்றன...!

"அண்ணை நான் கேக்கிறதென்னெண்டால்... இவ்வளவு பெரிய தியாகங்களைச் செய்துபோட்டு, எங்களுக்குப் பொருத்தமில்லாததொரு முடிவைச் சந்திரசேனா தந்தால்... அதை ஏற்றுக்கொள்ளலாமா... இதைத்தான் நான் கேக்கிறன்...' முதல் சாமியாரிடம் கேள்வி கேட்டவர், இப்போது நடராசருக்குத் தனது கேள்வியை விளக்குகின்றார்...

நடராசர் தலையை நிமிர்த்திக், கேள்வி கேட்டவரைப் பார்க்கின்றார். அனைவரும் நடராசரைப் பார்க்கின்றனர். மூர்த்தி அவர்கூடப் பத்திரிகை வியாபாரத்தை நிறுத்திவிட்டு, நடராசரைப் பார்க்கின்றார்... தூரத்தூர நின்றவர்கள் சிறுகச்சிறுக முன்னேறி, நடராசரை அண்மிக்கின்றனர்...

தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு...
வாலிபர்களை ஆயதம் ஏந்த விடமாட்டேன்...
பொருளாதாரத்தடை நீக்கம்...
போக்குவரத்துப்பாதைத் திறப்பு...
மின்சார வசதி...
சந்திரசேனாவின் தேர்தல் பிரச்சாரங்கள்...

"தம்பி... இலங்கையிலை தேர்தல் பிரச்சாரங்கள் எல்லாம் பெரியதொரு சீறுவாணம்போன்றது... அது சீறயுக்கை பாக்கிறதுக்கு அழகாகத்தான் இருக்கும்... சீறி முடிந்ததெண்டால்... மின்னுகின்ற ஒவ்வொன்றும் கரிக்கட்டியாய்த்தான் நிலத்திலை விழும்... அந்தக் கரிக்கட்டியள் பல்லுத்தீட்டக்கூட உதவாது..." நடராசர் இப்படிக் கூறிவிட்டுப் பாண் வாங்குவதற்காகச் செல்கின்றார்.

அனைவரும் மெளனமாக நிற்கின்றனர்.

# கற்பனைக் குழந்தையைக் கருவினிற் சுமந்து
# பத்தியத்துக்கு உள்ளிப்பூடு தேடுகின்றாய்

உன்முகத்தில்...
ஆயிரம் மத்தாப்பு விரிந்த அழகு.
என்ன நடந்தது?
"தூங்கு மூஞ்சி" மரத்தின் கிளையாய்
சோர்ந்துபோய்க் கிடந்தாயே!
திடீரென உன்னில்
வெளிச்சம் பரவிய விசித்திரம் என்ன?

நேற்றுவரை அலுத்தபடி
காற்றுக்கெதிராய் சைக்கிள் உழக்கினாய்.
இன்று பாட்டுப்பாடியபடி பறக்கின்றாயே
என்ன நடந்தது?

வானத்துத் தேவதை உன்வீட்டுக் கோடிக்குள்
வந்திறங்கினாளா?
ஆட்டுப்பட்டி 'அட்டாளையை' அரக்கும்போது
பூமிக்கடியில் புதையல் கிடைத்ததா?
மண்சட்டியில் அவித்த மரவள்ளிக்கிழங்கு
தங்கக் கட்டியான அதிசயம் நிகழ்ந்ததா?
உனக்கு என்ன நடந்தது?

வானவில்லின் அழகில் வசமிழந்து போனாய்.
நொடிப் பொழுதில் கலைந்து போகும் நூதனத்தில்
உன்னையிழந்து உருகிப் போனாய்.



கற்பனைக் குழந்தையைக்
கருவிற் சுமந்து பத்தியத்துக்கு
உள்ளிப்பூடு தேடுகிறாய்.
நீ குளிக்க நினைக்கும் குளம்
நச்சுப் பொய்கை.
வேட்டியோடு இறங்கினாலும்
அம்மணமாகவே வெளியே வருவாய்.
நூறு விழுக்காடு
சேற்றில் அமிழ்ந்து செத்தே போவாய்.

ஆரோ உடுக்கடிக்க ஆடுகிறாய்.
ஆட்டம் முடியும் போது
உடுக்கடித்தவன்
ஊருக்குப் போய்விடுவான்.
நீ படுக்கையிற் கிடந்தபடி
பழைய கணக்கா
பார்க்கப் போகின்றாய்?

கால் நடையாகக்
'கதிர்காமம்' புறப்பட்டால்
'வெருகலோடு' வீடு திரும்பக் கூடாது.
உச்சிக் கிளையில் சுற்றும்
'மச்சயந்திரத்தை' குறிவைத்து நாணேற்று.
இலக்கு விழும் வரை
எய்து கொண்டேயிரு.
இடையில் வரும் "மாரீச மோகினி" களின்
கடைக்கண் பார்வையில்
கலங்கி விடாதே.
மீண்டும் இருளாத விடியலிற்தான்
உனக்கு நிரந்தர வெளிச்சம்.

புதுவை இரத்தினதுரை


U.T.O
211 Katherine Road
London E6 1BU, UK
T/F 081-470 8593

L.T.T.E
Postbox 47, 7600 Struer
Denmark. Tel/Fax
97-841231

W.T.C.C
Gold Gasse-8, 7000 Chur
SWITZERLAND
Tel/Fax: 077-816609

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F091-611 3179

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel 435 81142 F 435 81191

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo - 1, Norway
Tel 022-191260 F-190114

T.C.C
Groot Hertoginnelaan 106
2517 BL Den Haag, Nederland
Tel 070-346 1963 F-384 0683

T.C.C
Glomminge Grand-29
16362 Spanga, Sweden
Tel 08-7612943


Printed by Observer Group Newspapers.